# யூசுப் சுலைகா

586

எழுதியவர் :

கவிஞர் சாரண பாஸ்கரன்

16689

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

155-156, அங்கப்ப நாயக்கன் தெரு,

சென்னை—1.

உரிமைப் பதிவு.

முதற் பதிப்பு 1—1—57

இரண்டாம் பதிப்பு 25—9—61

106969

விலை ரூ. 2–25

106969

இலங்கையில் கிடைக்குமிடம்:

நவலட்சுமி புக் ஸ்டால்

136, செட்டியார் தெரு, கொழும்பு.

---

யுனிவர்ஸல் பிரிண்டிங் ஹவுஸ்,

155-156, அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

அண்ணுமலைப்பல்கலைக் கழகத் தமிழ்க் கலைத்துறைத் தலைவர்
டாக்டர் அ. சிதம்பர நாதஞ் செட்டியார் எம்.ஏ.பி.எச்.டி.
அன்புடன் அளித்த

# அணிந்துரை

கவிஞர் சாரண பாஸ்கரனுர் தமிழ் மக்களுக்கு முன்னரே அறிமுகமானவர். அவருடைய "சாபத்தாலும்" "இதயக் குமுறலாலும்" மக்கள் அவரை நன்கு அறிந்துளர். இவ்விரு நூல்களாலும், அவருடைய புகைப்படத்தாலும் அவரைச் சீற்றம் உடைய ஒருவர் என்றும், வெகுளிச் சுவையைப் படம் பிடிப்பதில் வல்லுநர் என்றும் நினைத்தவருள் நானும் ஒருவன்.

அவரை நேரிற் கண்டால் எவ்வாறு அவ்வெண்ணத்தை மாற்றிக் கொள்ளுகிருேமோ அவ்வாறே "யூசுப் சுலைகா"வைப் படித்தவுடனும் மாற்றிக்கொள்வோம் என்பதில் ஐயம் இல்லை. அக் கவிஞர் இப்பொழுது வெளியிடும் "யூசுப்–சுலைகா" என்றகாப்பியத்தில்உவகைச் சுவையும் நகைச்சுவையும் நிரம்பியிருக்கக் காண்கிறேன். கனவிற் கண்ட காதலனை அடைய முற்பட்ட சுலைகாவின் பல நிலைகள் இந்நூலில் மிக்க நயத்தோடு காட்டப்பட்டுள்ளன.

கவிஞர் எடுத்தாண்டுள்ள உவமைகள் மிக்க இனிமை பயப்பன. காட்டாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். யாக்கூபின் பேச்சும் மூச்சும் புதல்வன் யூசுபினைப் பற்றியனவாக இருப்பதற்குத் தரப்பட்ட உவமை, "இறையைப் பணியும் நேரத்தே எண்ணம், பார்வை, செய்கையினை ஒருமைப் படுத்தும் முறை" என்பது, காதலன் காரணமாகக் கவல்கின்ற சுலைகாவின் தந்தை, "பொறுமையோடு ஆய்ந்திடுவாய்" எனப் புகல, அவள் "வறுமை கொண்டு உடற்பசியால் வருந்திடுவோர் தம்மை வார்த்தையினுல் தம்பசியைத் தீர்த்திடச் சொல்லாதீர்" எனக் கூறியதாக அமைந்த நயம் நோக்கத்தக்

கது. அவள் கனவில் கண்ட காதலனைக் காணாது ஏங்கித் தவித்து, எதிரே வரும் தந்தையைக்கூட இன்னார் எனத் தெரிந்துகொள்ள மாட்டாதபடித் தடுமாறுகின்றநிலையைக்கண்டு தந்தையாகிய அரசன் அவள் காலுக்குப் பொன் விலங்கு பூட்ட, அவனை நோக்கி அவள் கூறிய உரையின் அழகினைக் காண்டல் வேண்டும். அவள் மனத்தைக் கொள்ளைகொண்ட காதலனைக் கொண்டுவந்து கூட்டுவிக்க முடியவில்லை என்றால், அக்கள்வனை விட்டுவிட்டு உளத்தை இழந்து வாடும் தன்னைப் பூட்டலாமா எனக் கேட்கின்றவள் கூறுவதைப்படித்தலில் இன்பம் இருத்தலால்தான் இத்தகைய பாடல்களைக் கவிகள் என்கிறோம்.

"கொள்ளையடித் திட்டவனைக் கொண்டுவந்து காலில்
    கொடுவிலங்கைப் பூட்டுதற்கு முடியவில்லை என்றால்
கொள்ளைகொடுத் திட்டவளைக் குற்றவாளி போன்று
    கொடியகைதி ஆக்குமுங்கள் நீதியென்ன நீதி?"

என்பன போன்றவற்றைப் படித்துப் பாருங்கள்.

பாரசீகம், உருது, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உள்ள இக்காவியம் அங்குப்பெறாததோர் அழகினை இங்குப் பெறுவதைக் காண்பீர்கள். படித்துப் பாருங்கள்.

அண்ணாமலை நகர்
6—1—57

அ. சிதம்பரநாதன்

ஸத(க்) க(த்)துன், ஜாரியா, மத்ரஸா அல் மத்ரஸதுல், ஜாமிஆ முதலிய கல்வி நிலையங்களின் ஸ்தாபகர், சென்னை தர்பியத்துல் அத்பால் தர்ம சங்கத்தின் ட்ரஸ்டி, மதுரைத் தமிழ்ச்சங்க நிர்வாக சபை வித்வான், அல்ஹாஜ்ஜுல் ஹறமைன், ஹாபிலுல் குர்ஆன்—

மௌலவி சய்யிதுமுகம்மது ஆலிம் புலவர்

அவர்கள் அருளிய

# சாற்றுக் கவி

(கட்டளைக் கலிப்பா)

உலகம் யாவையும் மொன்றெனத் தோன்றிடா
தொளிரு மாறரு ளோர்தனி மாமுதல்
அலகில் சீரமை ஆரண மீதழ
கான மாக்கதை யார்நபி யூசுபு
நலவு சால்சுலை காமண மீற்றுற
நற்ற மிழ்த்தொடர் பான்மிக நல்கினன்
இலக நுண்பொருள் சாரண பாஸ்கர
இளவல் அஹ்மது கூத்தநல் லூரனே.

வேத மெய்ப்பொருள் வேறு படாமலே
விளங்கச் செந்தமிழ்ச் செய்யுட்கி சைந்தவா
றேத மோனைதொ டையடி யாவுமே
ஒருங்க மைத்துள முள்ளக்கு னித்திடும்
காத லின்பங்க னிந்தும லர்ந்ததாய்க்
கவின வோர்தலைக் கைக்கிளை யாகவே
மாத வர்மனை வாழ்வினர்க் கின்பமாய்
வாய்த்த தேயிதின் மாண்பொருள் வாய்மையே!

அன்ப தேயுரு வாகிய வித்திரு
ஆக மந்தனை ஆக்கிடச் செந்தமிழ்
நன்கொ டைபல தந்தச்சி யற்றினன்
நயந்த செந்தமி ழாங்கிலந் தேர்ந்தவை
மன்னு நாற்பயன் மல்கிய நூல்பல
வளர்ப்ப தேஜன்ம லட்சிய மாக்கினேன்
என்பி னூடிறை நாமங்க லந்தருள்
இலங்கு மப்துர்ர ஹீம்பலர்க் கின்பனே.

தொண்டி வாழிவர் தூய்மையு வாய்மையும்
தொகுக்க வேமுடி யர்விறை சந்நிதி
அண்டி யங்க மகிழ்வு மனைத்துமே
ஆதி தன்பிர சன்னமென் றோர்தலும்
கண்ட பேர்களி கூர்ந்தினி தேற்றலும்
கனவி னிற்றிருக் காட்சியில் மூழ்கலும்
விண்டி டற்கரி தாமிவர் மேதகை
மேலும் மேலவன் மேவிட வாழ்கவே!

——

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்

தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்

பேராசிரியர் ஜி. சுப்பிரமணியப்பிள்ளை எம். ஏ. பி. எல்.

அவர்கள் அன்புடனளித்த

# சிறப்புரை

அமிழ்தூறும் தீங்கவி பாடும் கவிஞர் சாரண பாஸ்கரனாரைத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறியும். இன்று அவர்கள் தமிழ் அன்னைக்கு 'யூசுப்—சுலைகா' என்னும் புதியதோர் பொற்கலனைக் காணிக்கை செலுத்துகின்றார்கள். இது ஒரு சிறந்த காவியச் சித்திரம். காதற் களஞ்சியம்; மனித உள்ளத்தின் பல்வேறு உணர்ச்சிகளை, ஆடியில் நிழல்போல் அஞ்சாமல் எடுத்துக் காட்டவல்ல சிறந்த இலக்கியக் கருவூலமாய்க் காட்சியளிக்கிறது இந்நூல். இதில் பாரதியாரின் கவிவெறியைப் பார்க்கிறோம், கம்பனின் கற்பனைத் திறனைக் காண்கிறோம்; இளங்கோவடிகளின் இனிமையை ஏற்கிறோம்; அறநெறிக் குறளின் அழகை அறிகிறோம்; இவற்றினும் மேலாக சாரண பாஸ்கரனாரின் சந்தப்பா நலங்களையும் சந்திக்கிறோம்.

மன்னன் தைமூஸின் மகளான சுலைகா ஒரு பேரழகி. கன்னி சுலைகா கட்டழகர் ஒருவரைக் கனவிற் கண்டு காதல் கொள்கிறாள். காதல் கரை புரண்டோடுகிறது. கனவிற் கண்டவரை எப்படி அடைய முடியும்? கருத்தழிகிறாள்! தந்தை சுயம்வரம் நடத்திப் பார்க்கிறான். அதிலும் காதலனைக் காண முடியவில்லை. மகளைச் சிறையிட்டுத்—தளையிட்டு வைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. பின்னர் தைமூஸ் எகிப்தின் முதலமைச்சர் அஜீஸ் என்பவருக்கு மணம் முடித்து, அஜீஸ் இருக்கும் இடத்திற்குச் சுலைகாவை அனுப்பிவைக்கிறான். தன் காதலனை யடையப்போவதாக நினைத்து மகிழ்வுடன் செல்கிறாள் சுலைகா. ஆனால் அஜீஸ் தன் காதலன் அல்லன் என்பதை உணர்ந்ததும் கலங்கிக் கதறுகிறாள். அவளுடைய கணவனாகிவிட்ட அஜீஸ் அவள் கற்புக்கு யாதொரு கலங்கமும் வராமல், அவள் மனம் கோணாமல், சீறாமல், சினவாமல், நடந்துகொள்வது நம்மையெல்லாம் வியக்கச் செய்கிறது.

காலவசத்தால் அடிமையாகிவிட்ட யூசுப் என்னும் எழில் மிக்க இளைஞர் ஒருவரை, அவர் நிறைக்கு இரட்டிப்புப் பொன்

கொடுத்து அஜீஸ் விலைக்கு வாங்குகிறார். யூசுபைக் கண்டதும் சுலைகா தன் கனவுக் காதலன் அவர்தாம் என்பதை உணர்கிறாள். உடனே அவரை அடைய முயல்கிறாள். அவ்விதம் செய்தால் அவள் கற்புக்குப் பழுது ஏற்படும் என்று அவளுடைய உத்தமத் தோழி எத்தனையோ வகைகளில் அவளிடம் மன்றாடிப் பார்க்கிறாள். சுலைகாவினால் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. யூசுப் பிறன் மனைவியான சுலைகாவைப் பார்க்கவும்—தீண்டவும் மறுக்கிறார். அஜீஸ் தம் மனைவியின் முறைகேடான செயலைக் கண்டு மனமுடைகிறார். ஆனால் மனைவிக்கு எதிராக ஒன்றும் செய்ய எண்ணவில்லை. சுலைகா யூசுபின்மேல் வீண் பழியைச் சுமத்தி அவரைச்சிறையிலிடச் செய்கிறாள். அவளுடைய பழிச்செயல் அம்பலமாகிறது; அரசன் வரையிலும் எட்டுகிறது. அஜீஸ் மானக்கேட்டைத் தாங்க முடியாது உயிர்துறக்கிறார். அவருடைய பெருந்தகைமையைக் கவிஞர் மிக அழகாகச் சித்திரித்துக் காட்டும் திறம் நம் மனத்தைக் கொள்ளை கொள்கின்றது: உள்ளத்தை உருக்குகிறது.

யூசுப் தம் அறிவொழுக்க மேன்மைகளினால் முதலமைச்சர் ஆகிறார். விதவை சுலைகா யூசுபின் காலடியில் விழுந்து கொஞ்சுகிறாள் அப்பொழுதும் யூசுப் அவளுடைய நாணற்ற நிலைக்கு நாணி மறுக்கிறார். பின் அரசனே தலையிட்டு வேண்டவும், இறைவனுடைய திருவருள் என்று கண்டு, சுலைகாவை மறுக்காது ஏற்று மணந்துகொள்கிறார். இன்னும் எத்தனை எத்தனையோ அற்புத நிகழ்ச்சிகளை இந்நூலைப் படித்துத்தான் இன்புற வேண்டும்.

கதையின் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு பாடலிலும் கவிஞர் அறிவுச் சுடரைக் கொளுத்தி நம்மை மகிழ்வூட்டிச் செல்கிறார். எளிய தமிழிலே தட்டின்றி முட்டின்றி இனிமையாகப் பாடியிருக்கிறார். அகராதி இல்லாமலே அனைத்தையும் படித்து யாவரும் புரிந்துகொள்ளலாம். படிக்கப் படிக்கத் தெவிட்டா விருந்தாய் இருக்கிறது. தமிழ் படித்த ஒவ்வொருவரும் இந்நூலைப் படித்துப் பெரும்பயன் எய்தலாம்—எய்த வேண்டும். ஆசிரியர் இதுபோல் இன்னும் பல நூல்களை நமக்கு அளிப்பாராக.

ஜி. சுப்பிரமணியம்

கவிஞர் சாரண பாஸ்கரனாரின் ஆசிரியர்
வேதாந்த வரகவி ஸாது ஆத்தனார் அவர்கள் அளித்த

# சிறப்புப் பாயிரம்

சாரணரின் பாஸ்கரனும் திருச்சூழியார்
அஹமதுக்குத் தமிழின் செல்வப்
பூரணியும் புங்கவியும் வாழ்ந்திருக்க
அவன் நாவில் புனிதங் கூறக்
காரணமும் விற்பனமும் அற்புதமும்
கற்பனையும் கதித்து மேவித்
தோரணமாய் யாப்பிசைக்கச் சித்திரகவி
வரம்பெற்றுத் துதிகொள் வானே!

நற்றவத்தின் சிரேட்டமெல்லாம் ஒருங்கமைந்த
பெரியாரின் நனிசீர் வாய்மை
முற்றுமெழில் தன்னகத்தே மதிசுரப்ப
அமிர்தவெள்ளம் முழுதும் தேற்றிக்
குற்றமறுங் கற்பியலாம் யூசுப்எழில்
சுலைகாவும் கூடி வாழ்ந்த
அற்புதத்தின் சரிதையினை அகப்படுத்தி
வகைப்படுத்தி அறைந்திட் டானல்.

முன்னூலாம், முதனூலின் யாப்பியலை
வழியுணர்ந்து முழுதும் தேர்ந்து
நன்னூலின் சாங்கியத்தைச் சூத்திரமாய்ச்
சுருக்கிவிட்டான் நவைதீர் மிக்கோன்
பன்னூலின் பாவாணன், யூசுப்எழில்
சுலைகாவும் பக்தி பூண்ட
இன்னூலின் சங்கற்பம் சாரணரின்
பாஸ்கரனும் இயற்றி னனே!

நாவகத்தும் பூவகத்தும் வீற்றிருந்த
பாமாது நாவில் வல்ல
பாவல்லோர் நாவல்லோர் பாசுரத்தின்
கவிவல்லோர் பாங்கில் நின்றாள்.
தேவகத்தின் பொற்கவிதை செந்தமிழில்
யூசுப்எழில் சுலைகா வும்தேர்
மாவகத்தின் தண்டமிழான் சாரணரின்
பாஸ்கரனும் மகிழ்ந்திட் டானே!

கூத்தாநல்லூர்
10—7—57

வேதாந்த வரகவி
ஸாது ஆத்தனார்



# பதிப்பகப் பதிகம்



அருளா ளனும்அன் புடையோனும்
ஆகிய அல்லாஹ் வின்பெயரால்
அருமை யூசுப் சுலைகாவை
அமிழ்தத் தமிழில் கொணர்கின்றோம்.
பெருமை மிகுந்த முகம்மதெங்கள்
பெருமான் நபியின் ஆசியினால்
அருள்சேர் யூசுப் சுலைகாவை
அவனி தனிலே கொணர்கின்றோம்.

தேனும் இளைக்கும் தீந்தமிழில்
சீர்மை கொழிக்கும் கவிமழையை
வானு லாவும் முகிலெனவே
வளமாய்க் கொட்டும் அருட்கவிஞன்
பேணும் எந்தை தந்தையுடைப்
பழமை நினைவை உருவாக்க
வேணும் எனயாம் கொள்கருத்தை
விரும்பி நிறைவு செய்தனனே.

அழகாம் சரிதம் எனஅல்லாஹ்
அழகாய் உரைத்ததை அழகாக்கி
அழகாம் பாணியில் ஆக்குவித்த
அழகர் யூசுப் திருச்சரிதம்
அழகுக் கழகாய் அணிசெய்து
அழகே உருவாம் தமிழ்மொழியை
அழகு செய்யும் அழகுதனை
அழகாய்க் கூறல் அரிதம்ம!

கவிதா நயமும் கற்பனை நயமும்
கவினுறு உவமை அணிநயமும்

சவியுறு உருவக எழில் நயமும்
தமிழுள தமிழாம் மொழிநயமும்
புவியுளோர் போற்றும் பண்ணயமும்
பாக்கள் இடைநிறை பன்னயமும்
நவில எம்மோர் நாநயத்தால்
இயலா தியலா தியலாதே.

சொன்னயப் பொலிவும் பொருட்செறிவும்
சொலித்து மிளிரும் அருள்வாக்கும்
நன்னயம் இணைந்த இசைஒலியும்
நடையின் மிடுக்கும் பெருமிதமும்
கன்னற் பாகோ கனிரசமோ
கற்கண் டாமோ எனவெண்ணி
உண்ண உண்ண எம்நாவும்
உணர்வும் உளமும் இனித்தனவே.

இறைவன் வாக்கின் உட்பொருளும்
எழில்சேர் தமிழுக் கினிமையெனச்
சிறப்பு மிகுந்த பொருள்விரிப்பும்
தெவிட்டா இன்பம் தருவனப்பும்
அறைதற் கியலாச் சொல்வளமும்
அருமைத் தமிழின் பொருள்வளமும்
நிறைவு மிகுந்த மொழியழகும்
நிலவித் திகழல் உணர்ந்தேமால்

என்னிலே உணர்வை ஆக்குவிக்கும்
எல்லை யில்லா அருட்கடவுள்
தன்னுடைத் துணையாய்த் துவங்குவதாய்ச்
சாற்றிய காப்பின் விளைவிதுவோ?
தன்னுடைத் தூதர் காவியத்தைத்
தானே எழுதித் தந்தனனோ?
என்னவென் றிதையே இயம்பிடுவேம்.
எல்லாப் புகழும் இறைவனுக்கே.

பதியாம் அல்லாஹ் வின்தூதாய்ப்
பதியாம் கன்ஆன் பூபதியாய்ப்
பதியாம் யாக்கூ பின்மகவாய்ப்
பார்புகழ் மிஸ்ரு அதிபதியின்

பதிசேர் மதிசேர் அமைச்சாகிப்
படியில் தைமூஸ் திருமகளார்
பதிவிர தாசிரோன் மணியுடைய
பதியாய்ப் போந்த பெருமானுர்,

ஆரணம் போற்றும் அழகுருவார்
அன்பே வடிவாம் திருவுருவார்
காரணச் சரிதம் தீந்தமிழின்
கனக முடியின் பெருமணியாய்ப்
பூரண மாகச் செய்வித்துப்
பொன்ருப் புகழைப் பூண்டனனே!
சாரண பாஸ்கரன் அஹ்மதெனும்
சம்பன்ன யோக நாவலனே.

வாழி அவன்தன் நற்பெயரும்
வளர்மதி போன்று வளர்ந்தோங்கி
வாழி அவன்தன் காப்பியமும்
வன்மை நிலைபெற் றுயர்ந்தோங்கி
வாழி அவன்தன் கோத்திரமும்
வளம்பல கெழுமி மிளிர்ந்தோங்கி
வாழி வான்பூ உள்ளவரை
வான்புகழ் ஓங்கி வாழியவே.

சென்னை — மு. ரு. மு. அப்துற்-றஹீம்

1—1—57

## உட்பொதிந்தவை


| | | | |
|---|---|---|---|
| 1 | யூசுப் பரம்பரை | ... | 24 |
| 2 | யூசுபின் பிறப்பு | ... | 27 |
| 3 | யாக்கூபும் ராஹிலாவும் | ... | 29 |
| 4 | இல்லரசியின் இழப்பு | ... | 31 |
| 5 | யூசுபின் பிரிவு | ... | 34 |
| 6 | சோதரியின் துயரம் | ... | 35 |
| 7 | குழந்தை கூறும் நெறி | ... | 37 |
| 8 | மதியின் சதி | ... | 39 |
| 9 | விதிசெய்த வேலை | ... | 43 |
| 10 | அன்பு விளைத்த பகை | ... | 44 |
| 11 | கதிரவன் காட்டிய நாடு | ... | 45 |
| 12 | எழிலைக் கண்டேன் | ... | 47 |
| 13 | கிழவியின் கண்டிப்பு | ... | 49 |
| 14 | கள்ளன் நுழைந்தான் | ... | 50 |
| 15 | ஏமாற்றம் | ... | 54 |
| 16 | யூசுபின் கனவு | ... | 57 |
| 17 | சகோதரப் பகை | ... | 60 |
| 18 | நினைப்பும் நடிப்பும் | ... | 63 |
| 19 | சுலைகாவின் துயரம் | ... | 64 |
| 20 | யூசுப் எங்கே? | ... | 66 |
| 21 | சுலைகாவின் நம்பிக்கை | ... | 70 |
| 22 | மீண்டும் வந்தான் | ... | 74 |
| 23 | யாக்கூபின் நினைவு | ... | 81 |
| 24 | தைமூஸ் சபையில் அறிவித்தல் | | 83 |
| 25 | புதையல் கிடைத்தது | ... | 90 |

| | | | |
|---|---|---|---|
| 26 | சுலேகாவின் சுயம்வரம் | ... | 98 |
| 27 | தோழியரை வினவுதல் | ... | 105 |
| 28 | காதலுக்கு விலங்கா? | ... | 109 |
| 29 | சுலேகாவின் பிரார்த்தனை | ... | 114 |
| 30 | காதலன் வந்தான் | ... | 116 |
| 31 | மயங்கும் அழகு | ... | 123 |
| 32 | காதல் யாத்திரை | ... | 126 |
| 33 | அஜீஸின் வரவேற்பு | ... | 131 |
| 34 | இருளிலே ஒளி | ... | 134 |
| 35 | தூது அனுப்புதல் | ... | 138 |
| 36 | அடிமைச் சந்தையில் | ... | 144 |
| 37 | துன்பமும் இன்பமும் | ... | 150 |
| 38 | பழி சுமத்தல் | ... | 154 |
| 39 | விருந்தும் வியப்பும் | .. | 174 |
| 40 | மூன்று உள்ளங்கள் | ... | 179 |
| 41 | திரை விலகியது | ... | 187 |
| 42 | அஜீஸின் மரணம் | ... | 190 |
| 43 | கடமையும் காதலும் | ... | 193 |


---



கவிஞர் சாரணபாஸ்கரன்

# அர்ப்பணம்

தன்னகம் கவர்ந்த காதலர் யூசுப்
தானினில் தன்னுயிர் படைத்து
மண்ணகம் வியக்கச் சிறப்புறும் ஜுலைகா
வாழ்க்கையைக் கூறுமிந் நூலை
என்னகம் புகுந்து இல்லறம் ஈந்து
இன்னுயிர் தன்னையும் நீத்து
விண்ணகம் புகுந்த மனைவியல் இவளின்
விருப்பினுக் கர்ப்பணிக் கின்றேன்!

கூத்தாநல்லூர். சாரணபாஸ்கரன்.
5-5-1956

# இறை வணக்கம்

பொன்னிலே பொருளில்
புன்னகை புரிவோன்
விண்ணிலே மண்ணில்
விந்தைகள் செய்வோன்
கண்ணிலே ஒளியாய்க்
காரிருட் களைவோன்
தன்னிலே தானாய்த்
தனித்தியங் கிடுவோன்
என்னிலே உணர்வை
எழுப்பிடும் இறையோன்
பொன்னடி தனிலே
சென்னியைக் கிடத்தி
என்னருந் தமிழில்
யூசுபு சுலைகா
உன்னதச் சரிதையை
உரைத்திடத் துணிந்தேன்.

# முன்னுரை

கற்றவர் சிந்தையைக் கற்றிடார் கண்களைக்
கொற்றவர் ஆண்மையைக் குடிகளின் மென்மையைப்

பற்றிப் பிணைத்திடும் பண்புறும் காதலின்
முற்றுகைக் கிலக்காய் விட்டவர் யாவரும்

பெற்றவர் தம்மையும் பிறந்தவர் தம்மையும்
சுற்றமும் கொற்றமும் துறந்திடும் துணிச்சலைப்

பெற்றிடும் உண்மையைப் பேசிடும் காதையுள்
முற்றிலும் சிறந்ததை விளக்கிட விரும்பினேன்!

கலையினிற் சிறந்த காவியம் வியக்கும்,
மலைகளும் உருகும், மனத்தினில் நிறையும்,

அலையெறி ஆழியும் அசையாது கேட்கும்,
கொலைஞரும் கண்ணீர் கொட்டிடச் செய்யும்

சிலைகளும் சிரிக்கும், சிந்தையோ சிலிர்க்கும்
நிலையினி லாக்கும் நிகரிலா யூசுப்

சுலைகா வாழ்வைச் சுவைமிகும் தமிழில்
நிலைத்திடச் செய்யும் நினைவே கொண்டேன்!

காவியப் புலவரும் கற்பனைக் கலைஞரும்
ஓவிய மேதையும் உள்ளம் பதித்திடும்

ஜீவியக் காதலைச் செப்பிடும் கதைகளின்
ஆவியாய் நின்றுபல் லாயிரம் ஆண்டுகள்

மேவிடும் பெருமையைத் தாவிடும் புதுமையைக்
கூவிடும் அருமையைக் கூறிடும் சிந்தையால்

பூவினில் திருமறை போற்றிடும் யூசுபின்
தேவியர் சுலைகாவின் சரிதையைக் கூறுவேன்!

பன்னெடுங் காலமாய்ப் பார்மிசை எங்கணும்
மின்னுமிச் சரிதையை எண்ணிலா மொழிகளில்

படைத்தனர், ஆயினும் பைந்தமிழ் மொழியிலே
படைத்தன ரில்லையே, படைப்பவ ரில்லையா?

இருந்தனர் பாவலர், என்னிலு மிக்கவர்;
இருப்பினும் எனக்கென இறைவனே வைத்தனன்!

இல்லையென் றுலிதை எண்ணரும் புலவரும்
சொல்லருங் கவிதையால் தொடுத்திட மறப்பரோ?

இப்பெரும் பேற்றினை என்றனுக் கீந்திடும்
ஒப்பரும் இறைவனின் உவப்பினை மறப்பதோ?

செப்பருங் காவியம் செப்பிடும் ஆற்றலே
எப்பொழு தும்எனக் கிருப்பதாய் எண்ணிலேன்!

இப்பெருங் காவியம் இறைவனின் துணையினால்
செப்பிடத் துணிந்தஎன் சிந்தையே ஊக்கமே

கொண்டிட ஆக்கமே கொடுத்தனன்; பேர்பெறும்
தொண்டியம் பதியினில் தொல்புகழ் தாங்கிடும்

பெருங்குலத் திலகமாய் அருங்குணச் செல்வமாய்
திருமிகும் பெருந்தகை சீர்மிகும் பண்பினன்

அப்துர்ர ஹீமின்மெய் யன்பினை மறப்பதோ?
எப்பொழு தும்அவன் இன்முகம் மறந்திலேன்!

இம்மையும் மறுமையும் ஏற்றமாய் அவன்குலம்
செம்மையே பெற்றிடச் சிந்தையால் வாழ்த்துவேன்!

இப்பெருங் காவியம் இயற்றிடப் பணித்திடும்
ஒப்பரும் இறைவனும் ஒப்பிடப் பணிகிறேன்!

வாழிய என்பணி, வையகம்
வாழிய மட்டிலும் வனப்புடன் வாழியே!

—சாரணபாஸ்கரன்

# யூசுப் பரம்பரை

நமக்காக அல்லாமல் நம்மை யல்லார்
நலம்நோக்கி வாழ்கின்ற உணர்ச்சி யூட்டி
தமக்காகத் தாம்பெற்ற செல்வர்க் காகத்
தயங்காமல் இறையோனின் ஆணை ஏற்று
'எமக்காக எதுவுமிலை; எதைக்கேட் டாலும்
இக்கணமே தந்திடு வோம்'எனும் நினைவை
நமக்கீயும் நல்வாழ்க்கை நடாத்தி நின்ற
நபிஇபுரு ஹீம்தவத்தில் இஸ்ஹாக் வந்தார்.

எவ்வுயிரும் இறைபணிக்கே உரிய தென்ற
இபுருஹீம் நபிகுலத்தில் மலர்ந்த இஸ்ஹாக்
செவ்வை யுடன்குலம் தழைக்கநெறி நிலைக்கச்
செழித்தோங்கிக் கட்டிளமைப் பருவம் பெற்று
இவ்வுலக வாழ்வினுக்கே முதன்மை யான
இல்லறத்தை ஏற்றதிலே இன்பம் துய்த்து
ஒவ்வியமெய் யன்புநிறை வாழ்க்கை வானில்
ஒளிமிகுந்த தாரகையே உதிக்கக் கண்டார்!

வளமிகுந்த இபுருஹீம் நபியின் பூங்கா
வனப்பொளிரும் பலமலரைப் பூக்கச் செய்து
உளம்மகிழக் குலம்வளர உலகு முற்றும்
ஒப்பற்ற நறுமணத்தைப் பரவச் செய்யும்
வளமுடைய பொன்மலராய்ப் பெற்றெ டுத்த
மைந்தனுக்கு யாக்கூ[ப்]பெனப் பெயரு மிட்டு
அளவற்ற மகிழ்வுற்ற இஸ்ஹாக், நெஞ்ச
அருவிதனில் ஆரமுதம் சுரக்க வாழ்ந்தார்.

பிள்ளைபுகழ் பாடுகின்ற பெற்ற வர்க்குப்
பெரும்புகழைத் தரும்மணியாய் மிளிர்ந்த யாக்கூப்
கிள்ளைமொழி பேசுதற்கு மெள்ள ஊர்ந்து
கிடைக்காத பெருநிதியாய்ச் சிறப்புப் பெற்றுத்

துள்ளுநடை பயிலுகின்ற வளர்ச்சி யுற்றுத்
துடிஇளமை எய்தியதும் கடமை வாழ்வைக்
கொள்ளுகின்ற நற்பருவம் கண்டு, வாழ்க்கைக்
குறிக்கோளாம் இல்லறத்தை விரும்ப லானார்!

பண்புமிகும் பாட்டனார், தந்தை மற்றும்
படைப்பினங்கள் அத்தனையும் ஏற்று வாழும்
அன்பொளிரும் இல்வாழ்வை அடைந்த யாக்கூப்
அதன்பரிசாய் ஈரைந்து மகவைப் பெற்று
இன்பமுடன் புவிவாழ்வை நடாத்துங் காலை
இல்லரசி 'பல்கியா' இயற்கை எய்தத்
துன்பமுடன் சேர்ந்துவரும் இன்ப மெண்ணித்
துயர்மறந்து மைந்தர்களை அணைத்து வாழ்ந்தார்!

விந்தையிலும் விந்தைமிகும் கதைகள் சொல்லி
விளையாட்டில் சிறுவர்களைத் திருப்பி விட்டு
எந்தநிலை எழுந்தாலும் இறைவன் ஆணை
எனும்நினைவை மூத்தவர்க்கு விளக்க லானார்!
தந்தையின்நல் லறிவுரையில் சாந்தி காணும்
தகுதியினை அடைந்திட்ட மூத்த மைந்தர்
சிந்தையினில் தாய்நினைவு தேய்ந்து போகச்,
சிறுவர்களோ தாய்தேடி வாட லானார்!

மறைந்திட்ட அன்னைமுகம் காணு தற்கு
மனந்துடிக்கும் மைந்தர்களின் எழில் முகத்தில்
நிறைந்திட்ட பெருந்துயரைக் கண்ட யாக்கூப்
நெஞ்சினிலும் கொடுந்துய ரம்நிழல் வடிவாய்
வரைந்திட்ட சித்திரத்தே பிரிந்து விட்ட
மனைவிமுகம் தோன்றிட வேநிலை குலைந்து
குறைந்திட்ட மனச்சுமையில் மீண்டும் துன்பம்
குவிந்திடவே நெடுமூச்சு விடுக்க லானார்!

பாய்ந்துவரும் பெருமூச்சில் புதிய எண்ணம்
பளிச்சிடவே புத்துணர்வு பெற்ற யாக்கூப்
சாய்ந்துவிட்ட நெஞ்சுரத்தின் தலைநி மிர்த்தித்
தாய்தேடும் மைந்தர்களை இறுக அணைத்துக்

காய்ந்துலர்ந்த தம்மிதழால் முத்த மிட்டுக்
"கண்மணிகாள்! அதிவிரைவில் உங்க ளுக்குத்
தாய்கிடைக்கச் செய்திடுவேன்! அழாதீர்!" என்றார்.
துயர்படிந்த சேய்முகத்தில் மகிழ்ச்சி கண்டார்.

கண்ணயர்ந்து உறங்குகின்ற சிறுவ ருக்குக்
கதைசொல்லிக் களிப்படையச் செய்ய லாமோ?
உண்ணுதற்கு உணவுபெறத் துடிப்ப வர்க்கு
உடைதந்தால் மகிழ்ச்சிதனை அடைவ துண்டோ?
அன்னையின்மெய் யன்பினுக்கே அழுப வர்க்கு
ஆறுதல்சொல் தந்தைமொழி இனிப்ப துண்டோ?
எண்பதிலே எண்ணமிட்ட யாக்கூப் நெஞ்சம்
இல்லறத்தை ஏற்பதற்கு இணங்க லாச்சு!

மறந்திடவோ மறுத்திடவோ இயலா தான
மனிதகுல வளர்ச்சிக்கே மூல மாகச்
சிறந்தொளிரும் இல்வாழ்வைப் பிரிந்து வாழும்
சிந்தனையை உடன்மாற்றி வென்ற யாக்கூப்
இறந்துவிட்ட தம்மனைவி 'பல்கி யா'வின்
இளையதங்கை ராஹிலாவைக் கைப்பி டித்துத்
துறந்திருந்த இல்வாழ்வைத் தானும் பெற்றுத்
துயரடைந்த மைந்தருக்குத் தாயும் தந்தார்!

……

# பூசுபின் பிறப்பு

## இயல்—2

கணவன் களிப்பைப் பெரிதென்னும்
கடமை வாழ்வைத் தொடங்கிட்ட
குணவதி ராஹிலா திருமுகத்தில்
கூடித் திரளும் புத்தொளியை
மனத்தால் உணர்ந்து மகிழ்வுற்று
மனைவியின் நெஞ்சைக் கூர்விழியால்
கணத்தில் நோக்கிய யாக்கூபின்
கருத்தை உணர்ந்தாள் இல்லரசி!

வெட்கிக் கவிழ்த்த தன்முகத்தை
விரைந்து நிமிர்த்திய யாக்கூபை
ஒட்டி மார்பினில் முகம்புதைத்து
உலகை மறக்கும் ராஹிலாவைக்
கட்டித் தழுவித் தம்மகிழ்வைக்
காட்டிய யாக்கூப் காதருகில்
வெட்கம் விலக்கி, "ஒருகுழந்தை
விரைவில் தருவாய்!" எனக்கேட்டார்

"ஐந்து திங்கள் ஆவதற்குள்
அவசரம் செய்தால் முடிந்திடுமோ?
ஐந்து திங்கள் பொறுத்திடுவீர்
அழகுச் செல்வனைப் பெற்றிடுவீர்!
மைந்தனைக் கண்டதும் மனைவியினை
மறந்திட மாட்டீர் என்பதற்கு
எந்தனுக் குறுதியே கூறிடுவீர்!"
என்றே வேண்டினள் ராஹிலாவே!

கரும்பு முளைவிடும் முன்பிருந்தே
காத்து நின்றிடும் எறும்பெனவே

அரும்பு கட்டுமுன் மலருக்காக
அலைந்து திரிந்திடும் வண்டெனவே
விரும்பும் மைந்தனைக் காண்பதற்கே
வெகுவாய்த் துடித்திட்ட யாக்குபுள்ளம்
பெருமை கொண்டிட எழில்மகனைப்
பெற்று மகிழ்ந்தனள் ராஹிலாவே!

மின்னும் தாரகைச் சுடரெனவே
மிளிரும் சிறுவிழி சுழற்றுகின்ற
அன்புச் செல்வனை அருகணைத்து
ஆசைப் பெருக்குடன் முத்தமிட்டுப்
பண்பு மிகுந்திட யூசுபென்று
பாரில் நிலைத்திடும் பெயருமிட்டு
என்றும் காணு இன்புற்று
இதயம் களித்தனர் நபியாக்கூப்!

நீல வான்கடல் நீந்துகின்ற
நிறைமதி தனது இல்லவானில்
சீலர் யூசுபாய்ப் பிறந்ததென்று
சிந்தை குளிர்ந்திடும் ராஹிலாவை
ஞாலம் வியந்திடும் எழில்படைத்த
நற்குலக்கனி குழந்தை யூசுப்
காலம் முழுவதும்நினை வில்வைக்கக்
கண்கள் மலர்ந்துதம் நன்றிசொன்னூர்!

என்றும் வாடிடாத் திருமலர்கள்
எழுப்பும் சுகந்தமே அத்தனையும்
குன்றச் செய்திடும் நறுமணத்தைக்
கொண்டு பிறந்ததன் திருமகனை
அன்பில் விளைந்த நல்லமுதை
அள்ளி அணைத்தெழில் நுதல்நுகர்ந்து
இன்பம் சுவைத்திடும் ராஹிலாவை
எழில்மிகும் யூசுப் தழுவினரே!

...—...

# யாக்கூபும் ராஹிலாவும்

## இயல்—3

தாய்மையினை அடைந்திட்ட காரணத்தால்
தளர்வுற்ற உடலினிலே புதுமை இன்பம்
தோய்ந்திடவே யூசுபினைப் பெற்றெடுத்துத்
துயர்மறந்து முகம்மலர்ந்த ராஹிலாவை
வாய்மைநிறை நபியாக்கூப் உற்று நோக்கி
மைந்தனையே தந்ததற்கு நன்றி சொல்லிச்
சேய்முகத்தில் ஒளிமுத்தம் பதித்து அன்புத்
தேவியரின் திருமுகத்தை நோக்க லானார்!

"உங்களையே வார்த்தெடுந்த வடிவம்" என்றாள்,
"உன்னழகும் கொண்ட உயிர்ச்சிற்ப" மென்றார்!
"திங்கள்ஒளி தங்கும்எழிற் செல்வ" மென்றாள்,
"தேய்ந்தழியும் திங்களிதற் கீடோ?" என்றார்!
"அங்கமெலாம் நமதன்பின் சின்னம்" என்றாள்.
அதனுயிரோ தெய்வீகச் சக்தி" என்றார்!
"துங்கமணிச் சர"மென்றாள்; "ஆமாம்" என்றார்,
சொல்லாடல் கேட்டமகன் சிரிக்கக் கண்டாள்!

"எதற்காகச் சிரிக்கின்றாய் மகனே?" என்றாள்,
"இல்லாமல் அழச்சொல்கின் றாயா?" என்றார்!
"இதற்குள்ளே மகன்பக்கம் சேர்ந்து விட்டால்
இனிஎனக்கு ஆதரவு யாரே?" என்றாள்!
"அதற்குனது மகன்வந்து விட்டான்!" என்றார்
"அவனெதற்கு நீங்களே வேண்டும்!" என்றாள்
இதைக்கேட்ட யூசுபு வெம்பக் கண்டு
இருகரத்தால் மார்பணைத்தாள் ராஹி லாவே!

தனைப்பெற்ற தாயாரின் கருணை நெஞ்சில்
சலுகையுடன் முகம்புதைத்து விம்மு கின்ற
மனைவிளக்கின் நீர்விழியைத் துடைத்து விட்டு
"மாமணியே ஆண்மகன்நீ அழாதே!" என்றாள்
"துணைவேண்டி விளையாடத் தங்கை கேட்டுத்
துயர்கொண்டு அழுகின் றான்" எனச் சிரித்தார்;
"நினைக்காதீர் அதற்குள்ளே!" என்றாள் ராஹில்,
நினைத்தாலே இனிக்கிறது!" என்றார் யாகூப்

விழிமூடி நாணத் தால்முகம் சிவந்து
'விளை நிலத்தைப் பண்படுத்த வேண்டும்' என்ருள்
மொழிகேட்ட யாக்கூபு முறுவ லித்தே
'முற்றுமிதை ஒப்புகிறேன் கண்ணே!' என்ருர்.
எழில்மிக்க மைந்தர்களைப் பெற்றுத் தந்தால்
இனிக்காமல் கசந்திடுமோ?'' என்ருள் ராஹில்.
''பொழில்நடுவில் ஒருமலரை நுகர்ந்த பின்னர்
புதுமலரை விரும்புவது தவருே?'' என்ருர்

... ...

[இதற்குப்பின் ராஹிலா மற்றொரு மைந்தனைப் பெற்றெடுத்தாள். அக் குழந்தையின் பெயரே புன்யாமீனாகும். அக் குழந்தை பிறந்தபின்னர் ராஹிலாவுக்கு உடல் நலிவேற்பட்டது.]

# இல்லரசியின் இழப்பு

## இயல்—4.

நாட்களும் உருண்டு, நகர்ந்தன திங்கள்,
ஆண்டும் பிறந்து மாண்டது; மீண்டும்
தோன்றிய ஆண்டு நீண்டு தேய்ந்தது!

இதனிடை......

தாயின் மடியில் தவழ்ந்த யூசுப்
பாயில் அமர்ந்து பாய்ந்து ஊர்ந்து,
பளிச்சிடும் முத்துப் பற்களைக் காட்டிக்
கிளிமொழி பேசி வளர்ந்திடக் கண்டு
அன்னையின் உள்ளம் முன்னிலும் மகிழ்ந்தது.

ஆயினும்......

தன்னுடல் வாடத் தாக்கிடும் பிணியை
இன்னதென் றறியா தேங்கிய ராஹில்
தன்னருங் கணவர் கண்டிடா வண்ணம்
பன்னெடு நாட்கள் பதுக்கியே வைத்தாள்.

என்றாலும்......

பின்னொரு நாளில் தன்னிலை யுணர்ந்து
கண்மணி யூசுபைக் கட்டி யணைத்து
'என்னரும் மகனே! இன்றோ நாளையோ
உன்னைப் பிரிந்திட என்னைப் படைத்தவன்
கண்ணைக் காட்டிக் கடிதில் அழைக்கிறான்!
சென்றேன் என்றால் திடுக்கிட வேண்டாம்!
உன்றனின் தந்தை உன்னத யாக்கூப்
என்றனை விடவும் ஏற்றமாய் வளர்ப்பார்!
கண்களுக் கிமையாய் அண்ணன் மார்கள்
உன்மனம் போன்று உவப்புடன் காப்பார்!

கண்ணே யூசுப் கலங்கிட வேண்டாம்!''
என்ருள் ராஹில்; இதுவரை மறைந்து
நின்ற யாக்கூப் நெடுமூச் செறிந்து
பாய்ந்து சென்று பறித்தார் யூசுபை.

அத்துடன்......

''இந்நாள் வரையிலும் உன்னுடல் நோயினை
என்னிடம் மறைத்து இருந்ததேன் ராஹில்?
பிள்ளைக்கு உன்நிலை சொல்லிடத் துணிந்தநீ
எள்ளள வாயினும் என்னிடம் இயம்பிடக்
கள்ளமேன் கொண்டனை?'' என்றனர் யாக்கூப்

கேட்டதும்,

'கள்ளமேன்?' என்றிடும் கணவரின் வார்த்தையில்
உள்ளத் துடிப்பினை உணர்ந்த ராஹிலா
''அண்ணலே என்குறை அனைத்தும் மறந்து
புன்னகை பூக்கும் புதல்வனைப் பேணுவீர்!
இந்நாள் வரையிலும் என்னுடல் பிணியினைச்
சொன்னது இலையெனத் துயர்படும் தோன்றலே,
சொல்வதால் என்பிணி தொலைந்திடும் என்றிடில்
சொல்லிட முந்துவேன், சொல்லிடில், தங்களின்
இதயம் வருந்திடும் என்பதால் மூடினேன்''
என்றனள் கேட்டதும் ஏங்கினர் யாக்கூபே!

இந்நிலை......

உணர்ந்ததே போன்று ஒளிமிகும் யூசுப்
''அம்மா'' என்று அழைப்பதைக் கேட்டுத்
தந்தையர் யாக்கூப் சிந்தை வலித்தது!
சேயின் அழைப்பைச் செவியினில் ஏற்ற
தாயின் சிந்தைதன் நோயினை மறந்து
முழுமதி எனவே முகமதி ஒளிரச்
செழுமதி படைத்த செல்வன் யூசுபை
கூர்ந்து நோக்கிக் கூறுவாள் ராஹில்
''ஊர்ந்தென் னருகில் ஓடிவா!'' என்று.
தந்தையின் அணைப்பைச் சட்டென விலக்கி,
தாயின் அழைப்பைத் தலைமேற் ருங்கி,
துள்ளித் தவழும் பிள்ளை யூசுபை

அள்ளி யணைத்து ஆயிர முத்தம்
சொரிந்த ராஹிலா துணைவரை அழைத்து
"இந்நாள் முதலாய் என்னிலும் மேலாய்க்
கண்மணி யூசுபைக் கவனமாய்க் காப்பீர்!"
என்றதும் ராஹிலா இருவிழி
சுழற்றி விழித்திடக் கழன்றது உயிரே

# யூசுபின் பிரிவு

## இயல்—5

இல்லற வாழ்வில் இன்பமும் துன்பமும்
இணைந்திடும் உண்மையை உணர்ந்து,
நல்லறங் காக்கும் யாக்கூபின் நெஞ்சம்
நாயகி மறைந்ததை மறந்து
நல்லருட் சேர்க்கும் வல்ல தயாளன்
நாட்டம்போல் வாழ்ந்திடத் துணிந்து
எல்லையில் லாநல் லன்புடன் யூசுபை
எவ்விதம் வளர்ப்பதென் ருய்ந்தார்.

பெற்றவள் அணைப்பைப் பிரிந்திடாச் சிறுவர்
பிரிந்ததம் அன்னையைத் தேடிச்
சற்றுமோ யாமல் அழுவதைக் கண்டு
சகித்திட இயன்றிடா யாக்கூப்
சுற்றமும் கலந்து யூசுபை வளர்க்கச்
சோதரி யாளிடம் விடுத்தே
மற்ருெரு குழந்தை புன்யாமீனை
வளர்த்திடத் தாதியர் அமைத்தார்!

—

[ஐந்தாண்டு வரையிலும் அருமையாய் வளர்த்த யூசுபை, மீண்டும் தம்மிடம் ஒப்படைக்கும்படி யாக்கூப் வேண்டுகிறார்.]

# சோதரியின் துயர்

## இயல்—6

தன்னரும் மனைவி பிரிந்திடச் செய்த
சாவினைச் சகித்திட்ட யாக்கூப்
உன்னத மகனார் யூசுபைத் தனது
உடன்பிறந் தாளிடம் விடுத்து
பன்னெடு நாட்கள் பெருந்துயர் தாங்கிப்
பாலகன் யூசுபை மீண்டும்
தன்னிடம் சேர்க்கச் சோதரி இடத்தில்
தாழ்மையாய் வேண்டி நின்றாரே!

இன்னும் சில்லாண்டு தன்னிடம் யூசுபை
இருத்திட விரும்பிய அவளோ
தன்னுடைச் சோதரர் யாக்கூபை அணுகித்
"தாயினும் மேலதாய் வளர்க்கும்
என்னிடம் யூசுப் இருப்பதில் ஏதும்
இன்னலைக் கண்டது முண்டோ?
இன்னுமீ ராண்டு என்னிடம் யூசுப்
இருப்பது நன்றெ"னச் சொன்னாள்.

"மீண்டுமோர் நாளும் யூசுபைப் பிரிந்து,
வாழ்ந்திடில் வளர்துய ரரவம்
தீண்டிஎன் உயிரைக் குடிப்பது திண்ணம்
சிந்தையில் உலவிடும் யூசுப்
ஆண்டுஐந் தாயுன் அன்பினில் வளர்ந்தான்
ஆதலால் சோதரி இனிமேல்
நான்வளர்த் திடவே முடிந்திடும்!" என்றே
நாட்டத்தை விளக்கினர் யாக்கூப்!

துயரினை ஏந்திச் சுகத்தினை இழந்து
சோதரர் யாக்கூபின் மகனை
உயிரினும் மேலாய், உடலினோர் அமைப்பாய்
உவப்புடன் வளர்த்துளம் மகிழ்ந்து
பயன்பெறும் காலம் பிரிக்கும் யாக்கூபைப்
பகைவராய்க் கருதிய அவளோ
நயமுடன் உரைத்தாள் “யூசுபை அழைத்து
நாளைக்கே வருகிறேன்!'' என்று.

சோதரி தமக்கே ஆதர வாகச்
சொல்லிடும் வார்த்தையை நம்பி
வேதனை மறந்து யூசுபை அருகில்
விளையாடச் செய்வதாய்க் கருதி
சோதனை அனைத்தும் வென்றதாய் நினைத்துச்
சோதரி பெருங்குணம் மதித்து
சாதனை புரிந்த வீரனைப் போலச்
சாந்தியை அடைந்தனர் யாக்கூப்!

...... 

# குழந்தை கூறும் நெறி

## இயல்—7

அருமை யூசுபை நீராட்டி
அழகுக் கழகு செய்வித்து
உரிமைக் குரிய தந்தையிடம்
ஒப்பித் திடவே உடன்கூட்டி
வரும்தம் சோதரி எதிர்சென்று
மைந்தன் யூசுபை அருகணைத்து
உருகிக் கண்ணீர் உதிர்க்கின்ற
உணர்ச்சி யடைந்தார் யாக்கூபே!

கண்ணீர் கண்ட சோதரியாள்
கடுஞ்சினங் கொண்டு யாக்கூபை
“எண்ணம் போன்று யூசுபை
என்னிடத் திருந்து பெற்றபினும்
கண்ணீர் வடித்து நிற்பானேன்?
களிப்பில் கலக்கம் சேர்ப்பானேன்?
என்னிலை யன்றோ இது!” என்றாள்;
“இன்பக் கண்ணீர்!” எனச்சொன்னார்.

காலை அரும்பும், கடும்பகலும்
கவ்வித் தகிக்கும், மனங்கவரும்
மாலை மலரும் ஒளிமறைந்து
மயக்கும் இரவின் இருள்சூழும்
காலை இன்பம் கண்டதனால்
கடும்பகல் துன்பம் மறப்பதுவோ?
நாளை நடப்பை அறியாநாம்
நம்பும் இன்பம்கன” வென்றாள்!

‘சூழும் இருளும் விரைந்தோடும்
சூரியன் மீண்டும் ஒளிகாட்டும்!
வாழும் உயிர்கள் அத்தனையும்
வாய்ப்புக் கேற்ப வாழ்ந்திடவே

தாழ்வும் வாழ்வும் சமமாக்கித்
　　தந்தான் இறைவன்!'' எனயூசுப்
சூழ்ந்து நிற்பவர் வியந்திடவே
　　செ[illegible]தும் மகிழ்ந்தார் யாக்கூபே!

சோதரி கூறிய நெறிமுறையைத்
　　துணிவாய் மறுத்த மகன்யூசுப்
வாதத் திறனை மிகவுணர்ந்து
　　வாரி யணைத்து அரைநொடியில்
போதனை புரியும் பேரறிவை
　　புகட்டி வளர்த்த சோதரிக்கு
நாதர் யாக்கூப் பெரும் நன்றி
　　நவின்றார், அவளும் மகிழ்ந்தாளே!

# மதியின் சதி

## இயல்—8

மறுநாட் காலை மைந்தனுக் குயர்ந்த
நறுமணம் பூசி நல்லுடை உடுத்தி
இருந்தார் யாக்கூப். இந்நே ரத்தில்
அருமைச் சோதரி அவசரக் கோலமாய்
வருவதைக் கண்டு பெருந்திகில் கொண்டு
அருகில் சென்று அமரச் செய்து,
"பெருந்துயர் காட்டிப் பீதியால் வெருண்டு
வருந்துதல் ஏனோ? வளர்த்த யூசுபைப்
பிரிந்ததன் விளைவோ? அறிந்திடச் சொல்வாய்!
பிரிவுத் துயரம் பெரிதும் வருத்திடில்
திரும்பவுன் னில்லம் செல்லா திங்கே
இருந்து வாழலாம்!" என்றார் யாக்கூப்.
தன்னரும் சோதரர் பொன்னுரை கேட்டதின்
பின்னரும் ஏதும் பேசா திருந்தனள்.
புன்னகை பூத்திடும் கண்மணி யூசுபு
அன்புடன் மாமியின் அருகினிற் சென்று
"நின்துயர் யாதென என்னிட மாவது
சொன்னல் போதும்!" என்றார் பணிவாய்.
"எங்களின் தந்தையர் இஸ்ஹாக் எமக்குப்
பங்கிட் டளித்த பல்விதப் பொருளில்
எங்கணும் கிடைக்கா இடையணி ஒன்றைத்
தங்களின் சின்னமாய்த் தந்தார் எனக்கே!
உன்னதம் மிகுந்த இன்னுயிர்ப் பொருளாய்ப்
பன்னெடுங் காலம் பாதுகாத் திருந்தேன்.
என்றும் போல இன்றதைக் காணச்
சென்றேன் பேழை திறந்து கிடக்கக்
கண்டு கலங்கினேன்; கள்வன் எவனே
கொண்டு சென்றனன்; கொள்ளை கொடுத்தேன்!

அடுத்த வீட்டார் அத்தனை பேரிலும்
எடுத்தவர் யாரும் இருக்கலா மென்று
சோதனை செய்து சோர்ந்த போதில்
பாதகச் செயலைப் பண்ணிடும் வாய்ப்பு
என்னிட மிருந்த உனக்கே உண்டெனும்
எண்ணம் எழுந்தது; உன்னிடம் வந்தேன்!
எடுத்தது நீயெனில் என்னிடம் அதனைக்
கொடுத்திட வேண்டும்; கொடுக்கா திருந்தால்
விடுத்திட மாட்டேன்!, விருப்பமாய் உன்னை
எடுத்து வளர்த்தேன், அடுத்துக் கெடுத்தாய்!
எடடா அதனை!'' என்று யூசுபை
எட்டிப் பிடித்தாள், யாக்கூப் தடுத்தார்!
"கள்ளமே அறியாக் கண்மணி யூசுபைக்
கள்வனாய்க் கருதிடும் உள்ளமும் வந்ததோ?
படைத்தவன் ஆணையாய்ப் பகருவேன் என்மகன்
கிடைத்ததைச் சுருட்டிடும் கீழ்மகன் ஆவனோ?
சொல்வது முறையோ? சோதரி!'' என்றார்.
"உன்மகன் என்பதால் ஒருபிழை புரிந்திடான்
என்பதைச் சொல்லும்நீர் இஸ்ஹாக் திருமகள்
சொல்லுவாள் பொய்'யெனச் சொல்லவும் துணிவதோ?
நல்லதும் அல்லதும் எள்ளள வாயினும்
அறிந்திடா யூசுபின் ஆடைகள் பெட்டியைத்
திறந்திடில் என்பொருள் தேடலாம், இல்லையேல்
சொன்னது தவறென மன்னிப்புக் கோருவேன்''
என்றனள். இதுதான் நன்றென யாக்கூப்
ஒப்பினார். யூசுப் உண்மையில் இவ்விதத்
தப்பிதம் செய்ததாய்ச் சாட்சியம் கிடைத்திடில்
தண்டனை விதிக்கவும் தவறேன்'' என்றதும்
"தண்டனை தருவது என்பொறுப்'' பென்றனள்.
இந்தச் சமயம் ஏக்கமாய் யூசுப்
சொந்தப் பெட்டியைச் சுட்டிக் காட்டி
"அந்தப் பெட்டியில் அப்பொருள் இருந்திடில்
எந்தத் தண்டனை எனக்க ளித்தாலும்

ஏற்பேன்!" என்று இயம்பி அழுதார்.
"பார்ப்போம்!" என்று பார்த்தனர் பெட்டியை!

பெட்டியைத் திறந்து கொட்டிப் பார்த்ததும்
கட்டிடும் இடுப்புக் கச்சையைக் கண்டனர்!

"எவ்விதம் இதனுள் வந்தது?" என்றாள்.
"அவ்விதம் ஏதும் அறிந்திடேன் நானும்.

இவ்விதம் வருமுன் இந்தப் பெட்டியில்
ஒவ்வொரு உடையாய் ஒழுங்குடன் அடுக்கி

கொண்டுவந் திங்கே கொடுத்தது முதலாய்
ஒன்றும் அறியேன்!'! என்றார் யூசுப்!

"திருடிய குற்றம் செய்தது மன்றிப்
பெரும்பொய் பேசவும் விரும்பு கின்றாயோ?

ஒருமுறை தவறு புரிந்த தற்காக
வருந்துதல் விட்டு மறுமுறை தவறே

செய்வதேன்?'! என்று சினந்து கூறினாள்.
"மெய்யும் பொய்யும் தெய்வமே அறியும்!"

என்றார் யூசுப். "எனக்கும் தெரியும்!"
என்றார் யாக்கூப். "எனக்கு மட்டும்

இதுதெரி யாதா?" என்று நகைத்தாள்!
"அதுசரி, இதற்கு அளிக்கும் தண்டனை

"எதுவெனச் சொல்வாய்" என்றார் யாக்கூப்.
"பொதுவினில் களவு புரிந்தவர் தம்மை

அடிமை யாக்குவதை அறியார் யாரோ?
கடிதினில் யூசுபை அடிமையாய்த் தாரீர்"
என்றாள். கேட்ட யாக்கூப் சிரித்தார்.

மாசறுங் குழந்தை யூசுபின் இடத்தில்
பாசங் கொண்டதனால் பறித்திட நினைத்து,

கள்வனாய்க் காட்டிக் காலம் முழுவதும்
செல்வனை அடிமை செய்திட முனைந்து

விதியின் வலிமையை முழுவதும் மறந்து
மதியின் பலத்தால் சதியினைச் செய்த

சோதரி இடத்தில் சொல்லுவார் யாக்கூப்:
"மாதவ மைந்தன் மாமணி யூசுப்

மீதினில் என்னிலும் மிகுந்த அன்பினுல்
பாதகச் செய்கையைப் பண்ணிடத் துணிந்தனை

ஆயினும் உன்னிடம் அருமை யூசுபை
தாயினும் மேலாய்ச் சகிப்புடன் தருகிறேன்''

என்ருர். கேட்டதும் இடிவிழுந் தவளாய்
நின்ருள். யாக்கூப் சென்ருர் அப்பால்.

கண்மணி யூசுபைக் கட்டித் தழுவி
''என்னுயிர் போம்வரை என்னிடம் இருப்பாய்

உன்னைப் பிரிந்திட ஒண்ணு தென்னுல்''
என்ருள், யூசுபை எடுத்துச் சென்ருள்.

——

# விதி செய்த வேலை

## இயல்—9

மதியின் பலத்தால் சதிசெய்து
மாநபி யாக்கூப் தம்மகனை
பதியில் தன்னுடை அடிமையெனப்
பறித்து வந்து ஈராண்டாய்
நிதியென யூசுபைக் காக்குங்கால்
நெஞ்சில் உண்மையை நினைப்பூட்டி
விதியோ சிரித்துத் தன்னுடைய
வேலையை மெள்ளத் துவக்கியதே.

உள்ளச் சுமையால் உடல்நொந்து
உயிரைப் பறிக்கும் கொடும்விதியைத்
தள்ளி வெல்லும் வலுவின்றிச்
சோதரர் யாக்கூப் தம்மிடத்தில்
சொல்லி அனுப்பினுள், அந்நேரம்
தொடர்ந்த விதிதன் பெருங்கரத்தால்
அள்ளிச் சென்றது அவளுயிரை
அழுது புலம்பினுர் யூசுபே.

பதறி வந்த யாக்கூபைப்
பார்த்ததும் உள்ளம் வெடித்திடவே
கதறிக் கண்ணீர் வடிக்கின்ற
கண்மணி யூசுப் தனையழைத்து
"எதற்குத் துயரம் என்மகனே!
எல்லாம் இறைவன் விதிப்பயனே!
இதற்குப் பணியா மதிஎதுவும்
இல்லை" என்ருர் யாக்கூபே!

...  ...

# அன்பு விளைத்த பகை

## இயல்—10

இறையைப் பணியும் நேரத்தே
எண்ணம் பார்வை செய்கையினை
ஒருமைப் படுத்தும் முறைபோலே
உணர்வு அனைத்தும் தன்னுடைய
அருமைப் புதல்வர் யூசுபிடம்
அடிமைப் படுத்தி அவரிடமே
பெருமை காணும் யாக்கூபின்
பேச்சும் மூச்சும் யூசுபே!

பன்னிரு மைந்தரி லொருமகவாய்ப்
பாரினில் பெற்ற யூசுபைத்
தன்னிரு விழிகளின் பேரொளியாய்த்
தனியொரு மகனாய் யாக்கூபு
எண்ணிக் காக்கும் நிலைகண்டு
ஏனைய மைந்தர் நெஞ்சினிலே
சின்னஞ் சிறுவன் யூசுபிடம்
சீற்றம் எழும்பச் செய்ததுவே.

பெற்ற புதல்வர் அனைவரிலும்
பேதம் ஏதும் கொள்ளாமல்
சற்றும் வேற்றுமை இல்லாமல்
சமமாய் நடத்தும் பெருங்கடமை
முற்றும் தவிர்த்தார் தந்தையென
மூத்தவ ரெல்லாம் கருதிடவே
பற்றிப் படர்ந்த பொருமைப் பேய்
பார்வையில் யூசுப் பட்டனரே.

சிந்தையில் களங்கம் அறியாத
சிறுவன் யூசுப் தன்னிடத்தே
தந்தையர் காட்டும் தனியன்பால்
சகோதரப் பகைமை சூழ்வதனை
எந்தவோ ரளவும் அறியாமல்
எவ்விதத் துயரும் கொள்ளாமல்
சந்ததம் தந்தை அருகினிலே
தங்கி மகிழ்ந்து வாழ்கின்றார்.




## இயல்—11

கடலினில் பிறந்து மலையினில் வளர்ந்து
கானகம் வானகம் அலைந்து
உடலினை வருத்தும் சோர்வினை மாற்றும்
ஓய்வினை விரும்பிய கதிரோன்
இடம்பல நோக்கி மேற்குநா டதனை
ஏற்றநல் லில்லமாய்த் தேர்ந்து
சுடர்விளக் கேற்றிச் சென்றனன். அதுதான்
தோன்றலர் தைமூஸின் நாடு.

எத்தனை நாடு எத்தனை மன்னர்
இத்தரை முழுவதி லிருந்தும்
அத்தனை நாடும் அரசையும் பார்த்தும்
அனைத்திலும் சிறந்தபொன் னாடாய்
இத்தனை காலம் மேற்கு நாடதனை
ஏற்றிடும் கதிரவன் பின்னே
பித்தனைப் போலோர் தினம்சென் றொருவன்
பெருவியப் படைந்ததைச் சொல்வேன்.

கொடையினிற் சிறந்த குடிகளின் வளத்தைக்
கூர்ந்திடும் போதினில் வண்ண
உடையணி பூண்டு உலவிடும் மாதர்
உவகையில் உள்ளமே இழந்து
நடையினை நிறுத்திக் கடைவிழி சாய்த்து
நடுத்தெரு நின்றனன், எதிரில்
படையணி வகுத்து வருவதைப் பார்த்துப்
பாதைவிட் டொதுங்கினன் பயத்தால்!

வஞ்சியர் கண்வலை விழுந்தனன், இதயம்
வாரி இழுத்திடும் வண்ணம்
நெஞ்சினை நிமிர்த்திப் பார்வையை எதிரில்
நிறுத்தியே செல்படை வீரர்
அஞ்சுதல் அறியா ஆண்மையை உணர்ந்து
அதிர்ந்திடும் போதினில் கதிரோன்
மஞ்சட்பொன் னொளியை மன்னவர் தைமூஸ்
மாளிகை முழுவதும் இறைத்தான்.

விழிகளைக் கூசும் பெருஞ்சுடர் வீசி
வெந்திடத் தகித்திடும் கதிரோன்
பொழிலிடைப் புகுந்து குளிர்முகம் அடைந்து
பூரண மதியமாய் மாறி
எழிலொளி வீசி இலங்கிடக் கண்டு
"எப்படி மாறினாய்?" என்றான்.
பொழிலினைக் காட்டி "மன்னர் தைமூஸின்
புதல்வியின் பார்வையால்!" என்றான்.

"கதிரவன் உனையே மதியமாய் மாற்றும்
கண்ணொளி படைத்தவள் முகத்தை
எதிரினில் காணும் வழிஎனக் குளதோ?"
என்றதும் கதிரவன் சிரித்து,
"அதிபதி தைமூஸ் திருமகள் சுலைகா
அருகினில் நெருங்க லா காதே!
மதிலினைக் கடந்து சோலையின் நடுவில்
மறைந்துநீ காணலாம்" என்றான்.

---

# எழிலைக் கண்டான்

## இயல்—12

நீரருவிச் சாரல்விழும் நெடியபசுஞ்
    சோலையிலே நெஞ்சி னிக்கும்
பேரமுதச் சுவையூட்டும் இன்னிசையைத்
    தோழியர்கள் பெய்து நிற்கச்
சீரழகைக் காட்டுகின்ற யாழிலிசை
    மீட்டுகின்ற சுலைகா என்னும்
பேரழகுச் செல்வத்தைப் பெண்வடிவில்
    கண்டுஅவன் பிரம்மிப் புற்றான்.

நடைகாட்டி, நகைகாட்டி, நல்லுணர்வு
    முகம்காட்டி, நாணம் காட்டிப்
படைகூட்டிப் பகையோட்டும் பார்வேந்தன்
    தைமூஸின் பண்பு காட்டிக்
கொடைகாட்டிக் குணம்காட்டி மடமயிலாய்ச்
    சேடியர்கள் குலுங்கி யாட
இடையொடிய நடனமிட இசைபாடும்
    சுலைகாவின் எழிலைக் கண்டான்.

பிறைநுதலில் மின்னுகின்ற அறிவொளியைக்
    கூறுவனோ? பெருமைக் கேற்ற
நிறைமதியின் திருமுகத்தில் நிலவுகின்ற
    பெருமிதத்தை நிகழ்த்து வனோ?
அருகழைக்கும் கருவிழியின் இதழ்நடத்தும்
    சிறுநகையின் அழகைக் கண்டோர்
உருகவைக்கும் பேரெழிலே சுலைகாவாய்
    உருவெடுத்து உதித்த தென்பான்!

ஆடுகின்ற மயிலுமிசை பாடுகின்ற
    குயிலுமென அங்கு மிங்கும்
ஓடிவிளை யாடுகின்ற சேடியரில்
    சுலைகாவும் ஒன்று சேர்ந்து

சூடுதற்கு நறுமலரைப் பறித்தெடுத்து
எழில்மாலை தொடுப்ப தற்குக்
கூடியதும் ஒருதோழி நெடுநேரம்
ஆகியதாய்க் குறிப்பிட் டாளே.

என்றைக்கு மில்லாத ஏதேதோ
எண்ணத்தால் எனது உள்ளம்
இன்றைக்கு எங்கெங்கோ அலைகின்ற
காரணத்தால் இதுவ ரைக்கும்
சென்றிட்ட நேரத்தை அறியாமல்
நின்றிட்டோம் சேடி யர்காள்!
சென்றிடுவோம், விரைவாகப் புறப்படுவீர்
எனச்சுலைகா செப்பி னாளே.

---

# கிழவியின் கண்டிப்பு

## இயல்—13

மின்னுகின்ற பாவையினைச் சூழ்ந்திருக்கும்
கருவிழியாய் மேனி நல்லாள்
பெண்ணரசி சுலைகாவைச் சூழ்ந்துவரும்
தோழியர்கள் பெருமை யோடு
பண்ணிசைக்கச் சுலைகாவும் புன்னகைக்கப்
பெண்வீரர் பாது காக்கக்
கன்னியர்கள் தங்குகின்ற காவல்மிகும்
மாளிகையில் கடிதில் சேர்ந்தார்.

இளவரசி சுலைகாவை இருக்கவைத்து
உடைமாற்றி இனிமை மிக்க
பலஉணவு பரிமாறும் கிழத்தாதி
தோழியரைப் பார்த்துச் சொல்வாள்
"நிலவுபொழி கின்றதெனில் பூங்காவில்
நெடுநேரம் நிற்க லாமோ?
அளவுண்டு அனைத்திற்கும்" எனக்கூறித்
துயில்வதற்கு அனுப்பி வைத்தாள்.

—

# கள்ளன் நுழைந்தான்

## இயல்—14

கண்சிமிட்டும் தாரகைகள் சூழ்ந்தி ருக்கக்
கனைப்பகற்றும் பூங்காற்றுச் சுழன்ற டிக்க
விண்முகட்டின் நடுவினிலே எழுந்த திங்கள்
விழிபறித்து ஏதேதோ மொழியு ரைக்கப்
பெண்ணரசி சுலேகா தன் பொன் இதழின்
புன்னகையால் திங்களொளி மங்கச் செய்து
கண்மலரின் இதழ் குவித்துநகை நிறுத்திக்
கனகமணி மஞ்சத்தே துயிலச் சென்ருள்.

தன்னரசி கண்ணயரச் செல்லக் கண்ட
தாதியரின் தலைவிசிறு சைகை செய்யப்
பொன்னிழையால் நெய்தெடுத்த பட்டுப் போர்வை
போர்த்துதற்கு ஒருதோழி எடுத்து வந்தாள்.
வண்ணஒளி சிந்துகின்ற மயிலி றகால்
வாஞ்சையுடன் மறுதோழி விசிறி நின்ருள்.
இன்னெருத்தி நறும்புகையைச் சுழல விட்டாள்.
எழிலரசி சுலேகாதன் முகம்ம லர்ந்தாள்.

முகம்மலர்ந்த சுலேகாவைத் துயில விட்டு
முறுவலிக்கும் அவள்முகத்தை உற்று நோக்கி
அகம்மலர்ந்த தோழியர்கள் விலகிச் செல்ல
அனைத்துயிரும் இரவுத்தாய் மடியில் தூங்கிச்
சுகங்காணும் நேரத்தில் விண்மீன் மட்டும்
தூங்காமல் சுலேகாவை நோக்கி நிற்க
நகர்காக்கும் காவலரும் உணர்வி ழக்கும்
நள்ளிரவுக் குளிர்காற்றுத் தவழக் கண்டான்.

கருங்குவளைக் கண்மூடிக் கிடந்த அந்தக்
கட்டழகி சுலேகாவின் இதயக் கண்கள்
சுருங்காமல் விழித்தெதையோ கண்டதே போல்
துடிதுடித்துப் பரபரக்க எழுந்து நின்று

அருகிருக்கும் விளக்கினொளி தூண்டி விட்டு
அப்பாலும் இப்பாலும் சுற்றிப் பார்த்து
ஒருவருமங் கில்லாமல் இருக்கக் கண்டு
உடல்சிலிர்க்கத் தோழியரை அழைக்க லானாள்.

"யாரங்கே? எல்லோரும் எங்குச் சென்றீர்?
யாரோஓர் கள்வனிங்கு நுழைந்து விட்டான்
பாரங்கே, எங்கேனும் பதுங்கி நிற்பான்!"
பதைபதைக்கும் சுலைகாவின் சப்தம் கேட்டு
"யாரிங்கே, துணிச்சலுடன் வந்தார்?" என்று
யாரோஓர் தோழிகுரல் கொடுத்து வந்தாள்.
"பாரிங்கே, பாரங்கே, எங்கும் பாராய்
பார்த்துவிடில் உடன்பிடித்து வாராய்" என்றாள்.

சுலைகாவின் சொல்கேட்டு அங்கு மிங்கும்
சுழன்றோடித் தோழியர்கள் சிலரைக் கூட்டி
கலைக்கூடம், வெளிமாடம், நடன சாலை,
கண்காட்சிப் பொருளில்லம் யாவும் தேடித்
தலைவாசல் வரைவந்தார் அதுவும் மூடித்
தாழிட்டு இருப்பதையும் பார்த்து விட்டு
சுலைகாமுன் னோடிவந்த தோழி யர்கள்
துரிதமுடன் அபாயமணி அடிக்கச் சொன்னார்.

"இதுவேளை அபாயஒலி எழுப்ப வேண்டாம்
எழுப்பிவிடில் காவல்புரி வீர ரெல்லாம்
பொதுவாக மிரண்டோடி வருவார், வந்தும்
போய்விட்ட கள்வனையே பிடிக்கப் போமோ?
பதுங்கிநின்று பிடித்திட்டார் எனினும் என்னைப்
பார்ப்பதற்கும் அனுமதியார் அதுவு மன்றி
வதைத்திடுவார் அவனுடலைச் சிதைத்தொ ழிப்பார்.
வடிவழகன் துயர்படயான் சகியேன்" என்றாள்.

கள்வனுக்கு இரங்குகின்ற சுலைகா நெஞ்சக்
கருத்தினையே அறியாத தோழி யர்கள்
"நள்ளிரவில் கொள்ளையிடும் கள்வ னுக்கா
நாமிரக்கம் காட்டுவது?" என்று கேட்க,

"கள்வனென வந்தாலும் நெஞ்சைக் கொள்ளை
கொள்ளுகின்ற ஆணழகன் அவனைக் கண்டால்
உள்ளமதை நீங்களுமே இழந்து போவீர்
உண்மைஇது!" எனச்சுலைகா உரக்கச் சொன்னாள்.

இளவரசி எண்ணத்தைப் புரிந்து கொள்ள
இவ்வளவு போதாதா தோழி யர்க்கு!
'கலகலெ'னச் சிரித்திட்டார் குறும்பாய் நோக்கிக்
"கனவுக்கா இத்துணை ஆர்ப் பாட்டம்?" என்றார்.
இளவரசி சுலைகா வோமுகம் சுழித்து
"எல்லாமும் உண்மையடி; கனவே அன்று!
களவெடுக்க வந்ததுவும் கண்டேன் என்று
கணப்பொழுதில் மறைந்ததுவும் கண்முன்"என்றாள்.

"கண்முன்னே கணப்பொழுதில் மறைந்தா னென்றால்
கைதேர்ந்த கள்வனோ?" என்று ளொருத்தி.
இன்னொருத்தி "மந்திரமும் கற்றோ னாக
இருப்பானோ?" எனக்கேட்டாள்; மற்றோர் தோழி
"பெண்ணொருத்தி துயிலுமிடம் துணிந்து செல்வோன்
பெருங்காமக் காதகனாய் இருப்பா" னென்றாள்!
"என்னவென இருந்தாலும் அவனைக் காண
என்னிதயம் விரும்பும்"எனச் சுலைகா சொன்னாள்.

விழிஅழகி சுலைகாவின் விருப்பம் கேட்டு
வியப்புற்றுத் தோழியர்கள் திடுக்கம் கொள்ளக்
கிழத்தாதி அங்குவந்தாள். நடந்த வற்றைக்
கேட்டறிந்து "அத்தனையும் கனவே!" என்றாள்.
மொழிகேட்ட சுலைகாவோ முகம் சிவந்து
முணுமுணுத்து கிழத்தாதி தனை விழித்து
"விழியாலே கண்டதற்கும் கனவி னுக்கும்
வேற்றுமைகள் யானறிவேன்!" எனஉ ரைத்தாள்.

"உண்மையிலே கனவன்று நனவே என்றால்
உங்கள் முகம்கண்ட அவன்ஓட மாட்டான்.
அண்மையிலே நெருங்கிடுவான் உயிர்போ னாலும்
அழகொளிரும் மலரடியில் வீழ்ந்து சாவான்.

கண்படைத்த துறவியையும் கலங்க வைக்கும்
கட்டழகின் முழுவடிவைக் கண்ட பின்னும்
சென்றுவிட்டான் என்றக்கால் கனவே யாகும்''
தெளிவாகக் கிழத்தாதி விளக்கிச் சொன்னாள்.

''கொண்டவளே தன்கணவன் என்னும் போது
கூடிநிற்போர் அல்லவெனச் சொல்வ தேபோல்
கண்டவளே கனவல்ல என்னும் போது
காணாத நீங்கள்வெறுங் கனவென் கின்றீர்!
மண்டலமே மயங்குகின்ற எழில்ப டைத்த
வடிவழகன் எனைப்பார்த்தான்; நானும் பார்த்தேன்!
உண்மைதான் ஒப்பவிலை எனினும் வீணில்
உபதேசம் செய்யாதீர்!'' எனக்க டிந்தாள்.

''ஏதுக்கு இங்கின்னும் நிலையா யுள்ளீர்?
எல்லோரும் சென்றிடுவீர்!'' என்றி ரைந்து,
காதுக்குள் சுலைகாவுக் கேதோ சொல்லிக்
கைபிடித்துக் கிழத்தாதி அழைத்துச் சென்றே
''ஏதுக்கும் தனிமையிலே இருங்கள், மீண்டும்
இங்கேயவர் வந்தாலும் வரலா'' மென்று
தோதுக்குத் தக்கபடிச் சொல்லி விட்டுத்
தோழியரைப் போன்றவளும் பிரிந்து சென்றாள்.

---

# ஏமாற்றம்

## இயல்—15

வருவான் வருவான் எனநம்பி
    வழிமேல் வைத்த விழிசற்றும்
திருப்பா திருந்தாள் நெடுநேரம்;
    திடுமென் றெழுந்து சோலையிடை
ஒருக்கால் இருப்பான் எனஎண்ணி
    ஓடிப் பார்த்தாள், மனம்சோர்ந்து
வெறுப்பாய் மஞ்சம் சேர்ந்தாளே!
    விழிகள் மூடிச் சாய்ந்தாளே!

படுத்தாள் எனினும், அவளுள்ளம்
    படுத்துக் கிடக்க விடவில்லை!
தொடுத்த ஆசை நினைவாலே
    துவண்டு புரண்டு களைத்தாளே!
அடுத்து ஏதோ 'சலசல'க்கும்
    அரவம் கேட்டு ஆவலுடன்
துடித்தே எழுந்தாள் காற்றல்லால்
    சுற்றிலும் ஏதும் காணவில்லை!

ஏக்கம் நிறைந்த சுலைகாவின்
    இருவிழி சிவக்கத் துயரூட்டித்
தூக்கமும் அவளைக் கைவிட்டுத்
    தொலைந்தது எங்கோ? ஒருக்காலை
ஆக்கம் மிகுந்த அவனேதான்
    அதையும் கவர்ந்து சென்றனனோ?
நோக்கம் எதையும் சொல்லாமல்
    நொடியில் மறைந்ததை நினைவுற்றாள்.

"சொன்னால் மறுப்பாள் எனநம்பிச்
சொல்லும் துணிவை இழந்தானோ?
பின்னால் வரலாம் எனஎண்ணிப்
பேசா தகன்று போனானோ?
தன்வாய் மொழியை என்னுள்ளம்
தாங்கா தென்றே நினைத்தானோ?
கண்வாய் பொத்திக் கிடந்தவளைக்
கவர்ந்து செல்லவும் பயந்தானோ?"

"கன்னம் வைத்தவன் பொருளெதையும்
கைப்பற் ருமல் செல்வானோ?
எண்ணம் ஏதும் இல்லாமல்
இங்கே அவனேன் வரவேண்டும்?
கண்ணும் கண்ணும் பேசியபின்
கனிவாய்ச் சொற்கள் வேண்டாவோ?
இன்னும் பற்பல எண்ணத்தால்
இதயம் துடித்தாள் சுலைகாவே!

சோர்ந்து கிடக்கும் சுலைகாவின்
துயரம் காணச் சகியாமல்
ஊர்ந்து சென்றனள் இரவுத்தாய்!
ஒளியைப் பெற்றது கீழ்வானம்!
தேர்ந்த முத்தாய்ப் பனித்துளிகள்
சிரிக்கும் மலரில் மின்னிடவே
பார்த்து வியந்த புள்ளினங்கள்
பண்ணிசை பாடி மகிழ்ந்தனவே!

தூங்கி எழுந்த தோழியர்கள்
சுலைகா மஞ்சம் தனைச்சூழ்ந்து
வீங்கி இருக்கும் முகம்கண்டு
வெகுவாய்த் துயரம் அடைந்தனரே!
ஏங்கி உயர்ந்து தாழ்கின்ற
எழில்மிகும் சுலைகா மார்பினிலே
தேங்கி அழுத்தும் கொடுந்துன்பம்
தெரிந்து வருந்தி எழுப்பினரே.

தூக்கத் திருக்கும் தனைநெருங்கித்
துணிவாய் யாரோ எழுப்புவதை
நோக்கத் துணிந்தாள் என்றாலும்
நொடியில் மாற்றி, அவனேதான்
காக்க வந்தான் என நம்பிக்
கண்கள் மலர்ந்த சுலைகாவைத்
தாக்கப் பாய்ந்தது ஏமாற்றம்
தாதியர் தாங்கிப் பிடித்தனரே!

---

# யூசுபின் கனவு

## இயல்—16

தூங்கு கின்ற யூசுபின்
சுடர்மு கத்தில் புன்னகை
தேங்கி நிற்கக் கண்ட தும்
தந்தை யாக்கூப் சிந்தையில்
ஓங்கி நின்ற இன்பமே
ஒருக ணத்தில் வீழ்ந்திடத்
தூங்கி மீண்ட யூசுபு
துரித மாகக் கூறினர்.

"எந்தை யேஇது வரைக்கும்
என்றும் காணுப் புதுமையாய்
விந்தை யான கனவுகண்டு
விழித்தெ ழுந்தேன்!" என்றனர்.
அந்தச் செய்தி கேட்டதும்
அதிர்ச்சி யுற்ற யாக்கூபு
சிந்தையில் கலக்க மின்றித்
தெளிவாய்ச் சொல்லக் கூறினர்.

"வானம் பூமி ஆழியும்
வனப்பு கொண்டி லங்கிடக்
காணும் என்றன் தோளினில்
கதிரோன் வந்தே அமர்ந்தனன்.
வானு லாவும் மதியமும்
வலிய வந்தென் மடியினில்
தானும் தங்கிக்கொள் வதற்குச்
சம்ம தத்தைக் கேட்டது."

"பறந்து வந்த தாரகைகள்
பதினொன் றும்என் பாதத்தில்
சிறந்த முத்தம் தந்தபின்
சிரங்கு னிந்து நின்றன!
மறைந்து மண்ணில் தங்கிடும்
மட்டில் லாத செல்வங்கள்
நிறைந்த பேழை கோடிகோடி
நேரில் வந்து சேர்ந்தன!"

ஒன்று பத்து நூறென
ஓடி வந்த மாந்தரில்
என்றும் காணு மன்னரும்
இருக்கக் கண்டேன்!" என்றிடும்
தன்ன ருமைப்பு தல்வனைத்
தாவித் தழுவும் யாக்கூபு
"இன்னும் வேறு யாருக்கும்
இதைச்சொ லாதே!" என்றனர்.

தந்தை வார்த்தை கேட்டதும்
தயங்கி நின்ற யூசுபு
"சொந்தச் சோதரர் இடத்தும்
சொல்லல் குற்ற மாகுமோ?"
மைந்தன் வார்த்தை கேட்டதும்
மனமே நொந்து யாக்கூபு
"எந்த நேரமும் எவர்க்கும்
இயம்ப லாகா!" தென்றனர்.

தந்தை யாக்கூப் செய்கையில்
சந்தேகம் கொள்ளா யூசுபு
சொந்த மூத்த மைந்தருக்கும்
சொல்ல வேண்டா மென்றிடும்
அந்த வார்த்தை கேட்டதும்
அதனை முழுதும் ஒப்பினர்.
இந்தக் கனவி லேதோ மர்மம்
இருக்க லாமென் றுய்ந்தனர்!

எந்த மர்மம் ஆயினும்
    இரண்டு தட்டை நீங்கிடில்
அந்தச் செய்தி அம்பலமாய்
    ஆன தென்ற உண்மையைச்
சிந்தையில் நினைத்தி டாமல்
    திரையி டவே முயன்றனர்.
அந்தச் செய்தி மறைவி ருந்தே
    அறிந்தான் 'ஷம்ஊன்' என்பவன்!

——

106969.

[யாக்கூப் (அலைஹி) அவர்களின் முந்திய தாரத்துக்குப் பிறந்த பத்துப் புதல்வர்களில் 'ஷம்ஊன்' 'ரூபில்' 'யஹூதா' 'லாவான்' 'ரூபாலூன்' முதலியவர்கள் மூத்தவர்களாவர்.]

# சகோதரப் பகை

## இயல்—17

தந்தையர் யாக்கூப் தம்பி யூசுபுடன்
தனிமையில் பேசுதல் அறிந்து
வந்த 'ஷம்ஊன்' திரைமறை வினிலிருந்து
வார்த்தைகள் அனைத்தையும் கேட்டுத்
தந்திரமாகத் தந்தையைக் கவரத்
தம்பி யூசுபுசொல் மாய
மந்திரக் கனவைச் சோதரர்க் குரைத்து
மாற்றமே தேடிட விரைந்தான்!

தன்னுடைச் சோதரன் 'ரூபிலை' அழைத்துச்
சகலமும் விளக்கிய 'ஷம்ஊன்'
இன்னமும் 'யஹூதா' 'லாவா' னிடத்தும்
இரண்டொரு பொய்களும் கலந்து
சொன்னபின் ரூபா லூனையும் அடைந்து
சோதரர் அனைவரும் சேர்ந்து
சின்னவன் யூசுப் செயலினைத் தடுக்கும்
திட்டமே வகுத்திட முனைந்தார்!

"சந்திரன் சூரியன் தாரகை அனைத்தும்
தாளினில் பணிவதாய்ச் சொல்லித்
தந்தையர் யாக்கூப் மதிப்பினில் உயரும்
தந்திரம் மிகுபயல் யூசுப்

சிந்தையைப் பிளப்பதும் தகு''மென 'லாவான்'
சீற்றமாய்ச் சாற்றிடும் போதில்
"அந்த வேலைநமக் காகாது'' என்று
அறநெறி கூறினன் 'யஹூதா.'

சோதரன் 'யஹூதா' சொல்லறம் கேட்டுத்
துடிதுடித் தெழுந்தனன் 'ரூபில்'
"பாதகன் யூசுப் 'பாதத்தைப் பணியும்
பதினொரு தாரகை' என்று
சோதரர் நமையே சுட்டினன் அவனின்
துடுக்கினை ஒடுக்குதல் முறையே.
ஆதலா லினியும் பாம்பினுக் கிரங்கல்
ஆகாது'' என்றல றினனே!

அலறிடும் 'ரூபில்' அருகினில் நின்றே
அனைத்தையும் 'ரூபாலூன்' ஏற்றே
"உளறிடும் யூசுப் கனவினை நமக்கும்
உரைத்திட மறுத்தனர் தந்தை
களங்கமே கொண்டா ராதலா லினிமேல்
காரியம் யாவையும் அவர்க்கு
விளங்கிடா வண்ணம் யூசுபைக் கடத்தி
வேதனைப் படுத்துவோம்'' என்றான்.

---

# நினைப்பும் நடிப்பும்

## இயல்—18

கெட்ட மதியினர், கீழ்மதி கொண்டனர்;
திட்ட மிட்டனர் யூசுபைத் தீர்த்திட
வட்ட மிட்டனர் வழிமுறை ஆய்ந்தனர்;
திட்ட வட்டமாய்ச் செயல்படத் துணிந்தனர்!

தம்பியின் நன்மையே தம்முடை நன்மையாய்
நம்புதல் போலவே நடித்திட முனைந்தனர்;
வெம்பகை மறைத்தனர் வெறுத்திடும் யாக்கூபு
தம்பகை வென்றிடத் தம்பியைப் புகழ்ந்தனர்!

மிக்கநல் லன்புடன் மேன்மையாய் யூசுபைப்
பக்கமே பார்த்திடில் பல்லினைக் காட்டுவர்!
துக்கமாய் யூசுபு சோர்ந்திடக் கண்டிடில்
அக்கறை கொண்டவர்க் காறுதல் கூறுவர்!

விந்தையில் விந்தையாய் வெறுப்பினை மறைத்தவர்
சந்ததம் யூசுபைத் தழுவியே மகிழ்ந்தனர்.
மைந்தரின் செய்கையில் மாறுதல் கண்டதும்
சிந்தையில் யாக்கூபு திடுக்கமே கொண்டனர்!

எவ்விதக் களங்கமும் ஏற்றிடார் போன்றவர்
செவ்வையா யூசுபைச் சேர்த்துற வாடினர்.
இவ்விதம் நேசமாய் இணைந்துதம் தந்தையைக்
கவ்விய ஐயமே கடிதினில் களைந்தனர்!

மாசறும் யூசுபின் மாண்புறும் நடத்தையைப்
பேசுவர்; இனித்திடும் பேச்சினைப் புகழுவர்!
தேசுறும் தம்பியின் சிரிப்பெழில் கூறியே
வீசினர் வலையினை; வீழ்த்தினர் தந்தையை!

தூற்றிடு கின்றவர் சூழ்ச்சியைக் காணலாம்
மாற்றியே சொல்பவர் மனநிலை உணரலாம்!
போற்றிடு வோரையும் புன்னகைப் போரையும்
ஏற்றிடு வார்நிலை எய்தினர் யாக்கூபே!

தந்தையைப் போலவே தம்பியூ சுபும்தம்
தந்திரப் பொறியினில் தடுக்கியே வீழ்ந்திடச்
சிந்தையின் சதியினைச் சீக்கிரம் தொடங்கிடத்
தந்தையை நெருங்கினர் சோதரர் ஓர்தினம்.

என்றுமில் லாததாய் இன்றுதம் ஆடுகள்
நன்றாக மேய்ந்ததை நவின்றனன் ரூபிலே;
குன்றுமே லுலாவிய குள்ள நரியினைக்
கொன்றுதான் மாய்த்ததைக் கூறினன் ஷம்ஊனே!

"இங்குஅல் லாமலிந் நாள்வரை வேறிடம்
எங்ஙும்செல் லாமலே இங்கேயே! யூசுபு
தங்கியே நிற்கிறான்; தந்தையே ஓர்முறை
எங்களோ டனுப்புவீர்" என்றனர் சோதரர்!

ஓடி யாடாமல் ஓய்ந்து கிடப்பதால்
வாடிப் போகிறான் வனப்புறும் யூசுபு
ஆடு மேய்க்கும் அடவிக் கனுப்பிடில்
பாடும் புள்ளினம் பார்த்து மகிழுவான்!

தேங்கனி கள்பல வும்செம் மாதுளைத்
தீங்கனி யும்மேதே விட்டிட உண்டபின்
நாங்கள் யாவரும் நற்கனி யூசுபைத்
தீங்கு சூழாமல் திரும்பவும் சேர்க்கிறோம்.

(வேறு)

மைந்தரின் அழைப்பை மறுத்தார் யாக்கூப்;
தந்தையின் முடிவைத் தடுத்தார் யூசுப்
"இந்தஓர் நாளே என்னையும் அங்குத்
தந்தையே அனுப்புவீர் தமயன் மாருடன்."

கெஞ்சினார் யூசுப் கேட்டதும் யாக்கூப்
அஞ்சினார் ஆயினும் அனுப்பிட ஒப்பினார்!
"வெஞ்சின ஓநாய் வெகுவாய் இருக்கும்
துஞ்சாது யூசுபைச் சூழ்ந்தே இருப்பீர்!"

என்றார் யாக்கூப் இதயம் களித்து
நன்றென ஒப்பினார், நலமுடன் மீள்வதாய்ச்
சென்றார், சென்ற திசையினை நோக்கி
நின்றார் யாக்கூப்; நெஞ்சினால் வாழ்த்தினார்.

# சுலைகாவின் துயரம்

## இயல்—19

தேய்ந்திடும் நினைவால் வாடிடும் மதியைச்
சூழ்ந்திடும் தாரகை போன்று
பாய்ந்திடும் உணர்வால் பதறிடும் சுலைகா
படுக்கையைச் சூழ்ந்த தோழியர்கள்
காய்ந்திடும் சுலைகா கருவிழி நோக்கிக்
கடுந்துய ரோடு கொடுஞ்சினமும்
தோய்ந்திடக் கண்டு பெருந்திகில் கொண்டு
தோழியர் மௌனமாய் நடந்தார்.

சுந்தர வதனம் சுருங்கிட, நுதலில்
துன்பத்தின் கோடுகள் நெளியச்
சந்திர முகத்தில் சுடுங்கனல் பறக்கத்
தாதிகள் நோக்கிய சுலைகா
"என்றனை மீண்டும் நெருங்கினீர் என்றால்
என்னதான் நடக்குமோ அறியேன்!
சொந்தஎன் வழியில் குறுக்கிட யாரும்
துணிந்திடில் துயர்மிகும்" என்றாள்.

மன்னவர் தைமூஸ் திருமகள் சுலைகா
வார்த்தையைத் தோழியர் கேட்டே
இன்னமும் இதனை அரசர்க்கு இயம்பா
திருப்பது தவறெனத் தேர்ந்து
சென்றனர் நேரே வேந்தரின் சமுகம்.
சுலைகாவோ, தனிமையை வரித்து
நின்றனள் அங்கே கிழத்தாதி நுழைந்து
நிலைத்துள அமைதியைக் கலைத்தாள்.

"பெண்களின் வனப்பிற் குவமையாய் அமையும்
பேரெழில் திரண்டொரு உருவாய்க்
கண்களைக் கவர்ந்து கருத்தினில் நிறைந்து
காண்பவர் கேட்பவர் எவரும்
திண்ணமாய் மயங்கச் செய்திடும் உங்கள்
சிந்தையைப் பிசைந்திடக் கனவில்
மன்னவர் எவர்தாம் வந்தனர்? மயக்கி
மறைந்தவர் பெயரென்ன?" என்றாள்.

தன்னையே வளர்த்த கிழவியின் கேள்வி
தடுத்திட இயலாத சுலைகா
"கண்களை நோக்கிக் கருத்தையும் சலக்கிக்
கபடமாய் மயக்கிய அவனை
முன்னமே எங்கும் கண்டது மில்லை
முதல்முறை யாகவே வந்தே
என்னிடம் தனது இருப்பிடம், பெயரை
இயம்பாது சென்றனன்" என்ருள்.

இருப்பிடம், பெயரோ அறியாத அவனுக்
கேங்கியே நிற்பது முறையோ?
விருப்புடை யோனுய் வந்தவ னுனல்
மீண்டும் மீண்டும் வருவானே.
பொறுப்புடை யோனுய் வந்தவ னுனல்
புகுந்தபின் மறைந்திருப் பானு?
வெறுப்பதற் குரியோன் அவன்நினை வழிக்க
வெகுவாக வேண்டினுள் கிழவி.

என்னிளம் நெஞ்சை இருப்பிட மாக
ஏற்றபின் இன்னெரு இடத்தைத்
தன்னுடை இல்லம் என்றுரைப் பானே?
சாற்றிடில் அதுதவ றலவோ?
"உன்னிடம் அவன்பெய ரிருப்பிடம் தேட
உரைத்தது போலவே இனியும்
என்னிடம் ஏதும் கூறிட வேண்டாம்
"ஏகுக" என்றனள் சுலைகா.

"எத்தனை நாட்கள் எத்தனை திங்கள்
இப்படி ஏங்குவ?" தென்ருள்.
எத்தனை காலம் ஏங்கினும் உனக்கு
என்னவோ?" என்றனள் சுலைகா.
இத்தனை ஆண்டும் இப்படித் தன்னை
எதிர்த்திடாச் சுலைகாவின் வார்த்தை
அத்தனை யும்அவ ளுசையின் விளைவென்
றறிந்தகன் ருள்கிழத் தாதி!

---

# யூசுப் எங்கே?

## இயல்—20

நெற்றிக்கே நேர்கி ழக்கில்
கதிரவன் நின்ற போது
நற்றவச் செல்வன் தன்னை
அடவிக்கு நடத்திச் செல்ல
முற்றிலும் ஏற்ற யாக்கூப்
உச்சியில் வெய்யோன் நின்று
சுற்றிலும் வெப்பக் காற்றைச்
சுழற்றிடச் சிந்தை வெந்தார்!

காலையில் சென்ற மைந்தர்
கடும்பகல் கடத்தி விட்டே
மாலையில் திரும்ப லாகும்
என்பதை மறந்த தேபோல்
சோலையும் பாலை யாகச்
சுட்டெரிக் கின்ற வெப்ப
வேளையில் யூசுப் மேனி
வேகுமே எனப்ப யந்தார்.

பதறிடும் யாக்கூப் நெஞ்சப்
பயத்தினை அகற்று தல்போல்
கதறிடத் தகிக்கும் வெப்பக்
கதிரவன் முகம் மறைக்கச்
சிதறிய மேகம் ஒன்றுய்த்
திரண்டிடக் கண்டு வெய்யோன்
பதறியே மேற்கி லோடிப்
பதுங்கினன் முகம்சி வந்தான்.

மாலையும் மெல்லத் தேய்ந்து
மங்கிடக் கண்ட யாக்கூப்
சோலையைக் கடந்து மைந்தர்
சென்றுள அடவிக் கேகும்

சாலையின் முனையில் நின்று
தனிமையில் மனம்த விக்கும்
வேளையில் எதிரில் யாரோ
வேகமாய் வருதல் கண்டார்.

வந்தவர் முன்னால் சென்று
வழியினில் நீங்கள் யாரும்
எந்தனின் மைந்தர் தம்மை
எங்கேனும் கண்ட துண்டோ?
சிந்தையே கலங்கி யாக்கூப்
திகிலுடன் கேட்க அன்னோர்
"மைந்தரோ மற்றும் யாரோ
வழியினில் காணோ" மென்றார்.

இருளிடை நின்ற யாக்கூப்
இதயமும் இருளக் கண்கள்
மருண்டிட வானை நோக்கி
மக்களின் நன்மைக் காக
இருகரம் விரித்து ஏக
இறைவனை வேண்டி நெஞ்சம்
உருகினார்; மின்னல் வெட்டி
உறுமிய திருண்ட வானம்!

நெளிந்திடும் மின்னல் ரேகை
ஒளியினில் நெடுந்தூ ரத்தில்
தெளிவுடன் பலரைக் கண்டு
சிந்தையில் அமைதி கொண்டு
களிப்புடன் "யூசுப்" என்று
கதறினார் மீண்டும், மீண்டும்!
ஒளிமிகும் விண்மீன் ஒன்றே
உதிர்ந்தது அதிர்ந்தார் யாக்கூப்.

கிழக்கினில் நரிகள் ஓலம்
கேட்டது தெற்கில் ஓநாய்
முழக்கிட, வடக்கி ருக்கும்
மொட்டைமா மரத்தி ருந்து

பழக்கமாய் ஆந்தை ஒன்று
பயங்கரக் குரலெ ழுப்ப
வழக்கமாய் "யூசுப்" என்று
வாய்விட்டே அலற லானார்.

அருகினில் நெருங்கி விட்ட
அவர்களில் 'ஷம்ஊன்' என்போன்
இருளினில் தந்தை சப்தம்
எழுவதைக் கேட்டுத் துன்பம்
பெருகிடும் குரல்கொ டுத்தான்
பெரியவன் 'ரூபில்' பாய்ந்தே
அருகினில் வந்து யாக்கூப்
அடிவீழ்ந் தரற்ற லானான்.

கண்ணுதிர்க் கின்ற நீரைக்
கரங்களால் துடைத்த வாறே
ஒன்றும்பே சாது நிற்கும்
ஒவ்வொரு மைந்த ராகச்
சென்றுபார்த் திட்ட யாக்கூப்
திடுக்கத்தால் குரல்ந டுங்க
"என்னுயிர்ச் செல்வ மான
யூசுபு எங்கே?" என்றார்.

துடித்திடும் தந்தை நோக்கித்
துயருடன் 'ரூபில்' தொண்டை
அடைத்திட நடுங்கி "ஓநாய்
அழகுறும் யூசுப் தன்னைத்
துடித்திடக் கடித்துக் கொன்று
தூக்கியே சென்ற தென்றான்;
வெடித்தது பூமி, வானம்
வீழ்ந்தது யாக்கூப் கண்ணில்.

கடித்திடும் வரையும் நீங்கள்
கைகட்டி நின்று யூசுப்
துடித்திடக் கண்ணால் காணும்
துணிச்சலெவ் வாறு பெற்றீர்..."

முடித்திட வில்லை யாக்கூப்
முந்தினன் 'ரூபில்' "நாங்கள்
பிடித்திட முயன்றோம் ஓநாய்
பிளந்தது யூசுப் நெஞ்சை!"

"பார்த்திடச் சகித்தி டாமல்
பதறியே விழிகள் பொத்தி
வேர்த்திட நின்றோம் யூசுப்
வீரிட்டு உயிர்து றக்க
நேரினில் கண்டு யாங்கள்
நிலைகுலைந் திருக்க ஓநாய்
சீறியே பாய்ந்தி ழுத்துச்
சென்றது" என்று சொன்னான்!

"எழில்மிகும் தம்பி யூசுப்
இன்னுடல் கடித்த ஓநாய்
கிழித்தெறிந் திட்ட சட்டை
கிடந்தது எடுத்து வந்தோம்."
மொழிந்த 'ஷம்ஊன்!' அதையே
கொடுத்தனன், முகத்தை மூடி
வீழுந்தனர் யாக்கூப், தூக்கி
விரைவினில் இல்லம் சேர்த்தார்!

# சுலைகாவின் நம்பிக்கை

## இயல்—21

காலத்தின் இருவிழியின் இமைப்பாய்த் தோன்றும்
கணக்கற்ற இரவுபகல் காத்து நிற்கும்
ஞாலத்தின் பேரழகி சுலைகா அன்றும்
நள்ளிரவு வரையினிலும் தனித்தி ருக்கச்
சீலத்தின் பேரரசன் தைமூஸ் அங்கே
திரைமறைவில் நின்றிருப்ப தறிந்தி டாமல்
வேலொத்த விழிமூடி மனக்கண் முன்னே
வீற்றிருக்கும் ஆணழகன் நோக்கிச் சொல்வாள்.

"நானாக அழைக்காமல் வலிய வந்து
நள்ளிரவில் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு
நானாக விரட்டாம லிருக்கும் போது
நாடாள்வோன் மகளென்ற அச்சத் தாலே
தானாக வந்ததுபோல் உடன்ம றைந்து
தனிமையினில் துடிதுடித்துத் தவிக்கச் செய்து
வீணாக எதற்கென்னை வருத்த வேண்டும்
விளம்பிடுவீர்!" எனக்கண்ணீர் சுரக்கக் கேட்டாள்.

"கன்னங்கள் வழியுருண்டு உடையும் என்றன்
கண்ணீரின் முத்துக்கள் கண்ட பின்னும்
உன்னுள்ளம் இளகாம லிருப்ப தென்றால்
'உலகத்து அரக்கரது தலைவ னாநீ?
பெண்ணுள்ளம் படும்பாட்டை அறிந்தி டாமல்
பேசாமல் நிற்கின்றாய் இனியும் நின்றால்
என்னுள்ளம் தாங்காது வெடித்துப் போகும்
இதுதானும் எண்ணமதோ?" என்று கேட்டாள்.

அலைமோதும் இளம்நெஞ்சில் நிறைந்த நீயே
அச்சமின்றி என்னருகில் வருவ தற்குத்
தலைவாசல் திறந்துவைத்துக் காவல் போக்கித்
தாதியரை உமையழைத்து வழியும் காட்ட

நிலையோரம் பலநாட்கள் நிற்க வைத்தேன்.
நீள்விழியும் நீர்சுரக்க எனை ஏ மாற்றிக்
குலையாத நெஞ்சுறுதி குலைத்தே ஆசைக்
கொடுந்தீயில் எனைத்தள்ளிக் கருகச் செய்தாய்.

கணப்பொழுதும் மறவாது கண்ணீர் சிந்திக்
கருத்தழிந்து நான்வருந்த விரும்பிட் டாயோ?
மனப்பொருத்த மில்லையென்று மலைத்திட் டாயோ?
வஞ்சகிகள் கண்வலையில் விழுந்திட் டாயோ?
எனதருகில் வரும்உமையே தடுப்பார் யாரும்
இல்லையென்ப தறியாமல் இருந்திட் டாயோ?
மனம்விட்டு வாய்திறந்து எதற்கு என்று
மறைக்காமல் சொல்லிடுவீர்'' என்று கேட்டாள்.

விண்ணகத்தே ஒளிப்பிழம்பாய் அமர்ந்திட் டீரோ?
விரிகடலின் அலைமடியில் துயின்றிட் டீரோ?
வண்ணமலர்ப் புன்னகையின் அழகு தன்னில்
வரும்வழியில் மனம்மயங்கி நின்றிட் டீரோ?
மண்ணகத்தே மறைந்திருக்கும் வைரம் போன்று
மாசற்ற இதயத்தில் ஒளிப ரப்பி
என்னகத்தை நின்னகமாய் ஆக்கி விட்டு
எதற்காகப் பயந்தோட வேண்டு'' மென்ருள்.

இத்தனைக்கும் யாதொன்றும் பதில்சொல் லாது
எதிரினிலே காணுகின்ற அவனைப் பார்த்துக்
"கத்துகிறேன் அத்தனையும் செவியி லேற்றுக்
கற்சிலையாய் நிற்கின்ருய்! வாய்தி றந்தால்
முத்துதிர்ந்து போகுமென அதரம் சேர்த்து
மூடினையோ? இல்லைமுழுச் செவிடோ? அன்றி
எத்தினமும் வாய்பேசா ஊமை யோநீ
எப்படிநீ இருந்தாலும் ஏற்பேன்!'' என்ருள்.

அருகினிலே காலடியின் அரவம் கேட்டு
அவனேதான் தனைநெருங்கித் துயர்து டைக்க
வருகிருன் எனநினைத்த சுலைகா நெஞ்சில்
வகைவகையாய்ப் பல்லுணர்வும் பொங்கிப் பாய
ஒருகணத்தில் விழிதிறந்தாள் தந்தை கண்டாள்.
ஓவென்று கதறியவர் காலில் வீழ்ந்தாள்.

பெருகிவரும் கண்ணீரில் மிதக்கும் துன்பம்
பேரழகி படுந்துயரைச் சொல்ல லாச்சு!

திருமகளார் சுலைகாவின் நிலையைக் கண்டு
சிந்தையினில் பெருந்துயரம் கொண்ட தைமூஸ்
ஒருநொடியில் வாரிஎடுத் துச்சி மோந்தே
ஒளியிழந்த அவள்விழியை உற்று நோக்கி
"அருமைமிகும் திருமகளே! உனக்கு நேர்ந்த
அத்தனையும் யானறிவேன்! நீவி ரும்பும்
பெருமைபெறும் அவனெங்கே இருந்த போதும்
பிடித்துவரச் செய்கின்றேன், 'அஞ்சேல்!'" என்றார்.

அவனுடைய இருப்பிடத்தைப் பெயரை யேனும்
அறிந்திருந்தால் ஒருநொடியில் கொண்டுசேர்ப்பேன்
அவனுடைய அடையாளம் ஏதும் சொன்னால்
அதைக்கொண்டே பிடித்துவரச் செய்யக் கூடும்.
கவலைவிடு கண்மணியே!" என்றார் தைமூஸ்
கண்மூடி நாணத்தால் முகங்க விழ்த்துப்
பவளஇதழ் நகைஒளிர மௌனம் காத்தாள்.
பாங்கியரை அழைத்துவிட்டு நகர்ந்தார் தைமூஸ்.

தாங்காத பெருஞ்சுமையைப் பிஞ்சு நெஞ்சில்
தாங்கும்படிச் செய்திட்ட அவனை எண்ணித்
தூங்காத சுலைகாவைச் சுற்றி நின்ற
தோழியர்கள், "இளவரசி நினைவை விட்டும்
நீங்காத பெரும்பேறு பெற்ற அந்த
நிகரற்ற பாக்கியவான் அடையா ளத்தைப்
பாங்கியர்க்கே சொல்லிடுவீர்!" என்று கேட்கப்
பஞ்சணையில் அமர்ந்தபடிச் சுலைகா சொல்வாள்.

"காந்தமெனக் கவருகின்ற கடைக்கண் வீச்சு,
கடும்பகையும் அஞ்சுகின்ற தடந்தோள், உண்மைச்
சாந்தமிகும் எழில்வதனம், கருணை பொங்கித்
தவழுகின்ற கருவிழிகள், அகன்ற நெற்றி,
பாந்தமிகும் விற்புருவம், நிமிர்ந்த நெஞ்சும்
பார்த்திட்டேன்; இவையன்றி ஏதோ ஒன்றைக்
காந்தனவன் பெற்றுள்ளான் அதையான் காணேன்
கடவுளருட் பேரொளியென் றெண்ணு கின்றேன்.

இவையன்றி இன்னும்ஏதும் சொல்வ தென்ருல்
இவ்வுலக அழகெல்லாம் ஒன்று சேர்ந்தே
அவனாக உருப்பெற்று வந்த தென்பேன்;
அடையாளம் இவையன்றி வேறு காணேன்
எவனேனும் இவ்வாறு காணப் பெற்ருல்
என்னிடத்தில் சேர்த்திடுவீர்; தந்தை யர்க்கும்
கவனமுடன் அடையாளம் சொல்வீர்'' என்ருள்
கண்காட்டித் தோழியர்கள் நகைக்க லானர்.

''சிரிக்கின்ற தெதற்''கென்ற சுலேகா வுக்குத்
தெளிவூட்டக் கிழத்தாதி விளக்கிச் சொல்வாள்
''அறிவுடைய இளவரசி! கனவி லேநாம்
அமுதுண்ணக் கண்டதனுல் பசியே போமோ?
வறியவர்கள் அரசுசெய்யக் கனவு கண்டால்
வாய்த்திடுமோ? ஆய்ந்திடுவீர்!'' என்ருள், கேட்டு
''பரிவுடைய அவரெனக்கே நான வர்க்கே!
பலித்துவிடும் என்கன'' வென்ருள் சுலேகா.

பாய்ந்துவரும் காதற்கணே தடுப்ப தற்குப்
பகுத்தறிவுக் கேடயத்தால் ஆகா தென்றே
ஆய்ந்துணர்ந்த கிழத்தாதி சுலேகா நோக்கி
''அப்படியே நும்கனவு பலித்தி டட்டும்!
சாய்ந்திடுவீர்; சற்றேனும் சயனம் கொள்வீர்!
தாதியர்கள் தக்கபணி செய்வர்!'' என்ருள்
''போய்விடுவீர் எல்லோரும், அவனே இன்று
புலர்ந்திடுமுன் வந்தாலும் வரலா'' மென்ருள்.

சுலேகாவின் உறுதிமிகும் வார்த்தை கேட்ட
தோழியர்கள் அப்படியே விலகிச் சென்று
'குலேயாத நம்பிக்கை வெற்றி கொள்ளக்
கூடு'மென்ற முதியவர்சொல் நினைவு கூர்ந்து
நிலேயாக நின்றிருந்தார் அங்கு மிங்கும்,
நெஞ்சில்சுமை யற்றவளாய்ச் சுலேகா தூங்க
அலேமோதும் பல்லுணர்வு முகத்தில் தோன்றி
அழகுசெய்யும் புதுமையினைக் கண்டார் நின்ருேர்.

---




## இயல்—22

ஒருமுறை தன்முகம் உற்று நோக்கிய
திருநிறைக் காதலன் திரும்பத் தன்னிடம்
வருவதை நம்பியே வாழ்ந்தவ ளருகினில்
திரும்பவும் தோன்றினார்; தெளிவுடன் நோக்கினாள்!

அன்றுபோ லின்றவர் அழகினில் மாறுதல்
ஒன்றுமே கண்டிடா துவகையே பூத்தனள்!
என்றுமே பிரிந்திடா திணைந்தவ ருடனவள்
ஒன்றியே வாழ்ந்திட உறுதியே பூண்டனள்!

பாய்ந்துடன் சென்றவர் பாதங்கள் பற்றியே
சாய்ந்துடல் வீழ்ந்தனள், சவமென அவரடி
ஓய்ந்தவள் கிடந்தனள்; உள்ளமே உணர்ச்சியில்
தோய்ந்தவள் துவண்டிடத் தூக்கியே நிறுத்தினார்.

"ஆண்டினைக் கடத்தியே அடுத்து வந்திடத்
தோன்றியதோ?"எனத் துணிந்து கேட்டபின்
"மீண்டெனைப் பிரிந்திட விரும்பி னீரெனில்
மாண்டிட விரும்புவேன் மறந்திடேல் மன்னவ!

"அண்ணலே நின்முகம் அன்று கண்டபின்
உண்ணவோ உறங்கவோ உள்ளம் மறுத்தது.
திண்ணமாய்த் திரும்புவீர் என்றஎன் சிந்தையை
உண்மையாய் நம்பினேன் உறுதி காத்தனை!"

"பாங்கியர் நகைத்திடப் பஞ்சணை வதைத்திட
ஏங்கிய இரவுகள் எண்ணவும் கூடுமோ?
தூங்கிய போதிலும் தோன்றலே நின்முகம்
நீங்கியதில்லையே! நெருங்குவீர்" என்றனள்.

நெஞ்சினைக் கவர்ந்தெனை நீங்கிய தன்றியும்
வஞ்சமாய் என்மன வலிமையும், பொறுமையும்
வெஞ்சம ரின்றியே வீழ்த்திநீ சென்றனை
தஞ்சமென் றடுத்திடில் தாக்குதல் நீதியோ?

பாய்ந்திடும் வேங்கையின் பார்வையிற் பட்டமான்
ஓய்ந்துடல் குன்றிடும் உண்மைபோ லென்முகம்
ஆய்ந்தநும் பார்வையில் அனைத்தையும் இழந்தெனைச்
சாய்ந்திடச் செய்தநீ தனிமையும் தருவதோ?

ஆறுதல் காட்டிட ஆயிரம் தோழியர்
கூறுதல் யாவையும் கூர்விழிச் சுடரினால்
வீறுடன் சுட்டெனை விரும்பிடச் செய்தனை
தேறுதல் நீயலால் தெய்வமும் அல்லவே!

என்னிளம் நெஞ்சகம் இலங்கிடச் செய்தநின்
கண்ணொளி இன்றெனைக் கலங்கிடச் செய்வதோ?
மின்னொளி போல்முகம் மிளிர்ந்திடத் தோன்றியே
பின்னொளிந் தோடுதல் பெருந்தகைக் கேற்றதோ?

விண்ணவர் மன்னவர் வெற்றிகொள் வீரரும்
பெண்ணெழிற் புன்னகை பெற்றிட நாடுவர்
என்னிரு விழிகளின் இரத்தநீர்த் துளிகளை
உன்னிரு விழிகளும் உவப்பது விந்தையே!

கிட்டவே வந்தபின் கெஞ்சிடும் என்றனின்
வட்டமா மதிமுகம் வாடிடச் செய்வதே?
இட்டமோ, இல்லையோ? என்னதான் நின்மனத்
திட்டமோ அறிந்திலேன் செம்மலே சொல்லுவீர்!

பெண்ணிடம் பேசுதல் பிழையென நினைத்தையோ?
என்னிடம் பேசுதற் கெதுவுமே இல்லையோ?
கண்ணிடம் பேசியே கருத்தினை விளக்கிட
எண்ணிடும் நின்திறன் என்றனுக் கில்லையே!

கானகம் வதிந்திடும் கடுந்தவத் துறவியோ?
வானவர்க் கதிபனோ வையக வேந்தனோ?
தானவன் அருளொளி தங்கிடும் தூதனோ?
தேனெழும் வார்த்தையில் செப்புவாய் குரிசிலே!

என்மொழி அறிந்திடா திருக்கிருய் என்றிடில்
நின்மொழி ஏதிலும் நினைப்பினை நிகழ்த்துவாய்
உன்மொழி உணர்ச்சியில் உணர்ந்திடக் கூடுமேல்
என்விழி பூத்திடும் எண்ணமும் புரிந்திடும்.

கத்திடும் பெண்ணெனைக் கண்டும்நின் வாயினைப்
பொத்திடும் மர்மமே புரிந்திலேன்! மௌனமே
பத்தியம் கொண்டெனைப் பார்க்கவந் திடுவதோ?
சத்தியம் செய்கிறேன் சற்றுநீர் பேசுவீர்

எத்தனை சொல்வது இன்னுமென் செய்வது?
இத்தனை வேண்டியும் இரங்கிடாத் தங்களுக்
கத்தனை அழகையும் அளித்தவன் அன்பினைச்
சுத்தமாய் மறுத்ததென் துயரினுக் காகவே?

சிறந்திடும் பேரெழில் சிந்துமா ணிக்கமே
பிறந்ததெச் சுரங்கமோ புகுந்ததெம் முடியிலோ?
பிறந்தநின் குலத்தையும் பெற்றபொான் ஞட்டையும்
மறந்தனை யோ?இலை மறைத்திட விருப்பமோ?

பசித்தவள் துடிக்கிருள்; பார்த்துநீ ரசிக்கிருய்!
புசித்திட வேண்டிடில் புன்னகை பூக்கிருய்
விசித்திர இளைஞனுய் வெகுண்டிடும் வள்ளலே
பசித்திடும் என்முகம் பார்த்திட அச்சமோ?

வெடித்திடத் தக்கதாய் விம்மிடும் நெஞ்சினில்
துடித்திடும் துயரினைச் சுலைகாவின் நாவுகள்
வடித்திடக் கண்டவர் வாஞ்சையாய் நோக்கினுர்
பிடித்தனள் அவர்கரம், பேசினுர் அழகரே.

"பெண்குலத் திலகமே! பேரெழிற் செல்வமே!
உன்முகத் தாமரை உவகையில் பூத்திட
விண்முகப் பரிதிநான், விரிகதிர்ச் சுடரும்நீ
என்றிறை அமைத்திடில் எனக்கது மகிழ்ச்சியே"

"பெருகிடும் உணர்ச்சியால் பேசிடும் மதியமே
உருகிடச் செய்தெனை; உன்வச மாக்கினை
உறுதியில் நிலைத்திடு, உணர்ச்சியை அடக்கிடு
இறுதியில் உனக்குநான் எனக்குநீ ஆகலாம்!

"எண்ணமே வாழ்வது இழிந்திடில் தாழ்வெனத்
திண்ணமாய் நம்பிடு திடமனம் பெற்றிடு
உண்மையாய்ச் சொல்லிடில் உன்மனம் போலவே
என்மன முன்னையே ஏற்றது!" என்றனர்.

காதலன் வார்த்தையைக் கவனமாய்க் கேட்டதும்
மாதவம் பலித்ததாய் மகிழ்ந்தவள் அவனிரு
பாதமே வீழ்ந்தவள் பற்றினாள்; படுக்கையின்
பாதமே கிடைத்தது; பதறியே விழித்தனள்!

அதுவரை நடந்தவை அனைத்துமே கனவென
வெதும்பிய சுலைகா விரைவினி லுணர்ந்தனள்
இதுவரை மறைவினில் இருந்த தோழியர்
அதிவிரை வாகவே அருகினில் கூடினர்!

சுலைகாவின் புலம்பல்:

"கண்ணிலே கருத்தி லேஎன்
கனவிலே வந்து மீண்டும்
விண்ணிலே பாய்ந்து செல்லும்
வித்தையே காட்டுகின்ற
அண்ணலே அழகி னுலென்
அகம்புகுந் தாட்சி செய்யும்
உன்னிலே என்னைச் சேர்க்க
ஒப்பிடா தென்னே?" என்றாள்.

இறைவனை வேண்டல்:

துய்யனே இறைவ னேஎன்
துயர்முகம் கண்ட பின்னும்
ஐயனே, அழக னேஎன்
அன்பதைச் சொன்ன பின்னும்
பொய்யனாய் மறைந்தே என்றன்
புலனெலாம் துடிக்கச் செய்து
மெய்யனே காதல் நெஞ்சம்
வெந்திடச் செய்வ தென்னே?

## தோழியர்க்குச் சொல்லல்:

சேடியே அவனே இங்கென்
திருமுகம் காண வந்தான்;
ஓடியே காலில் வீழ்ந்தே
உவந்திட வேண்டி நின்றேன்;
"கூடியே வாழ்வோ" மென்று
கூறினான் மகிழ்வு கொண்டேன்;
வாடியே தவிக்க விட்டே
ஓடியே மறைந்திட் டானே!

## சொன்னதும் செய்ததும்:

"உறுதியில் நிலைக்க"ச் சொல்லி
'உணர்ச்சியை அடக்க'க் கூறி
'இறுதியில் உனக்கு நானாய்
எனக்குநீ யாவாய்' என்று
குருதியில் ஆசைத் தீயைக்
கொழுந்திடத் தூண்டி விட்டுச்
சுருதிசெய் இதய யாழின்
நரம்பையும் சுண்டிச் சென்றான்.

## தன் அழகை இகழ்தல்:

உண்மையாய் அவனோ டென்னை
ஒப்பியே நோக்கு தற்கு
ஒன்றுமே அடைந்தே னில்லை;
உயிர்வதை அடைதற் கென்றே
என்னையே படைத்து விட்ட
இறைவனோ அவனுக் கேற்ற
வன்மையாய் அழகெ னக்கே
வழங்கிட மறந்திட் டானே!

## கண்களைக் கண்டித்தல்:

"என்னையே எதும்கே ளாதே
எதிர்வந்த அவனை நோக்கி

புண்பட வருத்தி, நெஞ்சில்
புரையோ டச்செய்து விட்ட.
கண்களே உங்கள் குற்றம்
கொடிதிலும் கொடிதே! நீங்கள்
என்றுமே அவனை எண்ணி
ஏங்கியே அழுவீர்!'' என்ருள்.

தன்னையே வதைத்தல்:

நெற்றியில் அறைந்து, மின்னி
நெளிந்தி டும்கருங் குழலைப்
பற்றியே பிய்த்தெ றிந்தாள்
பவளவாய் இதழ்க டித்தாள்
சுற்றிலும் நின்றி ருந்த
தோழியர் மன்ன வர்க்கு
முற்றிலும் சொல்லச் சென்ருர்,
முதுகிழத் தாதி வந்தாள்!

கிழவியின் போதனை:

கதறியே புலம்பு கின்ற
சுலேகாவின் கரங்கள் பற்றிப்
பதறியே கிழவி சொல்வாள்
"பார்புகழ் மன்னர் தைமூஸ்
புதல்வியே மனங்க வர்ந்து
போய்விட் டஅவன் நினைவை
உதறியே அமைதி யாக
உறங்கியே துன்பம் வெல்வீர்!''

சுலேகாவின் பதில்:

கெஞ்சியே வேண்டு கின்ற
கிழவியின் வார்த்தை கேட்டுத்
"துஞ்சினேன் அந்நே ரத்தே
தோன்றிய அவன்தான் என்னைப்

பஞ்சணை நீக்கித் தன்னைப்
பணிந்திடச் செய்து 'என்றும்
அஞ்சிடேல்' என்று ரைத்தென்
உறக்கமும் அழித்தான்'' என்ருள்.

பரிசு அறிவித்தல்:

"உள்ளமும் உணர்ச்சி யும்என்
உறக்கமும் கொள்ளை கொண்ட
கள்வனைப் பிடித்து வந்தென்
காலடி நிறுத்து கின்ற
வல்லவர் எதைக்கேட் டாலும்
வழங்குவே னென்றே எங்கும்
சொல்லு வீ''ரெனச் சுலைகா
சொல்கையில் தைமூஸ் வந்தார்.

தைமூஸ் உறுதி கூறல்:

"சுற்றிலும் அவனைத் தேடித்
துரிதமாய்ப் பிடிப்ப தற்கு
வெற்றிகொள் நமது வீரர்
விரைந்துளார், நான்கு திக்கும்
ஒற்றரும் அனுப்பி யுள்ளேன்
உறுதியாய்க் கொண்டு சேர்ப்பார்.
சற்றுநீ துயில்வாய்'' என்று
சாற்றிஞர் தைமூஸ் மன்னர்.

# யாக்கூபின் நிலை

## இயல்—23

“கண்ணின் மணியே, என்னுயிரே
கருணை பொழியும் விண்ணமுதே,
பொன்னின் ஒளியே, புத்துணர்வே
பொங்கச் செய்யும் என்மகனே!
உன்னைப் பிரியும் முன்னலென்
உயிரைப் பிரிந்தால் ஒருதுயரும்
என்னை வருத்தா திருந்திடுமே
எவ்வா றுன்னை மறந்திடுவேன்?

அள்ளி அணைக்கும் காலத்தே
அன்னை இழந்தும் உயிர்வாழ்ந்தாய்,
பள்ளிக் கனுப்பும் பருவத்தே
பக்கத் திருந்தே உனைக்காத்தேன்,
துள்ளித் திரியும் பசைஓநாய்
சூழ்ந்து நிற்பதை அறியாமல்
செல்வேன் அடவிக் கெனச்சென்று
திரும்பாச் சுவர்க்கம் சேர்ந்தாயோ?

அன்பே நிறையும் நின்முகத்தை
அழகே மிகுந்த பொன்னுடலைக்
கண்டே இரக்க மில்லாமல்
கடிக்கத் துணிந்தது ஓநாயோ?
பண்பே அறியாக் கொலைஞர்களும்
பார்த்தால் பாதம் பணிவாரே.
கண்ணே யூசுப் உன்னுயிரைக்
காலனும் கவரத் தயங்குவனே!

‘கண்ணின் இமையாய் அண்ணன்மார்
காப்பார்’ என்ருள் உனதன்னை.
‘என்னிலும் மேலாய் உன்தந்தை
இனிதே வளர்ப்பார்’ என்ருளே.
உன்னிலும் மேலாய் உலகத்தே
உயிரும் மதியா திருந்தேனே.
என்னிலை அறிந்தே இறையோனும்
ஏமாற் றினனே அறியேனே.

அதிகம் எதையும் விரும்புவதால்
அதனால் நேரும் கொடுந்துன்பம்
அதிகம் என்பதை அறியாமல்
அனைத்தும் நீயாய் நினைத்தேனே.
விதியோ விளைந்த சதியோதான்
வெற்றி கொண்டெனை வீழ்த்தியதே.
மதியும் விதியைப் பணிந்ததுவோ
மகனே?'' என்றார் யாக்கூபே.

வருந்தித் துடித்த தந்தையரின்
வாட்டம் அகற்ற மைந்தரெலாம்
வருந்திக் கண்ணீர் வடித்தார்கள்.
''வல்லோன் வகுத்த விதிப்படியே
அருமைத் தம்பி யூசுபை
அணுகிக் கொன்றது ஓநாயே.
பெருமைக் குரிய தந்தையரே
பிழையாம் அறியோம்'' என்றனரே.

கொன்றது ஓநாய் என்றதுமே
சூமுறி எழுந்த யாக்கூபு
''கொன்றது ஓநாய் உண்மையெனில்
கொண்டே வருவீர் அதை''யென்றார்.
''தின்ற அவ்வோநாய் கிடைத்திடுமோ?
தெரிந்தால் பிடிக்கத் தடையில்லை!''
என்றனன் ஷம்ஊன் இதைக்கேட்டே
இருவிழி சிவந்தார் யாக்கூபே!

ஏதோ மர்மம் இதிலுண்டு
என்னுயிர்ச் செல்வன் யூசுபைத்
தீதாய் நீவிர் கொன்றொழித்துத்
தின்றது ஓநாய் என்கின்றீர்
வாதே வேண்டாம் உடன்சென்று
வழியில் காணும் ஓநாய்கள்
ஏதோ ஒன்றை என்முன்னே
இழுத்து வருவீர் எனச்சொன்னார்.

——

# தைமூஸ் சபையில் அறிவித்தல்

## இயல்—24

ஆற்றலில் சிறந்த அமைச்சரே! அவையில்
வீற்றிருக் கின்ற வித்தகப் பெரியீர்!

போற்றுதற் குரிய புலவரே! நாட்டின்
நாற்றிசை காக்கும் நாற்படைத் தலைவ!

சாற்றுதல் கேளீர்! சாற்றுதல் கேளீர்.
தோற்றுமும் கருத்தைத் துணிவுடன் கூறீர்!

எத்தனை உரைத்தும் என்மகள் சுலைகா
கத்தனை மறந்துக் கனவிலே கண்ட

பித்தனை நினைத்தே பெருந்துயர் பூண்டாள்.
இத்துணைக் காலம் என்னால் இயன்றதை

எடுத்துச் சொல்லியும் ஏற்றிட வில்லை.
அடுத்தேன் உங்களை அவள்துய ரகற்றக்

கூடிய யோசனை கூறுவீர்'' என்று
வாடிய தைமூஸ் வருந்தியே கேட்டார்.

"சூடிடும் மலரைச் செடியினில் விட்டால்
வாடியே உதிரும். வாலிபம் இதுதான்

கூடிய விரைவில் குலக்கொடி தழுவத்
தேடிடும் கொம்பைத் தேர்ந்திட முயல்வோம்''

என்றான் கவிஞன், இவ்வுரை கேட்டு
"நன்றே'' என்றே நவின்றான் தளபதி!

இறக்கை முளைத்த எழில்மிகும் கிள்ளை
பறக்க விரும்புதல் பண்பே ஆகும்!

சிறக்கத் திருமணம் செய்திடும் பருவம்
பிறக்கக் கண்டும் பேசா திருந்தால்

எவரும் வருந்துவர்; எண்ணமே கனவாய்
அவரை வருத்தும் அதுதான் இயற்கை

நினைவின் நிழலே நெஞ்சில் படிந்து
கனவாய் வெடித்துக் கருத்தைக் கலக்கக்

கண்டும் வீணே காலம் கடத்திச்
சென்றால் பயனே சிறிதும் விளையா!

இளவர சிக்கே ஏற்றவ ரான
இளவர சொருவரை இன்றே தேர்வோம்!"

என்றார் அமைச்சர், ஏற்றார் அரசர்;
"ஒன்றே சொல்வேன்!" என்றான் புலவன்.

"சொல்வதைச் சொல்லுக; துரிதமாய்ச் சொல்லுக
நல்லதைச் சொல்லுக; அல்லதைக் கொல்லுக"

என்றார் மன்னர். இருந்தவ ரெல்லாம்
ஒன்றாய்ப் புலவனை உற்று நோக்கினர்.

"வரும்பொரு ளுரைக்கும் பெருமதி படைத்த
திருமிகும் அமைச்சர் செப்பிய தெல்லாம்

ஏற்பவர் கேட்ப தென்னவென் றறியா
தேற்றிட மற்றவை ஈவதற் கொப்பே!

விரும்புதல் வழங்கா விடினும் வெறுப்பதை
விரும்பிடச் செய்வது பெருந்துயர் விளைக்கும்

தாமாய்க் கனவில் தேர்ந்தவ ரிருக்க
நாமாய் ஒருவரை நடுவினில் தேர்வது

பஞ்சனை கேட்பப் பாறையைக் காட்டலும்
நஞ்சினைக் கொடுத்து நல்லமு தென்பதும்

தக்கதே யாயின் தக்கதே இதுவும்
மிக்கதா யிருப்பினும் விரும்பிடாப் பொருளை

வாழ்நாள் முழுதும் வைத்தே காக்க
ஊழ்வினை கூறினும் ஒப்பிடார் சுலேகா.

எனவே அவரை இனிதே நெருங்கிக்
கனவே காட்டிய காந்தனின் வடிவை

உரைத்திடக் கேட்டு உவந்த அழகனை
வரவழைத் திடவே வழிவகுத் திடுவோம்"

கவிஞன் கூறிய கருத்துக்கள் ஏற்றுக்
குவிந்த முகத்துடன் கூறினன் அரசன்.

"பன்முறை கேட்டும் பார்த்தவன் வடிவை
என்மகள் சுலேகா இயம்பிட வில்லே

'அத்தனே அழகும் அமைந்தவ' னென்று
மொத்தமாய்ச் சொல்லி நித்தமும் அழுகிருள்.

இத்தரை முழுவதும் சுற்றித் தேடினும்
அத்தகைக் குறிப்பினல் அறிந்திட லாகுமா?"

மன்னர்சொற் கேட்டதும் மந்திரி கூறுவார்
"என்னதான் அழகனுய் இருப்பினும், கிடைப்பினும்

பிறப்பும் வளர்ப்பும் பெயரும் ஊரும்
சிறப்பும் தகுதியும் தெரியாத ஒருவனே

நாட்டின் அரசியின் நாயக னுக்குதல்
கேட்டினில் முடியும், கேட்பவ ரெல்லாம்

எள்ளியே நகைப்பர்! ஏனைய மன்னர்
சொல்லியே வெறுப்பர்! சுலேகாவைக் கொள்ள

விரும்பிய வேந்தர் வெகுவாய்ப் பகைப்பர்
பெரும்பிழை என்றே கருதுவர் மக்கள்

கனவினில் கண்ட காரணத் திற்காய்
மணவினேக் கொப்புதல் மாபெரும் தவறே

அழகையே நம்பி அரசியைக் கொடுத்தல்
அழகிடம் நாட்டை ஆளக் கொடுப்பதே

அறிவும் அழகும் ஆளுந் திறனும்
பரிவும் அரசப் பரம்பரை யாயும்

இளவர சொருவரை இனிதே தேர்ந்து
இளவர சியினே ஈவதே கடமை!"

அடுக்கடுக் காக அமைச்சர் உரைப்பதைக்
கடுகடுப் பாகக் கவிஞன் கேட்டுக்

குறுக்கே தடுத்துக் கூறிட லானுன்.
"மறுப்பதைப் பெருமையாய் மதித்தே அமைச்சரின்

கருத்தை எதிர்ப்பதாய்க் கருதிடீர்! என்னுடைக்
கருத்தைச் சொல்வது கடமை ஆதலால்
பயனை மறந்து பகரத் துணிகிறேன்,

தவருய்க் கருதிடின் தள்ளியே செல்லுவீர்.
எவராய் இருப்பினும் தவருய் உரைத்திடில்

மறுப்பதே நெறியாம் மந்திரி வார்த்தையான்
மறுப்பதைப் போலென் வார்த்தையை மறுக்கவும்

ஒப்புவேன்! ஐயம் உதித்தால் விளக்கம்
செப்புவேன்!'' என்று சிறிது நிறுத்திஞன்.

''இப்படி அப்படி எப்படிப் பேசினும்
ஒப்பிடத் தக்கதாய்ச் செப்பிடில் ஏற்றிடத்

தயங்கேன்!'' என்று சாற்றிஞர் தைமூஸ்
''மயங்கேன்'' என்று மந்திரி கூறிஞன்.

மீண்டும் கவிஞன் விளக்கிட எழுந்து
நீண்டவெண் தாடியை நெருடிய படியே

சுற்றிலும் அவையை உற்று நோக்கிஞன்.
கொற்றவர், அமைச்சர், குடிகளின் தலைவர்

அனைவரும் அமைதியாய் அமர்ந்திடக் கண்டு
கனைத்த படியே கவிஞன் கூறிஞன்.

''கனவினில் தோன்றிக் கருத்தைக் கவர்ந்து
மனத்தினில் நிறைந்து கணத்தில் மறைந்த

வடிவழ கனுக்கு வாழ்வையே இழக்கத்
துடிதுடிக் கின்ற சுலைகா நிலையை

முற்றிலும் மறந்து முடிவே தேர்தல்
சற்றும் பயனே தராது, அறிவீர்!

அறிவும் நாட்டை ஆளும் திறமையும்
உரியவ ரிடத்தே ஒப்படைத் திடவே

முடிவே செய்வது முற்றிலும் தவருய்
முடியும், சுலைகா முற்றிலும் மறுப்பாள்!''

''அறிஞனே அல்லவோ, அரசனே ஆண்டியோ
வறியனே செல்வனே வந்தவன் யாவனே

அவனையே சுலைகா அடைந்திட விரும்புவார்
புவனமே பணிந்திடும் பூபதி வேண்டினும்

அவனையே அன்றிவே றெவனையும் கொடுத்திடில்
தன்னையே அழிக்கவும் தயங்கிடார்!'' எனக்கவி
சொன்னதும் வேந்தரோ சோர்வுடன் கூறுவார்.

''காதலின் தத்துவம் காட்டிய கவிஞரே!
காதலை இழப்பவர் சாதலை வரிப்பது
உண்மையே என்பதை ஒப்புவேன்! என்மகள்
நன்மையே பெரிதென நாடுவேன்; ஆதலின்
கனவினில் தோன்றிய கட்டழ கன்எவன்
என்பதை அறிவது எப்படி என்பதைப்
புரிந்திட விலைஅது புரிந்திடில் கூறுவீர்
அறிந்ததும் அதன்படி ஆவன செய்கிறேன்.''

மன்னவர் உரைத்ததும் மந்திரி எழுந்தே
''என்னுடைக் கருத்தையும் இயம்பிடக் கேளீர்!''
என்றனர்; அரசரும் ''இயம்புக'' என்றனர்
''நன்றுய்ச் சொல்லுக'' என்றுர் புலவரும்

''கற்பனைப் புரியினில், காவியப் பொழிலினில்
அற்புதம் கண்டிடும் அருட்கவி வாணரின்
சொற்றிறன் கேட்டபின் சுலைகா வாழ்க்கையில்
பற்றிய கொடுந்துயர் பரிதிமுன் பனியென
விரைவினில் விலக்கிடும் வழிகளை விளக்கமாய்
உரைத்திடு வாரென உண்மையில் நம்பினேன்.''

''காதலின் விளைவினைக் கவிச்சுவை ததும்பிடப்
போதனை புரிந்தநம் புலவரோ கனவினில்
வந்தவன் கிடைத்திடும் மார்க்கமே உரைத்திலர்
மந்திரம் ஏவினும் தந்திரம் செய்யினும்
கனவில்வந் தவனையே கண்டிடக் கூடுமோ?
நினைவினில் எவனையோ நிறுத்திப் பார்த்திடில்
அவனையே மற்றவர் அறிந்திட லாகுமோ?
கவனமாய் ஆய்ந்திடில் கடிதினில் அரசியின்
துயரினைக் களைந்திடத் துணைவரைத் தேர்ந்திட
முயலுவோம்! அதையவர் முற்றிலும் மறுத்திடில்
அடுத்தொரு வழியினை அமைத்திட எண்ணுவோம்
தொடுத்திடும் முயற்சியில் தோல்விமேல் தோல்வியே

கிடைப்பினும் வெற்றியே கிட்டிடும் வரையிலும்
தடைகளைத் தகர்த்திடத் தக்கது செய்யலாம்

இளவர சியின்மனம் ஏற்றிடும் முறையினில்
இளவர சொருவரை இயம்புவீர்'' என்று

புலவரை நோக்கிப் புகன்றனர் அமைச்சர்.
"நலமிதே'' என்று நவின்றனர் தைமூஸ்.

"ஒருக்கால் அவரே உண்மையில் சுலைகா
விரும்பிடு வோராய் இருப்பினும் இருக்கலாம்

அழகிலும் அறிவிலும் ஆண்டிடும் திறனிலும்
பழகிடும் பண்பிலும் பரம்பரைச் சிறப்பிலும்

உயர்ந்தவ ரொருவரை உரைப்பீர்'' என்று
தயவுடன் வேண்டினர் தைமூஸ் மன்னர்.

'ஷாம்'அதி பதிக்கும் 'ரூம்'அதி பதிக்கும்
நாம்ஒரு அழைப்பினை நல்குவோம் இன்றே.

வருவார் இருவரும்; வந்தபின் அவர்களில்
ஒருவரைத் தேர்ந்திட உறுதியாய்க் கூறுவோம்.
மறுத்திடில் மறுவழி வகுத்திட லா''மெனக்

கூறினர் அமைச்சர்; கொற்றவர் மகிழ்ந்து
சீரிய முறையிதைத் தேர்ந்தஎன் அமைச்சரே!

கோரிய பலனிதில் கூடினும் கூடலாம்
காரியம் முடிப்பதைக் கடமையாய்க் கொள்ளுவீர்''

என்றதும் தைமூஸ் இடப்புறம் திரும்பி
"நன்றுதா னேஇது நவிலுவீர்'' என்று

புலவரை நோக்கினர், புலவர் பேசினர்:
"நலமாய் முடிந்தால் நன்மையே ஆகும்

ஒருவரைத் தேர்ந்துமற் றொருவரைத் தள்ளினும்
இருவரும் ஒப்புவர்; இல்லாமல் அவர்களில்

எவரையும் அரசியார் ஏற்றிட மறுத்திடில்
அவர்களின் பெரும்பகைக் காளாக நேரிடும்.

அவமதிப் பதற்கே அவர்களை அழைத்ததாய்
அவசியம் எண்ணுவர்; ஆத்திரம் கொள்ளுவர்.

எண்ணித் துணிவது எதற்கும் நல்லது''
என்றான் கவிஞன்; எழுந்தான் தளபதி

"வரும்பகை வென்று வாகை சூடவே
பெரும்படை யுண்டு பீதியே வேண்டாம்

அதற்கே என்னை அர்ப்பணித் துள்ளேன்.
இதற்கே கவலை எதற்கோ? என்னிடம்

அந்தப் பொறுப்பை அளிப்பீர்" என்முன்.
"வந்திடும் பகையை வீழ்த்துதல் முறையே!
வலியவே பகையை வளர்ப்பதும் குறையே!

நீதியின் பக்கமே நிலைத்திடு வெற்றியைத்
தீதினல் கவர்ந்திடச் சிறிதுமே இயலுமோ?

வீரமும் தீரமும் வெற்றிகொள் உறுதியும்
பூரண மாகவே பொருந்தினும் நீதியே

எள்ளள வாயினும் இல்லா திருப்பின்
உள்ளவை யாவுமே உதவாது போய்விடும்.

ஆதலால் அரசே, அத்தனை உண்மையும்
ஓதியே அவர்களை உடன்வர வேண்டுவோம்

என்முன் கவிஞன் ஏற்முர் அனைவரும்.
அன்றே அழைப்பை அனுப்பினர் அரசர்.

—

# புதையல் கிடைத்தது

## இயல்—25

கதிரவ னொளியால் கானலின் அலைகள்
கடலெனப் பாலையில் பறந்து
மதிய[ம்]மி லிருந்து 'மிசு'ருக்குச் செல்லும்
வணிகரைத் தீயெனத் தாக்கப்
பொதியினைச் சுமந்த ஒட்டகை விரட்டிப்
புகுந்தனர் அடவியில், அங்கே
எதிரினில் கிணறு இருக்கவே கண்டு
இறைவனின் கருணையை வியந்தார்.

காய்ந்திடும் வெயிலால் உலர்ந்ததம் நாவால்
கடவுளைத் துதித்தொரு வணிகன்
ஓய்ந்தொரு புறத்தில் கிணற்றுநீர் கொணர
ஒருவனை ஏவினன் அவனோ
பாய்ந்துடன் சென்று நீண்டதோர் கயிற்றில்
பாத்திரம் பிணைத்துஅக் கிணற்றில்
பாய்ச்சியே இழுக்கப் பாத்திரம் அழுத்தப்
பாரமாய் இருப்பதை உணர்ந்தான்.

தாகமே வருத்தத் தவித்திடும் வணிகர்
தலைவனோ 'மாலிக்'கு என்போன்
வேகமாய் இரைந்து "தண்ணீரைக் கொண்டே
விரைவினில் ஓடிவா" என்றே
சோகமாய்க் கதற, முழுப்பலத் தோடு
தூக்கினான் வேலையாள் தண்ணீர்
ஏகமாய்க் கனத்தே எழுந்த பாத்திரத்தில்
இணையிலாப் பேரொளி கண்டான்.

திடுக்கமே கொண்டு "அதிசயம் காணச்
சீக்கிரம் வாருங்கள்" என்ருன்.
நடுக்கமாய் மீண்டும் கூவினுன் "காட்டின்
நடுவினில் கிணற்றினில் புதையல்
எடுத்துளே னிங்கு எல்லோரும் வருவீர்"
என்றவன் வியப்புடன் அழைக்க
கிடைத்திடாச் செல்வம் கிடைத்ததாய் எண்ணிக்
கிட்டவே வந்தனர் வணிகர்.

பாத்திரம் தனிலோர் அழகனே இருக்கப்
பார்த்ததும் மாலிக்கு வியந்து
"சாத்திரம் கூறும் அத்தனே அழகும்
தாங்கிய இளைஞனே! கிணற்றில்
நேத்திர முடைய குருடரோ கொல்லும்
நீசரோ தள்ளினர் உன்றன்
கோத்திர மென்ன? குடியிருப் பெங்கே?
கூறுக!" என்றனர் கனிவாய்.

மற்ருெரு வணிகன் இளைஞனை நெருங்கி
"மாசறு அழகனே, உன்னைப்
பெற்றவ ருண்டா? பிறந்தவ ருண்டா?
பீதிகொள் ளாமலே சொல்வாய்.
கொற்றவர் குலமோ? குறையிலாச் செல்வர்
குடும்பமோ பிறந்தனை?" என்ருன்.
சுற்றிலும் பார்த்த இளைஞனே இறையைத்
துதித்துயிர் காத்ததைப் புகழ்ந்தான்.

"என்னுயிர் காத்த இறைவனின் கருணை
என்னவென் றியம்புவே" னென்ருன்.
"உன்னுயிர் காத்த தென்னுடைப் பணியாள்
உணர்ந்திடு" என்றனன் மாலிக்.
"மன்னுயிர் யாவும் இறைவனின் பொறுப்பில்
வாழ்வதை மறந்திடீர்! இங்கே
என்னுயிர் காக்க இறைவனே உம்மை
ஏவினன்!" என்றனன் இளைஞன்.

"கண்ணீரை வடிக்கச் செய்திடும் ஒளியால்
கதிரவன் தாக்கிடும் போதில்
தண்ணீரைத் தேடிக் கிணற்றையே கண்டு
தாகமே தணித்திட யாங்கள்
எண்ணியே வந்தோம், இல்லையே லுன்னை
இங்குவந் திறைவனு மீட்பான்?"
என்றனன் ஒருவன் இம்மொழி கேட்டு
இதயமே கலங்கினுன் இளைஞன்.

"கதிரவ னொளியும் கானல்வெந் தழலும்
காட்டுவ தாரென நினைத்தீர்?
மதியினைத் தூண்டித் தண்ணீருக் கிங்கு
வந்திடச் செய்ததும் யாரோ?
எதிரினில் கிணறு இருப்பதைக் காட்டும்
இருவிழி படைத்தவ ரெவரோ?
மதியினைக் கெடுத்தே இறைசெயல் மறுத்து
மாய்ந்திடீர்!" என்றனன் இளைஞன்.

"இறையருள் மறவா இளைஞனே உன்னை
இவ்விதம் வருத்திய தெவனோ?
நிறைமதி யுடைய உன்னையே அடைய
நெடுந்தவம் புரிந்தவர் எவரோ?
மறைத்திடல் வேண்டாம் கூறுவாய்!" என்று
மாலிக்கு கேட்கவே இளைஞன்
"உரைத்திடில் மீண்டும் பெருந்துயர் விளையும்
ஒன்றையும் சொல்லிடேன்!" என்றுன்.

உண்மையை உரைத்தால் பெற்றவ ரிடத்தே
ஒப்பிக்க முடிந்திடும் உன்றன்
நன்மையே விரும்பிச் சொல்கிறேன் அனைத்தும்
நவின்றிடு" என்றனன், மாலிக்.
"உண்மையாய் எதையும் உரைத்திட ஒப்பேன்.
உரைத்திடில் என்குலப் பெருமை
திண்ணமாய் அழியும் திரித்துப்போய் புகலத்
தெரிந்திலேன்!" என்றனன் இளைஞன்

"தந்தையர் உண்டா, சோதரர் உண்டா
சாற்றுக இதையேனு!" மென்றான்.
"எந்தையும் மூத்த சோதரர் பலரும்
இருப்பது உண்மையே, எனினும்
தந்தையைச் சேரேன் சேர்ந்திடில் மீண்டும்
தாங்கிட நேருமித் துன்பம்!"
விந்தையாய் இளைஞன் விளம்புதல் கேட்டு
வியந்தனர் வணிகரெல் லோரும்.

"இற்றைய நாளாய் எனக்கொரு குழந்தை
இன்றியே ஏங்கினேன்; நீயோ
பெற்றவர் தம்மைச் சேர்ந்திட மறுத்தால்
பிள்ளையாய் என்னிடம் இருப்பாய்.
சற்றும்நீ தயங்கா தென்னையே உன்றன்
தந்தையாய் ஏற்றிடு!" என்று
மற்றவர் மலைக்க மாலிக்கு கூறி
மகிழ்வுடன் இளைஞனை அணைத்தான்!

அணைத்தவன் கரங்கள் விலக்கிய இளைஞன்
அருகினில் வரும்சிலர் நோக்கி
"எனைஇவ ரிடத்தில் விடுத்திடில் கொடுமை
இழைத்திடு வாரென" இயம்ப
"உனைஎவ ரிடத்தும் விடுத்திடே" னென்று
உறுதியாய்க் கூறினான் மாலிக்
நினைத்ததே போன்று வந்தவர் அவனை
நெருங்கியே நிகழ்த்திட லானார்!

"எங்களை ஏய்த்தே ஓடிய இவனை
எப்படி நீங்களே அடைந்தீர்?
இங்கிவ னிருப்ப தறிந்திட வில்லை
எங்கெல்லாம் மூன்றுநாள் அலைந்தோம்.
எங்களின் அடிமை இவன்பெரும் புளுகன்
எம்மிடம் விடுத்திடு வீரே.
உங்களை ஏய்த்தும் மறைந்திடக் கூடும்,
உறுதியாய்க் கூறுவோம்!" என்றார்.

வந்தவர் வார்த்தை கேட்டதும் மாலிக்
வாயடைத் திடஒரு வணிகன்
சுந்தர இளைஞன் தோளினை உலுக்கிச்
'சொல்லடா உண்மையை!' என்றான்.
சிந்தையி லேதுங் களங்க மற்றவனாய்த்
தெளிவுடன் எதனையோ எண்ணி
வந்தவர் தம்மை வேடர்முன் மானாய்
மருண்டவன் நோக்கிட லானான்.

"உண்மையி லிவனும் அடிமையே எனினும்
உரிமையை விடுத்திட விலைதான்
என்னவோ அதைநீ ரெம்மிடம் கேட்டால்
ஈந்திடு வோ"மென மாலிக்
சொன்னதைக் கேட்டே "இவனது விலையைச்
சொல்லுவீர் நீங்களே!" என்றார்.
புன்னகை புரிந்த மாலிக்கு அவர்க்குப்
பொன்சில கொடுத்தனுப் பினனே.

தன்னையே அடிமை வாங்கிய மாலிக்
தயவினைப் பெரிதுமே போற்றி
"என்னையே உங்கள் உடைமையாய்ப் பெற்றீர்.
ஏவிய படிஇனி நடப்பேன்!"
என்றனன் இளைஞன் மாலிக்கு மகிழ்ந்தே
"எவ்விதம் இவ்விதி அடைந்தாய்?
உன்னையே இவர்தம் அடிமை யென்றனரே
உண்மையைச் சொல்லிடு!" என்றான்.

தன்னிரு விழிகள் கலங்கிட வணிகர்
தலைவனை நோக்கிய இளைஞன்
"பன்னிரு புதல்வர் பெற்றஎன் தந்தை
பரிவுடன் என்னையே உவக்க
முன்னிரு மனைவியர் புதல்வர்க ளேனோ
முற்றிலும் என்றனை வெறுத்துக்
கொன்றிடத் துணிந்து கிணற்றினில் தள்ளிக்
கொலைத்தொழில் புரிந்திட லானார்!"

"இன்றுடன் நான்கு நாட்களாய்க் கிணற்றில்
இறந்திடா தெனைக்காத்த இறைவன்

என்னுயிர் மீட்க உங்களை ஏவி
இவ்விடம் அனுப்பிய பின்னே
கொன்றிட நினைத்த தம்முடை எண்ணம்
குலைந்ததை யுணர்ந்து, தம் அடிமை
என்றெனைச் சொல்லி உங்களை ஏய்த்தே
என்னையே கொன்றிட வந்தார்.

கண்ணையே துடைத்த வண்ணமாய் இளைஞன்
கழறுதல் கேட்டொரு வணிகன்
"என்னடா, கதைகள் அளக்கிறாய்? இவற்றை
ஏனடா, மறைத்தனை முன்பு?
உன்னையே தங்கள் அடிமை என்றார்கள்
ஒன்றையும் மறுத்திடா திருந்தாய்.
பின்னை ஏன் பொய்கள் பேசிடு கின்றாய்.
பேசடா உண்மையை!" என்றான்.

நெஞ்சினைப் பிளக்கும் சொற்களை எறிந்து
நின்றிடும் வணிகனைப் பார்த்து
"நஞ்செனத் தெரிந்தும் சுவைப்பதை யொக்கும்
நானவர் வார்த்தையை மறுத்தல்
வஞ்சகம் அனைத்தும் வடிவமாய்க் கொண்டு
வந்தவர் பொய்யை மெய்யாக்கச்
கொஞ்சமும் அஞ்சார், மெய்யைப் பொய்யாக்கக்
கூசிடார்" என்றனன் இளைஞன்.

உண்மையைக் காட்டிப் பொய்ம்மையைப் போக்கல்
உன்பொறுப் பல்லவோ!" என்றே
அண்மையில் நெருங்கி வினவினார் மாலிக்.
"அவர்களோ பதின்மராய் இருக்க
உண்மையென் றென்றை யானுரைத் தாலே
ஒப்பிடு வீர்களோ?" என்று
வன்மையாய் இளைஞன் விடையிறுத் துலக
வழக்கமும் சாடிட லானான்.

அனைத்தையும் கேட்ட மாலிக்கு வியந்தே
அழகுபோ லறிவிலும் சிறந்து
நினைத்ததைக் கூறும் துணிச்சலும் அடைந்து
நெஞ்சகம் கவர்ந்திடும் இவனை

எனக்கென நீங்கள் கொடுத்திடல் வேண்டும்;
இவனுக்கு வழங்கிய விலையைக்
கணக்கினில் எனக்கென எழுதுவீர் பொதுவாய்க்
கருதிடீர் தோழரே!'' என்றான்.

இன்னொரு வணிகன், ''மாலிக்கின் வார்த்தை
ஏற்றிடத் தக்கதாய் இல்லை!
பண்ணிடும் தொழிலில் கிடைத்திடும் பயனில்
பங்குநம் அனைவர்க்கு முண்டு;
தன்னொரு வருக்கே வாங்கிய இவனைத்
தந்திடச் சொல்வதும் முறையோ?
சின்னவ னிவனை விற்றிடில் லாபம்
திரண்டிடும் அதிகமாய்!'' என்றான்.

அவனுரை கேட்டு வருந்திய மாலிக்
''அப்படிக் கருதிடில் நீங்கள்
இவனது விலையை என்னவென் றுரைப்பீர்
ஈந்திடு வேனதை உமக்கே.
எவரது குறையும் வேண்டிய தில்லை!''
என்றதும் திரும்ப அவ்வணிகன்
''இவனையே பொதுவாய் ஏலமிட் டிடலாம்''
என்பதே என்விருப் பென்றான்.

''சொந்தமாய் எனக்கு வேண்டிடில் நீங்கள்
சொல்கிறீர் ஏலம்விட் டிடவே.
விந்தையே உங்கள் விருப்பமே நமக்குள்
வேற்றுமை கூடுமோ? இவனை
எந்தவோர் விலைக்கு மதிப்பினும் சொல்வீர்
என்பொருள் தருகிறேன்'' என்றான்.
இந்தவோ ரெண்ணம் ஏற்றிடேன் அவனை
ஏலமே போடுவோம்'' என்றான்.

''நீங்களே இங்குக் கூறுவீர் ஏலம்;
நிச்சயம் பெரும்விலை தந்து
வாங்குவே னவனை'' என்றிடும் மாலிக்
வார்த்தையை மறுத்தொரு வணிகன்,
''நீங்களேன் இதற்குப் பகைத்திட வேண்டும்
நிச்சயம் உங்களை அன்றி

வாங்குவார் யாரும் ஈங்கிலை எனினும்
வர்த்தகம் நமக்குளே வேண்டாம்.''

என்றதைக் கேட்டு மாலிக்கை நோக்கி
இளைஞனும் இயம்பிட லானுன்:
''இன்றெனக் காக உங்களுக் குள்ளே
ஏதுக்கு வேற்றுமை பலரும்
ஒன்றெனச் சேர்ந்து தொழில் புரிந்திடவே
ஒற்றுமை முக்கியம்!'' என்றே.
நன்றென ஏற்று அவனையும் அழைத்து
நடந்தனர் 'அனுபீஸ்' நோக்கி.

---

# சுலைகாவின் சுயம்வரம்

## இயல்—26

புகழின் ஒளியால் புவியாவும்
போற்றும் மன்னர் தைமூஸின்
மகளின் நெஞ்சைக் கவர்ந்திடவே
வந்த 'ரூமி'ன் அதிபதியும்
திகழும் 'ஷாமி'ன் கோமகனும்
சீமான் பலரும் சுலைகாவின்
முகத்தைக் காணும் ஆவலுடன்
முன்பின் நோக்கி இருந்தனரே!

எதிரில் அமைந்த அரங்கினிலே
எழிலின் சுவனத் தரம்பையராய்ப்
பதின்மர் தோன்றிக் கைகூப்பிப்
பணிந்தார் தைமூஸ் முகம்நோக்கி
மதியை மனத்தை ஊடுருவும்
வலிமை மிகுந்த இசைநாதச்
சுதியில் மயங்கும் பாம்பெனவே
சுழன்று ஆடினர் இருமாதர்!

குயிலாய் ஒருத்தி சுலைகாவின்
குலையா அழகைப் பாடிடவே
மயிலாய்ச் சேடியர் இடைகுலுக்கி
மயக்கும் வண்ணம் ஆடிடவே
துயிலாப் பெண்கள் காதல் முகம்
சோர்ந்து தேடித் தவிப்பதுபோல்
துயராய் வந்தோர் எழில்பொங்கும்
சுலைகா முகத்திற் கேங்கினரே.

ஏக்கம் உணர்ந்த தைமூஸே
இடது புறத்தில் திரும்பிடவே
நோக்கம் அறிந்து ஒருசேடி
நோட்ட மிட்டாள் பாங்கியரை.

தூக்கம் கொண்டோர் முகம்போலச்
சோர்ந்து வந்த தோழியரோ
ஊக்கம் இழந்தே ஏந்தலரை
ஊமையர் போன்று நோக்கினரே!

சுலேகா அழைக்கச் சென்றவர்கள்
சோர்ந்து திரும்பி விட்டதனுல்
நிலேயே அறிந்து தைமூஸின்
நினேவே குலேய அசைவற்றுச்
சிலேயாய் இருந்தார் கணநேரம்
சினந்தே எழுந்தார், தாமேபோய்ச்
சுலேகா அழைத்து வந்திடவே
தோழியர் தொடரச் சென்றனரே!

சாந்தம் இழந்த தைமூஸே
தாவிச் செல்லச் சுலேகாவோ
கூந்தல் குலேய மதிமுகமே
கவிழ்த்து நெஞ்சில் குடிபுகுந்த
ஏந்தல் நினேவாய் இருப்பதையே
எண்ணிப் பார்த்த தைமூஸே
சாந்தம் அடைந்து சுலேகாவைத்
தழுவி அணேத்து மொழிந்தாரே:

"அன்புக் கடலின் ஒளிமுத்தே!
அணேயா விளக்கே! ஆரமுதே!
பண்புப் பொழிலே! சுலேகாவே,
பகர்வே ஞென்றே, கேளாயோ!
முன்புன் கனவில் வந்தவனே
முனேந்து பிடித்தே வந்தோமே.
கண்முன் அவனேக் கண்டிடவே
கடிதில் வருவாய்!" என்ருரே!

தந்தை வார்த்தை செவியேற்றுத்
தன்னே வாட்டும் கனவேதான்
விந்தை ஏதும் செய்திடவே
மீண்டும் தன்முன் தோன்றியதோ?
எந்த உண்மையும் அறியாமல்
எதிரே நின்ற தைமூஸை

"எந்தாய்! இதுவும் கனவன்றே?"
என்ருள் சுலைகா ஐயத்தால்!

"கனவே அல்ல கண்மணியே,
காண்ப தெல்லாம் மெய்யாகும்!
உனையே காண அவரேதான்
உள்ளம் துடித்தே நிற்கின்ருர்;
எனவே வருவாய் விரைவாக!"
என்ருர் தைமூஸ். இதைக்கேட்டு
"முனமே அழைத்த தோழியரே
முற்றும் மறைத்த தேன்?" என்ருள்.

"வாட்டம் போக்கும் இசைகேட்க
வாராய்!" என்றனர் மறுத்திட்டேன்.
ஆட்டம் பார்க்க அழைத்தார்கள்
அதுவும் வேண்டா மெனக்கென்றேன்.
'தேட்டம் வளர்த்த அவனேதான்
தேடி வந்தான்!' எனச்சொன்னல்
ஓட்டம் பிடித்து வாரேனே?
உணர்வா யுரைத்தாள் சுலைகாவே!

"எல்லாம் உண்மை சுலைகாவே
எழுந்து வாராய் விரைவாகச்
சொல்லொற் காலம் கடத்தாதே
துன்ப வாழ்வே நடத்தாதே.
வல்லார் உன்னை வரித்தேக
வந்தே யுள்ளார்; உன்துயரம்
எல்லாம் விலகும் கனவீந்த
எழிலனைக் காட்ட வா" என்ருர்.

எத்தனை நாளாய் அவனுக்காய்
ஏங்கி ஏங்கி அழுதேன்யான்
இத்தனை காலம் எங்கேதான்
என்னை மறந்து இருந்தாராம்.
அத்தனை பாவம் புரிந்தேனே
அறியாச் சிறுவன் அவன்தானே?
பித்தனை ஏதும் கேட்டீரோ!"
பிதற்ற லானுள் சுலைகாவே.

"யாவும் கேட்டோம் அவனேதான்
யாதும் கூறேன்; அத்தனையும்
தேவி சுலேகா திருச்சமுகம்
செப்பத் தவறேன்" என்கின்ருன்.
பாவி அவனே உனைக்காணப்
பதறு கின்ருன் வாராய்நீ!
யாவும் அவனை நீயேகேள்,
யாரும் தடுக்கார்!" எனச்சொன்ஞர்.

"அவனைக் காண ஈராண்டாய்
அழுது கண்ணீர் வடித்தேனே
இவளைக் காண அவனின்றே
ஏங்கிக் கண்கள் பூக்கட்டும்
அவனுக் காக விரைவாக
அங்கே வாரேன்!" எனச்சொல்லிக்
கவலை மறந்து சுலேகாவே
கட்டிலில் மீண்டும் அமர்ந்தாளே!

"இப்படி நீயே இருந்தாயேல்
இங்கே வந்தவன் திரும்பிடுவான்.
அப்படி அவனே சென்ருனேல்
அப்பால் கிடைக்க மாட்டானே!"
இப்படிச் சொன்ஞர் தைமூஸே
எழுந்து விரைந்தாள் சுலேகாவே.
"எப்படி அவரிடம் பேசிடுவேன்?"
என்ருெரு தோழியை வினவினளே.

"குலேந்த கூந்தல்; அழுதவிழிக்
கூம்பிச் சுருங்கிய கிழமுகமும்
கலேந்த ஆடை அணியாவும்
கண்டால் அவனே நகைக்கானே?
விளைந்த இன்பம் அரைநொடியில்
வீணய் முடியும், அத்தனையும்
களைந்து புதிதாய் அணிந்தேநீ
கடிதில் வருவாய்!" எனச்சொன்ஞள்.

உணர்வு கலங்கி மனங்குழம்பி
ஒன்றும் ஏற்கா சுலேகாவைக்
கணத்தில் காதலன் நினைப்பூட்டிக்
கருத்தை மாற்றிய தைமூஸின்
மனத்தில் இன்பம் பொங்கிடவே
மகளைத் தோழியர் பால்விட்டுக்
"குணத்திற் கேற்ப உடைமாற்றிக்
கூட்டி வருவீர்!" எனச்சென்றார்.

மன்னர் தனியே வரக்கண்டு
மலைத்து நோக்கிய சபையிடமே
"இன்னும் சிறிதே பொறுத்திடுவீர்.
என்மகள் சுலேகா வந்திடுவாள்.
ஒன்றும் தவறாய் எண்ணுதீர்
உங்களில் யாரைத் தேர்ந்தாலும்
இன்றே திருமணம் செய்திடுவேன்!"
என்றார் மன்னர் தைமூஸே.

பாதச் சிலம்பு ஒலிசெய்யப்
பாங்கியர் சூழச் சுலேகாதன்
காதல் தெய்வம் கண்டிடவே
கண்களை எங்கும் சுழற்றிடவே
மோதும் ஆவல் உந்திடவே
மெள்ள மாக வந்திடவே
பாதம் நோகும் எனச்சேடிப்
பாதையில் மலர்கள் தூவினளே.

ஏக்கம் அடைந்தே இருந்தோர்கள்
இருவிழி விழித்துச் சுலேகாவை
நோக்கி மகிழ்ந்தார் அந்நேரம்
நுதலை சுருங்கச் சுலேகாவும்
நோக்க லானாள் சபையோரை.
நொடியில் அறிந்து தன்மகுடம்
தூக்கி எறிந்து "எங்கேஎன்
தோன்றல்" என்று முகங்கடுத்தாள்.

மன்னர் தைமூஸ் மனம்நொந்து
மகளைப் பார்த்து "சுலேகாவே

முன்னர் கனவில் வந்தவரை
முழுதும் சுற்றிப் பார்த்திடுவாய்!
பின்னர் இங்கே இருப்போரில்
பிடித்த ஒருவரைத் தேர்ந்திடுவாய்!!
எண்ணம் போன்று அவருக்கே
ஈவே னுன்னை'' என்றுரே.

“இவரே ‘ஷாமி’ன் இளவரசர்
இங்கே யிருப்போர் பெருவணிகர்,
அவரோ ‘ரூமி’ன் பேரரசர்,
அங்கே அமர்ந்தோர் ஆணழகர்,
எவரோ ஒருவர் தேர்ந்திடுவாய்!''
என்றுர் தைமூஸ். இதைக்கேட்டே
“அவராய் இவரில் எவரேனும்
ஆகார்'' என்றுள் சுலேகாவே.

“நெஞ்சைக் கவர்ந்த அவர் நிழலை
நெருங்கும் தகுதி படைத்தவரும்
தஞ்சம் தேடும் எனக்குதவி
தந்திடு வீரரு மிங்கில்லை.
வஞ்சம் செய்தே எனை இங்கே
வரவே செய்தீர், உயிர்போக்கும்
நஞ்சைத் தந்தால் நானுண்பேன்,
நாடேன் மற்றவர்!'' எனச்சொன்னுள்.

புத்தம் புதிய ஆடைகளைப்
பொன்னு பரணம் முத்தணியைப்
பித்தம் பிடித்தோர் செயலேபோல்
பிய்த்தே எறிந்த சுலேகாவே,
“கத்தன் படைப்பை மறந்தாலும்
காதலன் காதலி மறப்பானே?
நித்தம் கண்ணீர் வடித்தாலும்
நினைவை மாற்றேன்!'' எனச்சொன்னுள்.

வந்தோ ரெல்லாம் மனம்நொந்து
மன்னர் தைமூஸ் முகங்கூர்ந்து
“அந்தோ, யாங்கள் என்செய்வோம்,
ஆசைத் தீயில் இளவரசி

வெந்தே, சொந்த நல்லுணர்வும்
வேகச் செய்தார், இனியவரின்
சிந்தை விரும்பாச் செயலேதும்
செய்தால் தீதே வரும்!''என்றார்.

“கண்ணே போன்ற என்மகளின்
காதற் கனவும் பலித்திடுமா?
என்னே செய்வேன்! இதற்காக
இந்நா டிழக்கவும் ஒப்பிடுவேன்''
என்றார் தைமூஸ். அதைக்கேட்டே
“எதற்கோ என்னைப் பெறவேண்டும்?''
என்றாள் சுலைகா, தைமூஸோ
இழுத்துச் செல்லப் பணித்தாரே.

பற்றிச் செல்லும் தம்மகளைப்
பார்த்து நெஞ்சம் புண்ணாகிச்
சுற்றிக் கூர்ந்து “சபையோரே,
சுலைகா துன்பம் பார்த்தீரா?
சற்றும் இந்நோய் மாற்றிடுவோர்
சபையில் உண்டா? அதற்காகக்
கொற்றம் வேண்டினும் தந்திடுவேன்
கூறுக!'' என்றார் தைமூஸே!

எதிரில் அமர்ந்த அவைப்புலவர்
எழுந்து அருமை “இளவரசி
விதியின் கரத்தால் மனங்குழம்பி
விட்டார், காதல் வசப்பட்டார்
மதியின் திறத்தால் இதைமாற்றும்
மார்க்கம் சொல்வார் புவிஇல்லை,
விதியின் கரத்தே விட்டிடுவோம்
வேந்தே!'' என்றார் துயர்பொங்க!

---

# தோழியரை வினவுதல்

## இயல்—27

ஏதுக்கு எனை இந்த வாதைக்கு உள்ளாக்கி
எங்கே இழித்தேகின்றீர்?
எல்லோரும் ஒன்ருகி என் தனிமை கொல்கின்ற
தேனேவென் றெடுத்தோ துவீர்?

தீதுக்கு அஞ்சாத தீயவரும் எனைவாட்டும்
செயலாற்ற அஞ்சு வாரே,
தீமையே நினைக்காத தோழிகாள் நீங்களெனைச்
சித்திரவதை செய்ய லாமோ?

வாதுக்கு நிற்காத சாதுக்களை மோதும்
வன்னெஞ்சம் கொள்ள லாமோ
மன்னரே ஆயினும் எண்ணம்போற் குடிகளை
வாட்டிடச் சொல்ல லாமோ?

தோதுக்கு இணங்காத பேதைக்குக் கொடுந்துன்பம்
சூழ்ந்திடச் செய்ய லாமோ?
துணைவனே இலையென்ற துணிச்சலே அல்லவா
தோழிகாள் சொல்லு வீரே!

தாயா யணைத்துத் தவச்சேயாய் வளர்த்தஎன்
தந்தையும் தவறு வாரோ?
தந்தையே ஆயினும் சிந்தைவிரும் பார்களின்
தாரமாய்ச் செய்தல் முறையோ?

தாயா ரிருந்திடில் வாயா லுரைக்குமுன்
தானுய்ப் புரிந்தி டாரோ?
தாரமாய்க் கொண்டவன் கோரமாய் வதைக்கையில்
தந்தையும் வதைப்ப துண்டோ?

நாயாய்ப் பிறப்பினும் ஓயாமல் புவிசுற்றி
நாதனைத் தேட லாகும்
நாடாளும் மகளாகி வீடேயென் சிறையாகி
நானுங் கள்கைதி யானேன்

பேயாய் இருப்பினும் பெண்ணுக் கிரங்குமெனப்
பெரியோர்கள் சொல்வ துண்டே
பெண்ணு யிருந்துமொரு பெண்ணுக் கிரங்காது
பிழைசெய் தல்பெரும் பாவமே!

பெண்மாய மல்லாது பொல்லாத தில்லையெனப்
பிழைசொல்லி ஆண்மா யம்தான்
பெருமாயை என்பதைத் திரையிட்டு மறைத்திட்ட
பிசகினால் யான்சிக் கினேன்

பெண்பாவ மல்லாது பெரும்பாவ மில்லையெனப்
பேசுவோ ரிங்கு இல்லையோ?
பேதையான் மீளும்வழி யாதென்று கூறிடும்
பெருந்தகை யாரு மிலையோ?

கண்மாயை வலைப்பட்டுக் கரைகாணும் வழியற்றுக்
கதிதே டும்எனைக் காக்கவே
காதலமு தூட்டிய நாதனார் வந்துதம்
கரம்தந்து தூக்கு வாரோ?

பெண்மாயை என்றெனைப் பேயாய் மதிப்பாரோ,
பேதையான் என்செய்குவேன்?
பேசாமடந் தையராய் வாய்மூடி நிற்பதேன்
பேரன்புத் தோழி மாரே!

எல்லாம் விதிப்பயன் அல்லாது வேறில்லை
என்றேங்கி நின்றழுவனோ?
ஏவல்செய் தோழியரின் காவலுக் குள்ளாகும்
இழிவுற் றதற்க ழுவனோ?

சொல்லாமல் விட்டோடும் கள்வனைத் துணைவனாய்த்
தொடர்ந்திட்ட தற்கழுவனோ
துயரேதுங் காணாத இளநெஞ்சை அழகுப்பேய்
தொடவிட் டதற்க ழுவனோ?

கொல்லாமல் கொல்கின்ற ஆசையை அமுதமாய்க்
குடித்திட்ட தற்கழு வேனோ?
குன்றாத துன்பத்தைத் தருகின்ற பேரன்பு
கொண்டதற் கேஅழு வனோ?

எல்லோரும் ஏதுக்குக் கல்லாக நிற்கிறீர்
என்னுயிர்த் தோழி மாரே!
இவையன்றி வேறென்று இருந்திடில் அதையேனும்
எடுத்தோதி எனைத் தேற்றுவீர்!

தன்னை வினவுதல்:

எண்ணுவதைத் தந்திட இயலாரின் மகளான
தெண்ணி எண்ணி அழுவனோ?
எட்டாத பழத்திற்குக் கொட்டாவி விடும்கெட்ட
இதயம் பெற்றதற் கழுவேனோ?
உண்ணுவதற் கேற்றதோ அல்லவோ என்றுமுன்
புணராத தற்கழு வனோ?
உதவாது போயினும் பெருந்தீது செய்பவரின்
உறவேற் றதற்க ழுவனோ
விண்ணுதிர் மாரியெனக் கண்ணுதிர் குருதியே
வீணாவ தற்க ழுவனோ?
வீராதி வீரனாய் வந்தகம் சோரம்செய்
வித்த தற்கே அழுவனோ?
பண்ணுவது தீதெனப் புரியாது கனவுக்குப்
பலியா னதற்க ழுவனோ?
பாங்கிமார் யாவரும் பகைவராய் மாறிய
பாபத் திற்கே அழுவனோ?

காதலனை வேண்டுதல்:

பெண்ணாசை யற்றிடில் மண்ணாசை பொன்னாசை
பெரும்வாழ்வி னாசை ஏது?
பேரின்பப் பொழிலாகும் இல்லறந் துறந்திடில்
பிறவியும் பெருமை பெறுமோ?

பெண்ணு யிருப்பினும் ஆணு யிருப்பினும்
பிறவி முழுமை யாகுமோ?

பெண்ணொரு ஆணையும் ஆணொரு பெண்ணையும்
பெற்றாலே பூர்த்தி யாகும்.

தன்னுசை கொன்றிடத் துணிபவர் உயிரற்ற
சவமாவ துண்மை யலவோ?

தவவாழ்க்கை ஏற்பினும் தம்மைத்தாம் ஏமாற்றல்
தற்கொ லைக்கொப் பாகுமே?

என்னுசை தூண்டிவிட் டுன்னுசைக் கேங்கிட
எங்கே மறைந்து விட்டாய்?

ஏமாற்றி யதுபோதும் ஏந்தலே தயைகூர்ந்து
என்னரு கில்வர வேண்டுமே!

பாங்கியரின் அன்பிலே, தந்தையரின் பண்பிலே
பார்க்காத பேரின் பத்தைப்

பார்வையினில் காட்டிவிட் டோடிய அண்ணலே
பரிவோ டணைக்க வருவீர்!

ஏங்கிடும் விழிகளிற் றேங்கும்சுடு நீரையே
இன்றே துடைக்க வருவீர்!

எங்கே இருப்பினும் அங்கே எனைக்கூட்டி
ஏகவே இனிது வருவீர்!

நீங்கியுயிர் வாழ்ந்துதுயர் தாங்கியது போதுமே
நெஞ்சம் இரங்கி வருவீர்!

நினைக்கவும் கூடாத கொடுந்துன்பம் சூழ்வதை
நீக்கிஎனை நோக்கி வருவீர்!

ஏங்கியது போதுமினி இயலாது, இயலாது,
இன்பம் சுரக்க வருவீர்!

இரவுபக லாய்உமைத் தேடியே வாடிடும்
என்னரு கில்வர வேண்டுமே!

---



# காதலுக்கு விலங்கா?

இயல்—28

ஆடுவதும் ஓடுவதும் அங்குமிங்கு மாக
ஆர்ப்பரித் துலாவுவதும் அழுதபடி நின்று
வாடுவதும் காதலனைத் தேடுவது மாக
வாய்திறந்து கலகலெனப் பேயெனச் சிரித்துப்
பாடுவதும் பாங்கியரைச் சாடுவது மாகப்
பண்பிழந்த பேரழகி முல்லைமலர் கொய்து
சூடுவதும் தூக்கிஎறிந் தோடுவது மாகச்
சுலேகாவின் செயல்முழுதும் குலைந்திடவே ஆச்சு.

ஆற்றல்மிகும் கவியரசும், புவீயரசர் தைமூஸ்,
அமைச்சருடன் பிணியகற்றும் மருத்துவரும் சூழப்
போற்றுமெழில் புதல்விநிலை மாற்றிடவே வந்தார்.
'பொலபொலெ'ன விழிகள் நீரைப் பொழிந்திடவே நின்றார்.
தேற்றுதற்கு வந்தவர்கள் சாற்றுதற்கு அஞ்சித்
திரும்பிடவே நினைத்துருகிப் பெருந்துயரம் கொண்டார்.
வீற்றிருந்த சுலேகாகொடுஞ் சீற்றமுற்ற போது
வேற்றுவராய்த் தோற்றிடவே தூற்றிடத் துணிந்தாள்.

"மண்ணுலகைப் பொன்னுலகாய் மாற்றும்பெண்கு லத்தை
வஞ்சகமாய் வாட்டுகின்ற ஆண்குலம் பிறந்தோய்!
பெண்ணுலவும் கன்னிமாடம் என்னசெய்ய வந்தீர்?
பிளந்திடுவே னுங்களகம் போய்விடுவீர்; இங்கு
முன்பொருவன் வந்தெனக்கே அன்பிலாவ னூட்டி
மோசம்செய்து என்றன்வாழ்வை நாசமாக்கி விட்டான்.
இன்னுமுங்கள் கண்வலையில் சிக்கிடுவே னென்றோ
இங்குவந்தீர்!" எனச்சுலேகா துயர்பொங்கக் கேட்டாள்.

"இன்னுயிரே! என்மகளே! என்னவானுய் நீயே?
இதயம்போல இருவிழியும் இருண்டதுவோ கண்ணே!
என்னையும் அறிந்திலேயோ?" என்றுமன்னர் கேட்க
"ஏதுக்குமை யானறிய வேண்டும்?"எனக் கேட்டாள்.
"விண்மணியே! நின்நிலேயே விளங்கிடவே வந்தோம்.
விருப்பமின்றேல் போய்விடுவோம்"என்ருர் கவிவாணர்.
"பெண்மணியே இவ்வுலகின் கண்மணிதா னென்ற
பெருமைபெறும் எம்நிலேயை விளங்கினீரோ?" என்ருள்.

சிந்தையே கலங்கிநொந்த ஏந்தலர்தை மூஸே
செய்வதென்ன சொல்வதென்ன? என்றுஆய்ந்து நிற்கத்
தந்தையே தனதருகில் வந்தாரென் றுணர்ந்து
தாவிச்சென்று தாளில்வீழ்ந்து கேவிய சுலேகா
"எந்தையேயா னென்னசெய்வேன் என்னேயே கவர்ந்த
எழிலரசை எவ்விதமே இவ்விடமே காண்பேன்?
தந்தையே எனக்கவரைத் தந்திடமாட் டீரோ?
தாங்கிடும் மனச்சுமையும் நீங்கிடுமோ?" என்ருள்.

"பொறுமையேநற் பெண்களுக்குப் பெருமையான செல்வம்
புத்திமாறும் புல்லுணர்வை ஒடுக்குவதே வீரம்
சிறுமையேசெய் யாசைத்தீயை உறுதியால் அணைக்கும்
திடமனமே வெற்றிபெறும் என்றமைச்சர் கூறப்
பொறுமையே இழந்தெழுந்த பொற்கொடியாள் சுலேகா
புலியெனவே சீறிப்பாய்ந்து கிலிபிடிக்கச் செய்து
"வெறுமனேசெய் யுபதேசமே வேண்டாம், நீங்களுங்கள்
வேலேகளேப் பார்த்திடுவீர்!" என்றதட்டி ளுளே.

"ஆருயிரே, என்மகளே! தேறுதலே கொள்வாய்;
அதிவிரைவில் நின்னருகில் அவனேச்சேர்ப்போ மென்று
கூறுகின்ற தந்தையரைக் கோபமுடன் கூர்ந்து
"கொற்றவரே வாக்குறுதி பெற்றதுவே போதும்
ஆறுகின்ற நெஞ்சையேபுண் ஆக்கிடுதல் வேண்டாம்;
ஆசைக்கனல் தூண்டிவிட்ட கன்றிடவும் வேண்டாம்
மீறுகின்ற என்துயரம் வீறுகொள்ளு முன்பே
மீண்டிடுவீர்" என்றுஅவள் தாண்டிக்குதித் தாளே!

சாடிவசை பாடுகின்ற சுலேகாமுகம் நோக்கித்
"தனிமையினுல் அமைதிதரும் இனிமை காணுவாயே

சேடியரின் சொற்படியே, ஓடியாடி டாமல்
சீறிப்பாயும் மனக்குதிரை அடக்கியாள வேண்டும்
கோடித்தவம் செய்துபெற்ற குலவிளக்கே! உன்னைக்
கோறுகின்ற என்கவலை தீரும்படிச் செய்வாய்!
கூடிநிற்கும் எங்களைநீ வாடிடச் செய்யாதே.
கோபமேதும் கொள்ளவேண்டாம்'' என்றனர்தை மூஸே!

பாபத்திற்கே அஞ்சிடாமல் சோபத்திற்கு அஞ்சிப்
பல்லிளித்து நிற்பதென்ன சொல்லிடுவீர்! என்றன்
சாபத்திற்குச் சிக்கிடாமல் தப்பியோடு வீரே!
தாமதிக்க வேண்டாம்; ஆமாம்!'' என்ருள் சுலைகாவே.
கோபத்தீயை அள்ளிவீசும் மகளைமன்னர் பற்றிக்
''கொடுங்கள் செய்தபொன் விலங்கை'' என்ருர்.
[இதைக்கேட்டுச்
''சாபத்திற்குத் துணிந்திட்டீரோ?'' என்ற சுலைகாவின்
தாள்பிடித்துத் துடிக்கும்கையில் விலங்கு பூட்டி ஞரே!

பூட்டியகை நடுங்கிடவே மாட்டியபொன்வி லங்கைப்
பொருத்திவிட்டார் கட்டிலிலே!பொற்கொடிநகைத்தாள்!
நீட்டியகை பற்றியே 'நறுக்'கெனக் கடித்தாள்
நிலைகுலைந்து தலைகவிழ்ந்து செயலிழந்தார் மன்னர்.
''வாட்டியது போதுமெனைத் தீட்டியகூர் வாளால்
வாஞ்சையின்றி வெட்டிஇரு துண்டமாகச் செய்வீர்.
பூட்டிவிட்ட பொன்விலங்கு காதலுக்கா? சொல்வீர்!
போய்விடுவீர்!'' எனச்சுலைகா காறியுமிழ்ந் தாளே!

''என்னசெய்த போதுமுனக் கின்னல்செய்ய ஒப்பேன்.
இங்குமங்கும் ஆடைகிழித் தோடுகின்ற தாலே
பொன்னிற்செய்த இவ்விலங்கைக் கண்ணில்மாட்டுதற் போல்
பொன்னுடலில் பூட்டும்படி நேர்ந்த''தெனச் சொன்னர்.
''இன்னுமென்ன செய்வதற்கு உண்டுமோ அனைத்தும்
இப்பொழுதே செய்திடுவீர்'' என்ருள்சுலை காவே.
''புண்ணில்வேலைப் பாய்ச்சவேண்டாம்,என்னிலையைச் சற்றுப்
பொறுமையோடு ஆய்ந்திடுவாய் புதல்வியே''என்ருரே.

''பொறுமைகொள்ளக் கூறுகின்ற அருமைத்தந்தை யாரே,
போதனையே செய்தெனக்கு வேதனை தராதீர்!

வறுமைகொண்டு உடற்பசியால் வருந்திடு வோர்தம்மை
வார்த்தையினுல் தம்பசியைத் தீர்த்திடச்சொல் லாதீர்.
சிறுமைகொண்டு உழல்பவரைச் சினந்துதாக்கு வோராய்ச்
சீர்குலேந்த என்னிடத்தில் போர்தொடுத்து வென்ற
பெருமைகொள்ளும் பேரரசே, மறுபடியும் ஏதும்
பேசவேண்டாம்! துன்பக்கணே வீசவேண்டா!''மென்ருள்.

''நல்லதுயாம் செல்வோமிதே; இளவரசி யாரே.
நாடுமுற்றும் அவரையாங்கள் தேடிச்செல்லு கின்ருேம்.
சொல்வதுயான் ஒன்றுளது, சொல்லட்டுமா?'' என்று
சுலேகாமுகம் பார்த்துநின்ற முதுகவியைக் கூர்ந்து
நல்லதையே சொல்வதெனில் சொல்லிவிட்டுச் செல்வீர்
நானதற்குத் தடைவிதியேன்!'' என்ருள் சுலேகாவே.
''சொல்லுகிறேன் கேட்டிடுவீர்!'' எனக்கவிஞன் கூறத்
''துரிதமாகக் கூறிடுவீர் அரும்புலவோய்'' என்ருள்.

''எண்ணம்போன்று வாழ்ந்திடலாம்; நம்பிக்கையே
[கொண்டால்
இன்மையெல்லாம் இருப்பதாகும்! இன்னலின்ப மாகும்!
திண்ணமாகச் சொல்லுகின்றேன் உங்களெண்ணம் வெல்லும்!
சிந்தைகுடி கொண்டஅவர் நேரில்வரு வாரே!
உண்மையாக நீங்களிதை உறுதியாக நம்பி
உள்ளத்திலே அமைதிகொள்வீர்!'' என்ருர்கவி வேந்தர்.
''புண்ணேயாற்றும் அரும்புலவீர்! சொன்னதெல்லாம்உண்மை;
பொறுமையாக இருந்திடுவேன் போய்விடுவீர்''என்ருள்.

பிணிக்குஏற்ற மருந்தையொத்த பெருங்கவியின் வார்த்தை
பேரரசர் தைமூஸ்கொண்ட பெருந்துயரம் போக்கக்
கனிவுபொங்கக் கவிஞர்முகம் நோக்கிக் கண்க ளாலே
கடமையாகும் நன்றியினே உடைமையா யணிந்து
''இனிநமக்கே கவலேஇல்லே துணிவுடனே செல்வோம்
எனதுமகள் தனதுஅகத் துயரினேயே வென்ருள்;
தனிமையிலே விட்டிடுவோம்'' என்றரசர் கூறித்
தாதியர்க்குப் பாதுகாக்கச் சைகைகாட்டிச் சென்ருர்.

குறிப்புணர்ந்த இளவரசி மீண்டும் கொதிப்புற்றுக்
''கொற்றவனே! சற்றுநில்லாய்'' என்றுதடுத் தாளே.

மறுப்பறிந்த மன்னர் மலைத்து நின்ற போது
    மந்திரியார் "நிற்கவேண்டாம்;போய்விடுவோ"மென்றார்.
"வெறுப்பறிந்து சென்றிடலாம்!" என்றரசர் நிற்க,
    வீறுகொண்ட வேங்கையெனச் சீறி,"நாட்டை யாளும்
பொறுப்படைந்த மன்னவனே உன்னரசில் நீதி
    பொய்த்ததுவோ விலங்கெனக்கேன் பூட்டி விட்டாய்?"
[என்றாள்.

"கொள்ளையடித் திட்டவனைக் கொண்டுவந்து காலில்
    கொடுவிலங்கைப் பூட்டுதற்கு முடியவில்லை என்றால்
கொள்ளைகொடுத் திட்டவளைக் குற்றவாளி போன்று
    கொடியகைதி யாக்குமுங்கள் நீதியென்ன நீதி?
உள்ளமதைக் கொள்ளையிட்ட கள்வன் தப்பவிட்டு
    உளமிழந்து உருகுமென்னைப் பூட்டுவதோ நேர்மை?
கள்ளமிலா நீதிசெயும் வள்ளலும் நீர்தானோ?
    கடமைதவ றாதஉயர் காவலனும் நீயோ?"

நெஞ்சைத்துளைக் கின்றகொடு வேலெனவே சுலைகா
    நிகழ்த்துகின்ற வார்த்தையவர் இதயமீது பாய
நஞ்சையுண்டு விட்டவராய் நடுநடுங்கித் தைமூஸ்
    "நன்மையே, என்மக்ளே! நின்மொழிதாங் கேனே,
கெஞ்சுகின்ற தந்தையிடம் கிருபைகொண்டு நீயே
    கேட்கவேண்டாம் வேறுஏதும் உன்நிலையை மாற்றக்
கொஞ்சகாலம் இப்படியே இருந்திடுவாய்" என்றார்.
    "கொன்றொழிக்கும் வரையிருப்பேன்" என்றனளே
[சுலைகா.

---

# சுலேகாவின் பிரார்த்தனை

## இயல்—29

தவமேவிய அடியார்க்கருள் தவருதருள் புரிவாய்
பவமேதென அறியர்ர்துயர் பறந்தோடிட அருள்வாய்
தவறேசெயத் துணியாஎனைத் தனியாக்குதல் முறையோ
எவரேயுனை யல்லாதெனக் கேற்றதுணை இறையே!

அயலாரகம் துயில்வாரிடம் அன்பேசெயப் படைத்தால்
துயராலகம் அயராவரம் சுரக்சாதது முறையோ?
பயமேபடைத் தடியார்முகம் பார்க்காதது சரியோ?
நயமேதரும் கருணைஒளி நயனமுடை இறையே!

சிறையேதரும் உலகோரிடம் சிரமேகுனிந் திடவோ?
குறையேமிகும் கொடியோரிடம்குறையேஉரைத்திடவோ
மறையேதரும் இறைவாபுவி மறைந்தாயிதற் கெனவோ?
நிறைவாகிய நிதியேகுறை நிலைக்காதருள் இனறயே!

அழியாப்பழி யடைந்தேஅதை அடுத்தோ ரறிந்திடவே
மொழியாலுரைத் திடவேஏதும்முடியா நிலையடைந்தேன்.
விழியாலெழும் துயரேசுடும் வெந்நீரெனச் சிந்த
ஒழியாத்துயில் புரிவாயெனில் பழிசேர்ந்திடும் இறையே!

பிறவாவரம் அளித்தாயிலை. பிழையாய்ப் பிறந்தாலும்
இறவாவரம் தந்தாயிலை; எண்ணுதகை எண்ணி
மறவாவரம் அளித்தே,எனை மதியார்தமை மதித்தே
உறவாடிட உரையாடிட உணர்வூட்டிய இறையே!

மணியேஎன எனையேமிக மதித்தா ரவமதித்தே
தணியாக்கொடும் பிணியேஎனத் தனியாக்கிய நிலையே
அநியாயமி தநியாயமி தநியாயமே அலவோ,
கனிவாகியஅருள்கூர்ந்தெனைக் கரைசேர்த்திடு மிறையே!

கொடையாளரின் குணத்தால்மனங் குலையார்நகை
முகத்தால்
படையாளரின் பலத்தாலரும் பணியாளரின் துணையால்,
தடையேஎதும் கிடையாதெனும் தந்தைபெரும் தயவால்
அடையாநல மடையவுனை அடைந்தேன்என திறையே!

உருவாகிய வாழ்வின்நிழல் ஒளியாகிய கனவில்
தருவாகிய பெருவேட்கையில் தருவாயருங் கனியே
மறுவாகிய துயரேகிட மறந்தார்வர அருள்தாய்
தருவாய்கொடுஞ் சாவாகிலும் திருவாகிய இறையே!

---

# காதலன் வந்தான்

## இயல்—30

மந்திரியைத் தந்திரியைப் படைநடத்தும்
தளபதியை, மாண்பு மிக்க
தந்தையரைத் தாதியரைத் தனக்குதவி
தருமாறு தாழ்ந்து கேட்டும்
எந்தவொரு பயனேதும் கிடைக்காது
துயருற்று இறுதி யாக
சுந்தரியாள் இறைவனிடம் தன்நிலையை
முறையிட்டுத் துயில லானுள்!

நீங்காத போதைதரும் காதல்மது
உண்டதனுல் நிலைகு லைந்து
தூங்காது பலநாட்கள் விழித்திருந்த
இளவரசி தூங்கக் கண்டு
தாங்காத பெருஞ்சுமையே தலையிருந்து
இறங்கியதாய்ச் சாந்தி கொண்ட
பாங்கியர்கள் உண்மைநிலை மன்னருக்குப்
பகர்ந்திடவே பறந்து சென்ருர்!

ஆருதமனப் புண்ணை ஆற்றிவிடும்
காலத்தின் ஆற்ற லாலே
தீராத கொடும்பிணியே தீர்ந்துவிடில்
அமைதிபெறும் சிந்தை போன்று
மாருத காதலனை அடைவதற்கு
இறைதுணையை வருத்தித் தேடிச்
சீராகத் துயில்புரியும் சுலைகாவின்
அருகிலெழில் சீமான் வந்தார்!

**ஊடல்:**

நெஞ்சுவந்த மெய்யன்பர் என்ருலும்
பிரிந்தபின் நெருங்கு வாரேல்
அஞ்சுவரே அல்லாமற் கொஞ்சுவரோ!
சுலேகாவும் அவ்வா ருனுள்.
பிஞ்சுமனம் வெம்பிடவே நெடுங்காலம்
தனை மறந் தபெரும் பிழைக்குக்
கெஞ்சிடுவா ரென நினைத்தாள்; கெஞ்சாம
லவரிருக்கக் கேட்க லானுள்'

"பெண்ணுக்குப் பிழைசெய்த பெரும்பாவம்
தனை எண்ணிப் பேச்ச டைத்துக்
கண்ணுக்கு விருந்தாக நிற்கின்ற
தெதற்காக, காதல் செய்த
புண்ணுக்கு மருந்தாகும் புண்ணியத்தை
மறந்தாலும். புண்ணுண் டாக்க
முன்னுக்கு வருகின்ற ஆணழகா!
உனக்கிதுவே விளையாட் டாமோ?

"அன்புக்கு அன்பும், உயர் அழகுக்கு
அழகும், உடல்ஆ விதந்து
பண்புக்குப் பண்புதரும், பணிவுக்குப்
பணிவுதரும் பாசம் கொண்டேன்.
என்றைக்கு நின்விழியில் பட்டேனே
அன்றைக் கேளனை யழித்துச்
சென்றிட்ட நீஎதற்கே இன்றைக்கு
என்னில்லம் திரும்ப வேண்டும்?"

"மனங்கவரும் ரோஜாவாய் மணந்தஎனை
ஏக்கத்தால் மஞ்சள் பூத்த
பிணமாக்கிப் பூவரசம் பூவாக்கும்
ஆசைநோய் பிடிக்கச் செய்து
குணமாக்கும் அருமருந்தும் கொண்டோடி
மறைந்திட்ட கூற்றுவா, நின்

கணநோக்கில் பலியான எனைநோக்க
அஞ்சினையோ கழறு வாயே!''

''ஓயாத கடலலையாய் முன்பின்னுய்
உருண்டோ டும்உணர்ச்சி யூட்டித்
தேயாத முழுமதியாய் இருந்தஎனை
நின்நினை வாற்றேய வைத்து
ஈயாத லோபியரும் எண்ணுத
கொடுந்துன்பம் எய்த வைத்துப்
பேயாக்கி எனைவாட்டிப் பெருமைபெறும்
நீயுமொரு பேய்தா னுமோ?''

பற்றழித்த துறவியரும் பெண்பார்வை
பட்டதெனில் பணிவா ரென்று
கற்றறிந்த ஆய்ந்தோர்கள் கூறுவதை
யானறிந்து களித்த துண்டு!
முற்றிலுமே பெண்பார்வை நீவிரும்ப
வில்லையெனில் மோக மூட்டும்
நற்றவத்தின் பேரழகைப் பெற்றதுமேன்
எனைவதைக்கும் நாட்டந் தானே?

பரிவற்ற நின்னுடைய அரிமாநோக்
கென்னுடைய பண்பை யெல்லாம்
அறிவற்ற தாக்குவித்த பெருங்கொடுமை
'அம்மம்ம' என்ன சொல்வேன்!
முறிவற்ற மெய்நட்பு அழிவற்ற
பெருவாழ்வின் மூல மன்றோ!
குறியின்றி அம்பெய்து பயனின்றிக்
கொன்றொழித்த கொடுவே டாசொல்!

ஏற்றமிகும் வேந்தனென உன்னழகுக்
கென்னகத்தை ஈந்து விட்டேன்;
மாற்றமுறும் வெறுங்கனவாய் மற்றவர்கள்
பரிகசித்தும் மறந்தே னில்லை.
போற்றுகின்றன மன்னர்பலர் ஏற்றிடவே
வந்தார்கள்; புறக்க ணித்தேன்,
ஆற்றல்மிகும் என்னரசே. அநியாயம்
செய்தென்னை அழித்தி டாதே!

பெற்றவரே என்றாலும் மற்றவர்க்கு
உரித்தான பெண்ணைப் பூட்டி
குற்றுயிராய் வதைத்திடவே கொண்டவரே
சகிப்பாரோ? கொடுமை தாங்கும்
கொற்றவரே! பிறர்எனையே இழிவுசெய்தால்
நின்பெருமை குன்றி டாதோ?
உற்றவராய் இருந்தாலும் துணைவியினைச்
சிறைப்படுத்த ஒப்ப லாமோ?

எண்ணற்ற இரவுபகல் நின்வருகை
எதிர்நோக்கி ஏங்கி ஏங்கிக்
கண்ணற்ற குருடர்விழிக் கழுவதுபோல்
உனைத்தேடிக் கண்ணீர் விட்டேன்!
அன்பற்ற அஃழகினிலே அளவற்ற
இச்சையுற்றால் அல்லல் வாழ்வைப்
பின்பற்ற நேருமென முன்புயான்
அறிந்தாலிப் பிழையே செய்யேன்!

கள்ளநட்புக் கொண்டவனாய் நள்ளிரவில்
வந்தவனைக் கலந்து பேசி
உள்ள நிலை அறியாமல் வெளியழகில்
மயங்கிவிட்ட ஒருகுற் றத்தால்
எள்ளளவும் இன்பத்தை எண்ணாத
தண்டனையா ஏற்க வேண்டும்?
கள்ளமெதும் அறியாத என்துயரம்
களைந்திடவே கருணை செய்வாய்!

உன்னுடைய அழகெனக்கு இல்லையென்ப
தொப்புகிறேன்; உலகு முற்றும்
என்னுடைய அழகுக்கு இணையான
இன்னொருத்தி இருக்க மாட்டாள்!
கண்ணுடைய பேரழகா! நின்னுடைய
ஆசையினால் கருகிப் போகும்
பெண்ணுடைய பெருந்துன்பம் பார்த்திரங்கிப்
பிரியமுடன் பேசு வாயே!

செங்கடலின் மத்தியிலோ கருங்கடலின்
முனையினி லோ,தீக் கொழுந்து

பொங்குகின்ற பாலையிலோ, பனிஉறையும்
பாறையிலோ, புலியும் சிங்கம்
தங்குகின்ற காட்டினிலோ, எங்கேநீ
ரிருக்கின்றீர்? சாற்று வீரேல்
அங்குடனே வந்திடுவேன், அதுநரகே
என்றாலும் அன்போ டேற்பேன்!

எப்படியான் கெஞ்சிடினும் யாதொன்றும்
கூறாமல் எட்டி நின்று
வெப்பமிகும் பார்வையினால் சுட்டெரிக்கும்
அண்ணலரே! வேண்டு கின்றேன்;
இப்பொழுதே தங்கள் திருப் பெயருடனே
இருப்பிடமும், இறைவ னாணைச்
செப்பிடுவீர்!'' எனக்கூறித் துடித்தெழுந்து
அவர்பாதம் சோர்ந்து வீழ்ந்தாள்!

அழகரின் பதில்:

''விண்ணமுதம் சுரக்கின்ற நீல நதிப்
பெருவளத்தால் விளங்கு கின்ற
என்பதியை முத்தமிடச் செங்கடலின்
பேரலைகள் இன்பம் கொள்ளும்
உன்னதமே பெறும்'மிசுரி'ல் இருக்கின்றேன்.
அப்பதியில் உயர்வு மிக்க
மன்னவரின் முதலமைச்சர் யானாவேன்!''
எனச்சொன் னார், மகிழ்ந் தெழுந்தாள்!

விழித்தெழுந்த இளவரசி நாற்புறமும்
நோக்கிஎதும் விளங்கா[து] நின்று
விழித்தெழுந்து அருங்கனவை அழித்துவிட்ட
தன்தவறை வெகுவாய் நொந்தாள்!
பழித்துரைத்த காதலனார் 'மிசுர்'பதியின்
அமைச்சரெனப் பாங்கி யர்க்கு
மொழிந்தவரை அடைந்திடவே தந்தையரை
அழைத்திட்டாள் வேக மாக!

தந்தையை வேண்டுதல்:

பாங்கியரும் தந்தையரும் பாய்ந்துவர
திருச்சுலேகா பார்த்து விட்டு
"நீங்கியது என்துயரம் அவருடைய
இருப்பிட மேநா னறிந்தேன்!
ஏங்கியது போதுமினி, இங்கிருக்க
இயலாது, அவரைப் பெற்று
ஓங்கியொளிர் மிசுருக்குப் புறப்படவே
முனைந்திடுவீர், உடனே" என்றாள்.

தம்முடைய திருமகளார் சாற்றுகின்ற
வார்த்தையினைத் தைமூஸ் கேட்டு
"செம்மையுடன் விளக்கிடுவாய் மிசுரிலவர்
இருப்பிடத்தைத் தெளிவாய்ச் செல்வாய்!
இம்மையினில் அவரெங்கே இருந்தாலும்
இங்கழைக்க என்னா லாகும்;
நம்முடைய நாடுவிட்டு நாம்செல்லல்
இழிவன்றோ, நவில்வாய்!" என்றார்.

"சீருயர்ந்த 'மிசுரி'னிலே முதலமைச்சர்
பதவியிலே சிறப்புப் பெற்றுப்
பேருயர்ந்த அரசேஎன் நேரினிலே
கனவினிலே பேசிச் சென்றார்!"
பாருயர்ந்த பேரழகர் அவரன்றி
வேறொருவர் பாரேன்; யாரும்,
கூறுமிதை மறுக்காமல் ஏற்றிடுவீர்!"
எனச்சுலே காகூற லானாள்.

மகளுரைத்த மொழிகேட்டுத் திகிலடைந்த
தைமூஸு மனமு டைந்து
புகழுடைய மிசுரினிலே முதலமைச்சர்
பதவியிலே பொறுப்புத் தாங்கித்
திகழுகின்ற அவர்வயதில் முதியவராம்!
அல்லா மல்திரு மணத்தே
மகிழுகின்ற எண்ணமவர்க் கிதுவரைக்கும்
கிடையாதாம் மகளே" என்றார்!

"இருமனமும் ஒப்பிவிடில் பெருவயது
என்செய்யும்? எந்தை யேநீர்
திருமணத்திற் கழைத்திடுவீர், மறுத்தாரேல்
யானழிதல் திண்ண மென்பீர்!
பெருமனமாய் அவருடைய அடிமையரில்
ஒருத்தியெனப் பெறவே சொல்வீர்!
ஒருகணமும் இழக்காது உடன்செல்வீர்!
இன்றேல் யான்ஒழிவேன்!" என்ருள்.

"உனதுவிதி இவ்விதமாய் இருந்தக்கால்
யான்செய்வ தொன்று மில்லை;
எனது மகிழ்வெல்லாமுன் இன்பமதே
அல்லாமல் ஏது மில்லை!
நினதுமனம் போலின்றே தூதனுப்பி
அவரிடத்தே நேரிற் சென்று
மனமறிந்து மணமுடிக்க அழைத்துவரச்
செய்கின்றேன் மகளே!" என்ருர்.

———

# மயக்கும் அழகு

## இயல்—31

பொருள்பெற்றிடப் பொருள்விற்றிடப்
புவிசுற்றிடும் வணிகர்,
இருளற்றிடும் அதிகாலையில்
இளஞ்சூரிய னொளியில்
பொருள்விற்றிட 'அனுபீஸ்'நகர்
புகுந்தேஒரு புறத்தில்,
பொருள்முற்றிலும் பரப்பிஅரும்
பொருள்விற்றிட முனைந்தார்!

விற்கின்றதில் திறம்பெற்றவர்
வருவோர்தமை யழைத்துக்
கற்கண்டெனும் சொற்கொண்டவர்
கனிவாய் விலைகூறி
நிற்கின்றன ரெனினும்பலர்,
நேராகவே மாலிக்
விற்கும்பொருள் தனைச்சூழ்ந்திட
வியந்தார் பிறவணிகர்!

வாங்கின்றதில் விற்கின்றதில்
வாய்க்கும் பொதுலாபம்
தாங்கட்கெலாம் உண்டென்பதைச்
சற்றும் நினைக்காமல்
ஏங்கிமனம் வீங்கிஅவ
ரெல்லோருமே, மாலிக்
தீங்கேதமக் கிழைத்தாரெனச்
சினம்பொங்கிட நின்றார்!

வருவோரெலாம் பொருளேதையும்
வாங்காமலே நிற்க,
ஒருமாயமும் அறியாமலே
உளம்நொந்திடும் மாலிக்

அருகேயுள முதியோர்முகம்
அன்பாகவே நோக்கிப்
"பொருளேதுமே வேண்டாமெனில்
போவீர்!" எனச் சொன்னான்.

ஆவல்மிகக் கொண்டே அவர்,
அங்கேபொருள் பரப்பி
ஏவல்செயும் இளவல்முகம்
இனிதாகவே கூர்ந்து
"பூவில்புகழ் மேவும்எழில்
பொருந்தியுள இவனும்
தேவியரின் செல்வமகன்
தானோ?" எனக் கேட்டார்.

மற்றொருவர் மாலிக்கிடம்
"மாசற்றிடும் அவரைப்
பெற்றவரும் நீரோ, இலை
பிறரோ?" எனக்கேட்க,
"விற்றிடவா வந்தீ"ரென
வேறொருவர் வினவ,
முற்றிலுமே வெறுத்தேமறு
மொழிகூறினார் மாலிக்.

"வேண்டும்பொருள் கேட்டிரிவன்
விற்கும்பொரு ளல்லன்;
மீண்டும்எதும் கேட்காமலே
வேறோரிடஞ் செல்வீர்,
தீண்டும்படிச் செய்யீர்!" எனச்
சீறிவிழுந் தப்பால்
தாண்டித்திரை மாட்டிக்கடை
சாத்தினனே மாலிக்!

நின்றோர்மனம் மிகநொந்திட
நெடுமூச்செறிந் தப்பாற்
சென்றார், பலர் புதிதாகவே
திரண்டேதுயர் கொண்டார்!
ஒன்றாயவர் மாலிக்கிடம்
"உங்கள்மகன் அழகை

நன்றுய்ப்பலர் பார்த்ததுபோல்
நாம்காணவும் செய்வீர்!''

என்றேங்கியே நின்ருேரிடம்,
"எழிலாகிய அவனை
நன்ருகவே காண்பதெனில்
நால்வர் இரு0திரஹம்
குன்ருமலே தந்தீரெனில்
குறைபோக்கிடக் கூடும்!''
என்ருர். "இதுநன்றே''என
இருப்போ ரிசைந்தனரே!


கூட்டம்கலைத் திடவேஅவர்
கூறியதற் கொப்பக்
கேட்டவுடன் மாலிக்மனம்
கிட்டாப் பெருஞ்செல்வம்
காட்டின்நடுக் கிணற்றில்இறை
காட்டியதாய் எண்ணி
நீட்டும்பணம் பெற்றுத்தடை
நீக்கிப்பலர் விட்டார்!

---

0 திரஹம்—அரபு நாட்டின் நாணயப் பெயர்.

தாங்கள் கிணற்றில் கண்டெடுத்த பேரழகரைக் காண்பதற்கே, மக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து காணிக்கை கொடுத்துக் கண்டு செல்வதை அறிந்த மாலிக்கும், அவரது சகாக்களும், இவரை விற்பனை செய்வதனால் பெருந் தொகை விலையாகக் கிடைக்கு மென்று நம்பினர். மனிதரை விலை கொடுத்து அடிமை கொள்வது அக்கால வழக்கம். இம்முறைப் படி இந்த அழகரை அதிக விலைக்கு விற்பதற்கேற்ற இடமாக எகிப்தின் சந்தையைத் தேர்ந்து அங்கு நோக்கிப் பிரயாணம் செய்தனர், மாலிக்கும் அவர் சகாக்களும்.

[இஃதிங்ஙனமிருக்க எகிப்து முதலமைச்சரைக் காணச் சுலைகாவின் தந்தை—மன்னர் தைமூஸ் அனுப்பிவைத்த தூதுவர்கள் திரும்பி வந்துவிட்டனர். தங்களின் கோரிக்கைக்கு அஜீஸ் கூறிய மறு மொழியை மன்னரிடம் கூறலாயினர்.]




## இயல்—32

"தன்னுடை நாட்டின் கடமையை விடுத்துத்
தான்வர இயன்றிடா தெனவே
மன்னவர் தைமூஸ் விரும்பிடில், பெண்ணை
மணமுடித் தனுப்பிடில் ஏற்பேன்!'
என்பதாய் மிசுரின் அமைச்சர் அஜீஸு
இயம்பிய யாவையும் தூதர்
சொன்னதும் தைமூஸ் சுலைகாவை அவர்க்குச்
சுபமணம் செய்திடத் துணிந்தார்!

மன்னரின் அறிவிப்பு:

"அருங்குணம் படைத்த மிசுரின் நல் லமைச்சர்
அஜீஸூம் என் திருமகள் சுலைகா
இருமனம் பொருந்தி ஒருமன மடைந்து
இல்லறம் நடத்திடத் துணிந்தார்!
திருமணம் புரிந்து சுலைகாவை அனுப்பத்
திரண்டிடு வீர்!" எனும் செய்தி
நறுமணம் எனவே எங்கணும் பரப்ப
நவின்றனர் மன்னர் தைமூஸே!

மக்களின் மகிழ்ச்சி:

எங்கிலும் சுலைகா திருமணச் செய்தி
எட்டிடக் குடிகளெல் லோரும்
தங்களின் சொந்தத் திருமண மெனவே
தனிப்பெரும் மகிழ்ச்சியே அடைந்து
மங்கலச் சங்கு முழக்கியே இறையின்
மலரடி வணங்கியே நின்று
"எங்களின் அரசி இல்லற வாழ்வில்
இன்பமே பொங்குக!" என்றார்.

புதுமணமும் புன்னகையும்:

வீடலங் கரித்து வீதிகள் துலக்கி
விதவிதத் தோரணம் அமைத்து
நாடலங் கரித்து அரண்மனை அடைந்த
நற்குடி மக்களின் முன்னே
தேடருஞ் செல்வம் சுலைகாவை அழைத்துத்
திருமணச் சடங்குகள் முடித்தார்!
ஆடவர் பெண்டிர் அனைவரும் வாழ்த்த
அரும்பினள் புன்னகை சுலைகா!

இன்பமும் துன்பமும்:

தன்மகள் புரிந்த அழகுப்புன் னகையில்
தன்னையே மறந்த தைமூஸு
"என்மகள் சுலைகா மூன்றுஆண் டாக
இழந்தநல் லின்பமே இன்று
கண்டுளம் மகிழ்வே கொண்டது எனினும்
கண்மணி பிரிந்திடும் துயரம்
வென்றிட இயல வில்லையே!" என்று
விம்மினர், விழிகளைத் துடைத்தார்!

தந்தையர் வருந்தத் தோழியர் வருந்தச்
சபையினர் யாவரும் வருந்தச்
சுந்தரச் சுலைகா பெருமகிழ் வுடனே
துயர்ப்படும் தந்தையைக் கூர்ந்து
"சிந்தையி லின்பம் சுரந்திடச் செய்துத்
தீமையாய் வருந்துதல் முறையோ?
எந்தையே மீண்டும் துன்புறுத் தாதீர்!"
என்றனள். அனைவரும் வியந்தார்.

புலவரின் போதனை:

அருங்கவி வாணர் அமைதியாய் எழுந்து
அவையினர், அரசரை நோக்கிப்
"பெருமையாய்ப் பெற்று வளர்த்தவர் தமையும்
பிறந்தவர், உறவினர் தமையும்,
அருமையாய்க் கூடி இருந்தவர் தமையும்,
ஆருயிர்த் தோழியர் தமையும்
பெருமையாய்ப் பெற்ற கணவனுக் காகப்
பிரிவதே பெண்மை!"யென் றுரைத்தார்.

"பிறந்திடும் கொடியி லிருந்திடும் மலர்கள்
பெருமையே பெற்றிடா துதிரும்.
பிறந்திடும் மனையி லிருந்திடும் பெண்ணும்
பிறவியின் பெருமையை இழப்பாள்.

பிறப்பிட மன்றிப் புகுமிடம் சிறப்புப்
பெற்றிடும் மலர்களே பெண்கள்;
மறந்திடல் வேண்டாம்!" என்றனர் கவிஞர்
மன்னரும் மனத்தெளி வடைந்தார்!

"இற்றைய நாளாய் என்னுயிர்க் குயிராய்
இருந்திடும் சுலைகாவை 'மிசுரி'ன்
கொற்றவர் விரும்பும் அமைச்ச ரஜீஸின்
குலவிளக் காக்கினம்!" என்று
சுற்றிலும் நோக்கிக் கூறிய தைமூஸ்
சுலைகாவி னருகினிற் சென்று
"முற்றிலும் எனது பொறுப்பிருந் துன்னை
விடுதலை செய்தனம்!" என்றார்.

"விரும்புவ தெதையும் வேண்டிடில் தருவேன்
விளம்புக!" என்றனர் தைமூஸ்!
"தருவதைத் தவிரப் பெறுவதற் கில்லை
தந்தையே!" என்றனள் சுலைகா!
"அரும்பொரு ளொன்றை அளித்திட வேண்டும்
ஆருயிர்ச் செல்வமே!" என்றார்.
"தருவதற் கியன்றால் தருகிறேன்!" என்றாள்.
"தந்திடு பேரனை!" என்றார்.

மன்னரின் வார்த்தை சுலைகாவின் முகத்தை
மாலையின் செந்நிற மாக்கப்
புன்னகை புரிந்து தலையினைக் கவிழ்த்துப்
புதுப்பொலி வடைந்தனள் சுலைகா!
தன்னுடை விருப்பை ஏற்றதற் கென்றே
தவமகள் சிரம்வணங் கியதாய்
எண்ணிய தைமூஸ் இதயமே மகிழ்ந்து
இன்னுயிர்ப் புதல்வியை அணைத்தார்.

இருந்தவ ரெல்லாம் வாழ்த்தொலி எழுப்ப
இன்னுயிர்த் தோழியர் சூழப்
பெருந்தவம் பலித்த பெருமிதத் தோடு
பெற்றவர் பாதமே பணிந்து,
"வருந்திடல் வேண்டாம்!" என்றனள் கண்ணீர்
வடிந்தது அவளறி யாமல்

பெருந்துயர் மறைத்து விழிகளைக் கசக்கிப்
"பெருமையாய் வாழ்கநீ" என்றார்.

பாவலர் இசைக்கச் சுலைகாவைத் தங்கப்
பல்லக்கி லேற்றிய தைமூஸ்
ஏவலர் சிலரும், தோழியர் பலரும்
எண்ணிலா இரத்தினப் பொதியும்
காவலர் சூழக் காணிக்கை யாக்கிக்
கவனமாய் 'மிசுரி'னைச் சேர்க்க
ஏவினர்! முரசு ஒலித்தது; சுலைகா
ஏற்றனள் காதல் யாத்திரையே!

---

# அஜீஸின் வரவேற்பு

## இயல்—33

தன்னுடை அமைச்சர், இல்லறத் துணைவி
தகைமிகும் தைமூஸின் புதல்வி
மின்னிடைச் சுலைகா வருகையைக் குறித்து
0மிசுரதி பதிரயான் மகிழ்ந்து
விண்ணிடை ஒளிரும் தாரகை எனவே
விளக்குகள் அரண்மனை ஏற்றித்
தன்னுடை நாட்டின் பொதுவிடு முறையாய்ச்
சாற்றினர், மக்களும் திரண்டார்!

நாட்டினுக் குழைக்கும் கடமையே பெரிதாய்
நற்பணி யாற்றிடும் அமைச்சர்
வீட்டினுக் கேகும் வீதியின் மருங்கில்
விருப்புடன் கூடிய மக்கள்,
பாட்டையின் முனையை நோக்கவே, தங்கப்
பல்லக்குக் கண்டனர். வீரர்
ஈட்டியை ஏந்தித் தங்களின் தோளில்
ஏற்றனர் பல்லக்கைப் பணிந்தே!

குதிரையில் வீரர் அணிவகுத் திடவே
குறுநகை தவழ்ந்திட அமைச்சர்
எதிரினிற் சென்று சுலைகாவைக் காண
ஏங்கினர்! தோழியர் அறிந்தார்.
மதிலெனப் பெண்கள் சிவிகையைச் சூழ்ந்து
"வாழ்கவே! அமைச்சர்!" என்றொலிக்க,
எதிரொலி "சுலைகா வாழ்கவே!" என்று
எழுந்தது மக்களின் நடுவில்.

---

0 மிசுரதிபதிரயான்: எகிப்தின் அரசர் பெயர்.
ரயான்—பின்—வலீத்.

தன்னுயிர் நாதன் இன்முகம் நோக்கத்
தவித்திடும் சுலைகா பல்லக்கின்
முன்திரை விரலால் விலக்கியே பார்க்க
முதுகுதான் தெரிந்தது; அதிர்ந்தாள்!
பின்திரை விலக்கிச் சேடிய ரழைத்துப்
பெருந்திகி லடைந்தவ ளாக,
"என்னுயிர்க் காதல் ஏற்றவர் இவரா?"
என்றனள். தோழியர் விழித்தார்!

குண்டுகள் முழங்கக் கருவிகள் இசைத்துக்
குழுமியோர் நறுமலர் தெளிக்கக்
கண்டவர் வியக்கும் வண்ணமாய் மகளிர்
களிநடம் புரிந்திடச் செல்வர்,
மண்டலம் வியக்கும் அரும்பொருள் பரிசாய்
வழங்கிடச் சுமந்துவந் திடவே
அண்டரும் வியக்க அமைச்சரின் இல்லம்
அடைந்தது மணமகள் பவனி!

மாசறும் சுலைகா மலரடி தனது
மாளிகை மிதிப்பதை அமைச்சர்
பேசரும் பேருய்க் கருதியே மகிழ்ந்து
பெருமையாய்ப் பல்லக்கை இல்ல
வாசலில் நிறுத்தித் திரையினை விலக்கி
"வருகவே!" என்றதும் சுலைகா
ஆசையாய் நோக்கி அருவருப் புடனே
'ஆ'என அலறியே சாய்ந்தாள்.

பாங்கியர் விரைந்து மணமகள் முகத்தில்
பன்னீரைத் தெளித்திட, அமைச்சர்
ஏங்கிட, அருகில் இருந்தவர் 'களைப்'பென
இயம்பிட, இவர்களி லொருவர்,
"தூங்கிடில் களைப்பு நீங்கிடு" மென்றார்.
தோழியர் சுலைகாவைக் கரத்தில்
தாங்கியே இல்லம் நுழைந்தனர். அமைச்சர்
தனிமையில் தவித்திட லானார்.

மயக்கமே தெளிந்த சுலைகாவின் விழிகள்
மருண்டன. நினைப்பதைச் சொல்லத்

தயக்கமே கொள்ளும் நாவினைக் கடித்துத்
தாதியைத் தழுவியே அழுதாள்!
வியக்கவே நிற்கும் தோழியை நோக்கி,
''விரும்பிய திவரிலை'' என்றே
இயக்கமே இழந்து சிலையெனச் சாய்ந்தாள்.
ஏங்கின பாங்கியர் இதயம்!

---

# இருளிலே ஒளி

## இயல்—34

கனவாகிய பசுஞ்சோலையில்
 காய்த்தகனிச் சுவையில்
மனமாகிய ஆசைப்பசி
 வளர்ந்தோங்கிய நிலையில்
பிணமாகிய சுலேகாவிடும்
 பெருமூச்சிடைத் தவழும்
கனலாகிய கொடுந்துன்பமே
 கண்டாலுயிர்த் தோழி.

அலைமோதிடும் நினைவாலெதும்
 அறியாமலே அமைச்சர்
மலைமோதிடும் படியேஅவர்
 மனம்மோதிடும் நிலையில்
தலைமோதிட நிலையோரமே
 தனியாய்இருந்தி டவே
கலைமோதிடும் கவிநெஞ்செனக்
 களைந்தாள் துயில் சுலேகா!

துடித்தேவுடன் எழுந்தாள், அருந்
 தோழியினைத் தாவிப்
பிடித்தேஅரு கிழுத்தாள், எதும்
 பேசாமலே நெஞ்சம்
வெடித்தேவிடு மெனவேமிக
 விம்மிடவே கண்ணீர்
வடித்தாள், மதுக் குடித்தோளென
 மயங்கித்தரை வீழ்ந்தாள்!

சாய்ந்தேவிழுந் தாளாயினும்
 சற்றேகிடந் தாளா?
பாய்ந்தேஎழுந் தாளே, மனம்
 பதறிஅழு தாளே!

"ஓய்ந்தேகிடந் தேனே,இங்கே
ஓடிவரச் செய்தே
மாய்ந்தேமறைந் தானே,எனை
மறந்தேபிரிந் தானே!

"மானம்இழந் தோனுயினும்
மனையாளினைப் பிறர்க்கே
தானம்புரி வானே,பெருந்
தர்மம்இது தானே?
ஈனம்அடைந் தேனே,அவ
மானம்எனக் காமோ?
நாணம்இழந் தானே,கொடை
ஞானம்பயி லானே?"

"எங்கேயடி என்நாயகன்
எங்கேயடி தோழீ!
இங்கேஇலை அங்கேஇலை
ஆவனெங்கிலும் இலையோ?
இங்கேஅவன் அமைச்சன்என
இயம்பியதும் பொய்யோ?
எங்கேயடி. சொல்லுங்கடி?"
என்றாள்சுலை காவே!

ஏங்கியழும் சுலைகாவினுக்
கேதும்உரைக் காமல்
பாங்கியரும் மனமேங்கிடப்
பார்த்தார்முத லமைச்சர்.
வீங்கியது நெஞ்சம்,அவர்
விரைந்தாரவள் மஞ்சம்–
"தூங்கிஎழத் துயர்நீங்கிடும்,
சுலைகா!"எனச் சொன்னார்.

நீங்காத்துயில் கொள்ளும்வழி
நீரேஅறி வீரோ?
தூங்காமனம் தூங்கும்முறை
சொல்லப்பயின் றீரோ?
தீங்காயெனை இங்கேவரச்
செய்தே,பெருஞ் சதியால்

தாங்காத்துயர் தந்தீர், இது
தகுமோ?''எனக் கேட்டாள்.

''துயரால்மனம் துடித்தேபழி
சொல்லும்சுலை காவே!
அயலார்துயர் சகியாளனை
அறியாதுரைக் கின்றாய்.
தயவாய்உனை மணம்செய்திடத்
தைமூஸ்அழைத் ததனால்
மயலாகிய உனைப்பெற்றிட
மனமொப்பினன்'' என்றார்.

''மனமேமிக நேசித்திடும்
மணவாளரின் வடிவில்
எனையேமயக் கிடப்பேயினை
ஏவியது முறையோ?
உனையேமணந் திடவேபெயர்
உரைத்ததுவும் சரியோ?
எனையேநெருங் காதீர்!''என
இசைத்தாள் சுலைகாவே!

அரும்பாமலர் கொய்யேன், எனை
அழைத்தால்வரு கின்றேன்.
விரும்பாவிடில் நெருங்கேன்எதும்
வேண்டில்தரு கின்றேன்.
கரும்பாகிய மொழிபேசியே
களிப்போடிருந் திடுவாய்!
ஒருபாபமும் அறியேன்!''என
உரைத்தார்முத ல்அமைச்சர்!

## விதியை வேண்டல்:

''முன்பேஒரு வரையேமனம்
முற்றும் வரித்திடவே
பின்பேபிறி தொருவர்கரம்
பிடிக்கும்படிக் கனவால்

பெண்பேதையை ஏமாற்றிடும்
பிழையாற்றிய விதியே!
கண்பார்த்திடு இனியாகிலும்
கற்பாயினுங் காப்பாய்!''

## இறையை வேண்டல்:

காதல்தரும் நாதன்பெறக்
கருணைமறுத் திடினும்,
சாதல்அளித் தனையோ? அதைத்
தரவும்மறுத் தனையே!
பாதம்பணி கின்றேன் எனைப்
படைத்தஇறை யோனே!
காதல்அழித் தனையாயினும்
கற்பாயினுங் காப்பாய்!''

என்றேஅழும் சுலைகாமன
இருள்போக்கிடும் ஒளியாய்
''ஒன்றேஉரைக் கின்றேன் மிக
உறுதியுடன் வாழ்வாய்!
என்றாகிலும் நின் நாயகன்
இங்கேவரல் திண்ணம்
குன்றாதுயர் கற்பே''எனக்
கூறியது நெஞ்சே!

———

# தூது அனுப்புதல்

## இயல்—35

உள்ளத்தின் அடித்த ளத்தே
ஊற்றெனச் சுரக்கும் இன்ப
வெள்ளத்தைக் கடந்து வாழ்வின்
வெற்றியைக் காண, ஐயப்
பள்ளத்தை விட்டு மீண்டு
நம்பிக்கை பற்றிச் செல்லச்
சொல்லிடும் நெஞ்சு ணர்வில்
துயர கற்றினள் சுஜேகா.

காதலர்க் குரிய கற்பைக்
காத்திடக் கூடு மென்ற
ஆதர வளிப்ப தற்கே
அமைச்சரும் அகன்ருர் போன்று
வேதனை மாற்றி வான
வெளியினை நோக்க, மங்குல்
சீதள மதியைச் சூழச்
சிரித்தது சுஜேகா எண்ணம்!

மேகத்தை வேண்டுதல்:

"ஒளிமிகும் மதிமு கத்தை
உரிமையாய்த் தழுவி உள்ளம்
களிப்புறக் காதல் செய்யக்
கருதிடும் முகிலே, வான
வெளியினில் உலவும் நீயென்
மீதினில் இரங்கி எங்கோ
ஒளிந்துள காத லர்க்கென்
உளத்துடிப் புரைத்தி டாயோ?"

திங்களைச் சாடுதல்:

"முகிலையே முத்த மிட்டு
முறுவல்செய் மதியே! இந்த
அகிலமே காண வல்ல
அழகொளி பெற்ற நீயென்
மகிபரைக் கண்ட துண்டோ?
வாழ்ந்திடும் இடமும் எங்கோ?
தகித்திடும் ஆசைத் தீயைத்
தணித்திடச் சொல்லு வாயே!"

"வேட்கையின் வெப்பம் தீர்க்க
வேண்டினுல் ஆசைத் தீயை
மூட்டிவிட் டெனது நெஞ்சை
முன்னின்று கொதிக்கச் செய்து
வாட்டிடும் மதிய மேஎன்
வேதனை வளர்க்க வேண்டாம்.
நாட்டினில் காட்டில் என்றன்
நாதனைப் பார்த்த துண்டோ?"

"பெண்களின் ஒளிமு கத்தின்
பெருமையைக் கூற நாடும்
கண்களின் உவமை யாகும்
கலைமதி நீயே, என்றன்
புண்களைக் கிளற வேண்டாம்;
பொறுமையும் அழிக்க வேண்டாம்.
உன்னெழில் அழிந்து தேய்ந்து
ஒழிந்திடும், என்போ லாவாய்!"

"என்னுயிர்க் காத லர்க்கு
யான்படும் துன்பம் சொல்ல
உன்மனம் ஒப்பா தென்ன
உனக்கெதும் பிழைசெய் தேனே
பெண்மனம் சுட்டெ ரிக்கும்
பெருந்தழற் பிம்ப மான
கன்மனத் திங்க ளேநீ!
கடிதினில் மறைந்து போவாய்!"

துயர்படும் சுலேகா வீசும்
சுடுமொழி தாங்காத் திங்கள்
பயத்துடன் கங்கு லுள்ளே
பதுங்கிடக் கண்டு, வெற்றி
நயத்துடன் சோலை நோக்கி
நடந்தனள், அங்கே புட்கள்
வியப்புடன் கீச்சிட் டேதோ
விளம்பிடக் கேட்க லானாள்.

புட்களுடன் பேசுதல்:

"உரிமையாய்ப் பெடையைக் கூடி
உள்ளமே மகிழும் புட்காள்!
அருமையாய் வரித்த நாதன்
அடைந்திடா துருகும் என்னைச்
சிறுமையாய் மதித்து எண்ணிச்
சிரிப்பது கொடுமை யன்றோ?
பெருமையாய்க் குலவும் நீங்கள்
பிரிவினால் துடித்த துண்டோ?

"விண்ணிடைப் பறக்கும் போதும்,
விரிகிளை தாவும் போதும்
குன்றிடை அமரும் போதும்,
குளித்துடல் உலர்த்தும் போதும்
உண்கையில், உறங்கும் போதும்
உடலுயிர் போன்று உள்ளம்
ஒன்றிடும் புட்காள்! என்றன்
ஊழ்வினைக் கிரங்கி டீரோ?"

"கானகம் சென்றி ருப்பீர்;
கடல்மலை கண்டி ருப்பீர்;
வானகம் முழுதும் சுற்றி
வையகம் அளந்தி ருப்பீர்;
யானகம் நொந்து தேடும்
ஏந்தலைக் கண்ட துண்டோ?

தேனமு துண்ணும் புட்காள்
    தெரிந்ததைச் சொல்லு வீரே!"

கெஞ்சுடும் சுலேகா துன்பம்
    கேட்டதும் பெடையைக் கூடிக்
கொஞ்சிடும் புட்கள் உள்ளம்
    குமுறிடப் 'பெண்மை அன்பில்
நஞ்சிடும் ஆண்மை' குற்றம்
    நவின்றது பெடையே ஒன்று.
"துஞ்சிடும் புட்காள்! என்றன்
    துணைவருக் குரைப்பீர்!" என்றாள்.

ஏங்கிடும் சுலேகா வார்த்தை
    ஏற்றது போன்று புட்கள்
மாங்கிளை 'சலச ல'க்க
    வான்வெளி பறந்து செல்ல
வீங்கிடும் விழியி லின்பம்
    விளைந்திடச் சுலேகா நோக்கப்
பூங்கொடி மகிழ்ந்து ஆடப்
    புகுந்தது கூதிர்க் காற்றே!

காற்றை ஏவுதல்:

தன்னுடை விலக்கி மெல்லத்
    தழுவிட முயலும் காற்றை
மின்னிடை சுலேகா தள்ளி
    மேலுடை சரிப்ப டுத்திக்
கண்ணிடைத் தோன்று வண்ணம்
    கருத்தினில் நுழையும் காற்றே!
என்னுயிர்க் காதல் வேந்தன்
    எழில்கரம் நீயோ, சொல்வாய்!

எங்கவ ருள்ளா ரென்றே
    இயம்புவாய்; இல்லை என்றால்

அங்கெனை அழைத்துச் செல்ல
அன்புடன் இசைவாய்! மேலும்
இங்கெனை இருக்க வைத்தால்
என்னுயிர் இருக்கா தென்றே
அங்கவ ரறியச் செய்வாய்
அரணையும் கடக்கும் காற்றே!

புவனமே எங்கும் சென்று
புகழ்பெறும் காற்றே! என்றன்
கவனமே கவர்ந்து காதல்
கனவிலே மயக்கி விட்ட
அவரையே இதுவ ரைக்கும்
அகிலமே காண்கி லையோ?
இவரையே முன்னர் கண்டு
இன்றுநீ மறந்த னையோ?

சிலர்முக மேனும் என்றன்
செம்மலின் வதனம் போன்று
உலகிடைக் கண்ட துண்டோ?
ஒளிமுகம் ஒன்று தானே!
பலர்முகம் பார்த்த தாலென்
பதிமுகம் மறக்கப் போமோ?
மலர்முகம் தழுவிச் சென்று
மணம்பெறும் காற்றே சொல்வாய்!

எங்கிலும் அவரை நீயே
இதுவரை காணு விட்டால்
இங்கிருந் துடனே சென்று
ஏந்தலைத் தேடி, நெஞ்சில்
பொங்கிடும் துயரைச் சொல்லிப்
புலருமுன் வரவே செய்வாய்!
இங்கவர் வரம றுத்தால்
இருப்பிடம் எனக்குச் சொல்வாய்!

காட்டையும் கடலை யும்நீ
கடந்திடும் ஆற்றல் பெற்றாய்;
பூட்டிய சிறையி னுள்ளும்
புகுந்திடும் திறமை பெற்றாய்

வாட்டிடும் அன்பு வேட்கை
வளர்த்திடும் காற்றே! காதல்
ஊட்டிய அவரை மீண்டும்
ஒருமுறை காணச் செய்வாய்!''

விண்ணிடைப் பறந்து பாராய்
விரிகடல் மூழ்கிப் பாராய்,
மண்ணிடை எங்கும் பாராய்
மன்னவன் தன்னைத் தேடி;
என்மனத் துன்பம் கூறி
இங்கவர் வரவே செய்வாய்,
உன்துணை யின்றி மற்றோர்
உரைப்பதை உணர்வார் யாரே?''

இறைஞ்சிடும் சுலேகா ஆணை
ஏற்றது போன்று காற்று
பறந்தது நான்கு திக்கும்
பரிதியும் உதிக்க லானான்.
பிறந்தன நாட்கள். வாரம்
புகுந்தது திங்கள் தோன்ற
விரைந்தது காலம், துன்பம்
வளர்ந்தது சுலேகா நெஞ்சில்.

---

# அடிமைச் சந்தையில்



## இயல்—36

பெண்மைக்கு விலைவைப்போர், பெருமைக்குப்
பொருளீவோர், பேறாய்க் கிட்டும்
அன்புக்கு விலைகேட்போர், அறிவுக்கு
விலைவைப்போர், அடைதற் கொண்ணாப்
பண்புக்கு விலைசொல்வோர் மிகுந்துள்ள
உலகத்தில் பணமே ஈந்து
தொண்டுக்கு அடிமைபெறும் மிசுரின்பெருஞ்
சந்தையிலே சூழ்ந்தார் பல்லோர்!

பெற்றெடுத்த மதலையரை வளர்ப்பதற்குக்
கிழத்தாதி பெறவந் தோரும்
கற்பழியாக் கன்னியரை அடிமைபெற
வந்தவரும், காட்டும் வேலை
அற்புதமாய்ச் செய்சிறுவர் அடைவதற்கு
வந்தவரும், அரைநொ டிக்குள்
நற்பதமாய் நல்லுணவு சமைப்பவரை
வாங்கிடவும் நின்றார் பல்லோர்!

வறுமையினால் தம்மகளை விலைகூறும்
தந்தையரும், வாழ்வி ழந்த
சிறுமையினால் தனைத்தானே விற்கின்ற
விதவையரும், செல்வ மைந்தர்
பெருமைபெறும் கல்விபெறத் தனைவிற்குந்
தாய்மாரும், பெற்றோர் துன்ப

வறுமையினைத் துடைத்திடவே அடிமைப்பட
வந்தவரும் வணங்கி நின்றார்.

தலைகுனிந்து நிற்கின்ற அடிமையரை
விலைபேசும் தரக ரின்பால்
விலையறிந்து அடிமையரின் தரமறிந்து
பேரஞ்செய் வித்தார் செல்வர்.
நிலையறிந்து மாலிக்கு தம்மடிமை
விற்றிடவே நினைவு கொண்டு
"கலையறிந்த அழகனைத்தும் பெற்றவனை
எல்லோரும் காண்பீ" ரென்றான்.

வந்தவரில் பெரும்பாலோர் வியப்புற்று
மாலிக்கின் வார்த்தை கேட்டுச்
"சுந்தரனைக் காட்டிடுவீர் விலையென்ன
வென்பதையும் சொல்வீர்!" என்றார்.
"சந்திரனுக் குரியவிலை சாற்றுதற்கு
இயன்றிடுமோ? தகைமிக் கோரே!
எந்தவிலை மதிக்கின்றீ ரென்பதைநீர்
இயம்பிடுவீர்!" என்றான் மாலிக்.

"சந்திரனைக் காணமல் விலைவைக்க
இயன்றிடுமோ? சற்றே கண்டால்
சுந்தரனுக் கேற்றவிலை கூறிடுவோம்!"
என்றொருவர் சொல்ல, மற்றோர்
"தந்திரமாய் விற்பதற்கு முயல்கின்றான்!"
எனக்குற்றம் சாட்ட, மாலிக்,
"மந்திரமாய் நினைக்காதீர், மயங்காதீர்
மாயமென மலைத்தி டாதீர்!"

"எம்மடிமை இவனழகைக் காண்பதற்கும்
காணிக்கை ஈந்தார் பல்லோர்!
தம்மடிமை யாக்குதற்கு எண்ணற்ற
செல்வர்கள் தயவாய்க் கேட்டார்!
எம்மடிமைக் கேற்றவிலை தருபவர்கள்
மிசுரிலிருக் கின்றார் என்றோம்.
உம்மடிமை யாக்கிடுவோம் உயர்ந்தவிலை
கேட்டிடுவீர் உடனே" என்றான்.

"பொருளுக்குத் தக்கவிலை தருகின்றோம்!"
என்றொருவர் பொதுவாய்ச் சொல்ல,
"இருக்கின்ற பொன்னெல்லாம் எழில்மிக்கோன்
என்றக்கால் ஈவேன்!" என்று
'நறுக்'கென்று அருகிருந்த சீமாட்டி
நவின்றிட்டாள். நன்றி கூறி
'விறுக்'கென்று திரையினையே மாலிக்கு
விலக்கிடவே வியந்து நின்றார்!

"வாருங்கள்! அருகினிலே வந்தழகன்
திருமுகத்தின் வனப்பு முற்றும்
பாருங்கள். பார்த்தவர்கள் நகருங்கள்;
மற்றவரும் பார்க்க வேண்டும்!
கூறுங்கள் தக்கவிலை! விலைமிக்கப்
பொருளேனும் கொண்டு வந்து
தாருங்கள்!" எனமாலிக் சாற்றிடவே
மனமுடைந்தார் செல்வ மற்றோர்!

கண்டவரில் பெருஞ்செல்வர் மெய்சிலிர்க்க
வாயடைத்துக் கண்கள் பூத்து
நின்றனரே யல்லாமல் சொன்னபடி
விலைகேளா நிலையி லானார்!
"நன்றலவே பேச்சிழந்து நிற்பதுவே
எனமாலிக் நடுவில் கேட்க
நின்றிருந்தோர் நினைவடைந்து இளைஞரது
அருகினிலே நெருங்கி வந்தார்!

"பொன்பத்து ஆயிரமே தருகின்றேன்!"
என்றொருவர் புகலக் கேட்டு
"வெண்முத்து இருமரக்கால் தருகின்றேன்"
எனமற்றோர் விளம்ப லானார்.
"கண்பொத்தித் திறந்திடுமுன் இவையிரண்டும்
சேர்த்தளிப்பேன் கைமேல்!" என்று
பொன்பத்து ஆயிரமும் வெண்முத்துப்
பையிரண்டும் ஒருவர் போட்டார்!

வாங்குபவர் போட்டியினால் விற்பவரின்
பைநிறைக்கும் வாய்ப்பைத் தூண்டி

ஓங்குகின்ற பெருவணிகர் குலத்தலைவன்
மாலிக்கு, உரத்து மீண்டும்
"வாங்குபவர் மேலும்விலை கேளுங்கள்!"
என்றிடவே வழிவி லக்கி
ஆங்குவந்த ஒருகனவான் "அவனெடைக்கு
எடை,புனுகு அளிப்பேன்!" என்றார்.

தலைநிமிர்ந்து இன்னொருவர் "இவனெடைக்குப்
பசுந்தங்கம் தருவேன்!" என்று
விலையுயர்த்திக் கேட்டிடவே மற்றவர்கள்
வியந்திடவே மீண்டும் மாலிக்,
"கலையுணர்ந்த அழகன்தனை அடிமைபெறும்
பாக்கியத்தைக் கருத்தில் கொண்டு
நிலையுணர்ந்து மேலும்விலை கேட்டிடுவீர்!"
எனமுழக்கி நிற்க லானான்!

பாய்ந்துவரும் புரவியினில் முதலமைச்சர்
அஜீஸுவரப் பார்த்து, மற்றோர்
சாய்ந்தொதுங்கி இடமளிக்கச் சிரம்வணங்கி
மாலிக்கு 'சலாமே' கூற,
ஆய்ந்துணர்ந்த நல்லமைச்சர் இளவல்திரு
முகம்நோக்கி, 'அழகு யாவும்
தோய்ந்தொளிரும் இவனை'யுடன் தனதில்லம்
கொண்டுவரச் சொல்ல லானார்.

பெரியவிலை கிடைக்குமெனும் பேராசை
மாலிக்கின் பிடரி பற்றித்
துரிதமுடன் தள்ளிடவே அமைச்சருடன்
மற்றவரும் தொடர்ந்து செல்ல
அரியவிலை தருவதற்கு ஒப்பியவர்
வருத்தமுற அமைச்ச ரில்லப்
பெரியமதில் கடந்திடவே சுலைகாவின்
தாதியர்கள் பிரமிப் புற்றார்!

**சுலைகா காணுதல்:**

'எழில்நிறையும் பேரழகன் அடிமைப்பட
வந்துள்ளாள்!' என்ற செய்தி

வழிமுழுதும் மொழிந்தபடித் தாதியர்கள்
சுலேகாமுன் வந்து நிற்க
விழிபொழியும் கண்ணீரைத் துடைத்தபடி
உடனெழுந்து விரைந்து சென்று
எழிலரசி சுலேகாதன் கடைவிழியால்
இளவல்முகம் இனிது கண்டாள்!

கண்டவுடன் மனம்துடிக்கக் கனவுமுகம்
புன்னகைக்கக் கதறி வீழ்ந்து
தண்டமிடக் கைதுடிக்கத் துயறுரைக்க
நாதுடிக்கத் தன்னைச் சூழ்ந்து
நின்றவரை நோக்கமிட்டு விழிதுடிக்கும்
சுலேகாவை நிமிர்ந்து நோக்கி,
''நன்றிவரை வாங்கிடுவோம்!'' என்றமைச்சர்
நவின்றபடி விலையைக் கேட்டார்!

மாலிக் கூறுதல்:

''தகைமிகுந்த பேரமைச்சே இவனெடைக்குப்
பலர்தங்கம் தருவோ மென்றார்.
தொகைமிகுந்த தென்றாலும் தாங்களேனை
அழைத்ததனல் துடித்து வந்தேன்.
நகைசொரியும் இவனுக்கெவர் அதிகவிலை
நல்குவரோ அவருக் கீவேன்.
தொகைமதிப்பைப் பொறுத்ததிது! எனமாலிக்
துணிவாகச் சொல்ல லானன்.

முன்புரைத்த விலைகளிலே அதிகம்தர
வேண்டுமென மொழிதல் கேட்டுப்
பின்புரைத்த பெருவிலைக்கு இருமடங்கு
யான்தருவேன் பெரியீர்!'' என்றார்.
''நன்றுஇது போது''மென நவின்றிட்ட
மாலிக்கை நன்றி பொங்க
''நின்றிருப்பீர் சிறுநேரம்'' எனக் கூறித்
தங்கத்தை நிறுக்க லானர்.

வந்திருந்த அனைவருடன் ஆங்கிருந்த
மற்றவரும் வியந்து நிற்கச்
சுந்தரனை ஒருதட்டில் வைத்துப்பொன்
மறுதட்டில் சுலைகா கொட்டச்
சிந்தையினுள் மகிழ்வுற்ற மாலிக்கு
கேட்டபடித் தங்கம் பெற்று
வந்தவழி சகாக்களுடன் சென்றிடவே
மன்னரவை அமைச்சர் சென்றார்!

தன்னருகில் நிற்கின்ற எழிலனுடன்
பேசிடவே சுலைகா உள்ளம்
எண்ணுவதை ஏற்றாலும், நாணமவள்
செவ்விதழை இறுக்கிப் பொத்தப்
பன்னெடுநாள் தம்கனவு பலித்திட்ட
பெருமகிழ்வால் பலமே பெற்றுப்
புன்னகைத்து "உம்முடைய ஊரென்ன,
பெயரென்ன புகல்வீர்!" என்றாள்.

"கன்னானில் பிறந்தயெனை விலைகொடுத்து
வாங்கிவிட்ட காரணத்தால்
இந்நாளி லிருந்தென்றன் பெயரடிமை
ஆகு"மென இளவல் கூற
"முன்னாளில் பெற்றவர்கள் உமக்களித்த
பெயரென்ன மொழிவீர்!" என்றாள்.
"அந்நாளில் தாய்தந்தை யூசுபெனப்
பெயரிட்டு அழைத்தார்!" என்றார்.

பெற்றளித்த கன்னானைப் பெயரளித்த
பெற்றோரைப் பெரிதும் போற்றிப்
பற்றுயர்ந்த உணர்ச்சியினால் 'யூசுப்'எனப்
பன்முறைகள் தனக்குள் கூறிச்
சுற்றிநின்ற தோழியரை யூசுபுக்கு
வேண்டும்பணி செய்யச் சொல்லி
நற்றவத்தின் பெரும்பயனைத் தனக்களித்த
நல்லிறையைத் துதிக்க லானாள்!

---

# துன்பமும் இன்பமும்

## இயல்—37

உண்ணுதற்கு உணவேதும் கிட்டாப் போதில்
உடல்வருத்தும் பசிநோயைத் தாங்கி நிற்போர்
கண்ணெதிரில் புல்லுணவே வந்த போதும்
கடும்பசியைக் களைந்திடவே துடித்தல் போன்று,
தன்னருமைக் காதலரைக் காணு மட்டும்
தலைதூக்கும் உள்ளுணர்வைச் சகித்துக் காத்த
பெண்ணரசி சுலைகாதன் பசியைப் போக்கப்
பின்னிரவில் யூசுபையே நெருங்க லானாள்!

கண்ணுறங்கும் யூசுபுதன் எழில்மு கத்தில்
கலையுறங்கக் கவினுறங்கச் சுலைகா கண்டு
"மண்ணுறங்கும் விண்ணுறங்கும் போதில் என்றன்
மனமுறங்கச் செய்யாது விழிக்க வைத்துக்
கண்ணுறங்கும் என்னரசே!" என்ற ழைக்கக்
கருத்தெழுந்தும் நாவழுந்தக் கலங்கி மற்றப்
பெண்ணுறங்கும் கூடத்தை எட்டிப் பார்த்துப்
பேரழகர் காலடியில் பெருமூச் சிட்டாள்!

தனமளித்துத் தன்னடிமை யாக்கு வித்தும்
தனக்குதவி புரியாது துயிலில் மூழ்கும்
கனவளித்த காதலரை எழுப்பி விட்டுக்
காத்திருந்த தன்நெஞ்சைத் திறந்து காட்டி
உணவளித்து உயிர்காக்கப் பிச்சை கோரும்
உணர்வெழுந்தும் செயலிழந்து கைந டுங்க
மனந்துடித்து எழிலரசி சுலைகா நிற்க
மறைவிருந்து ஒருதோழி அனைத்தும் கண்டாள்!

எலிபிடிக்கப் பதுங்குகின்ற பூனை போன்று
இருளிடுக்கில் பதுங்கிநின்ற தோழி நெஞ்சில்

கிலிபிடிக்க, இளவரசி கரம்பி டித்துக்
கீர்த்திமிகும் பெண்ணுடைமை யாகும் கற்பைப்
பலிகொடுக்கத் துணிந்தசெயல் தடுத்து நிற்க,
பயமடைந்த சுலைகாவின் இளமை நெஞ்சில்
வலியெடுக்கத் தோழியவள் தோளில் சாய்ந்தாள்;
வாஞ்சையுடன் விலாவணைத்து மஞ்சம் சேர்த்தாள்!

"அடிமையவன் அழகினிலே மனமே வைத்து
அரசகுலப் பெருமைக்கே அழிவு தேடல்
மடமையிலும் மடமை"யெனத் தோழி கூற
மனம்கொதித்துச் சுலைகா தன் விழிசி வக்க
"அடிமையெனக் கருதினையோ கனவில் தோன்றி
அடிமைகொண்ட என்னரசர் இவரே யாவார்;
உடைமையினுக் குரியவரை அடிமை யென்றால்
உன்நாவை நறுக்கிடுவேன், போடீ!" என்றாள்.

என்றைக்கு மில்லாத கொடுஞ்சொல் கொண்டு
இளவரசி தனைத்தாக்கி விட்ட போதும்
அன்றைக்கு அவள்கனவில் தோன்றி நெஞ்சை
அபகரித்தோர் இவரென்ற செய்தி கேட்டு,
"இன்றைக்கு இதனாலென் இதயம் காணும்
இன்பத்தை இதற்குமுன்னே எதிலும் காணேன்!"
என்றஉயிர்த் தோழியினைச் சுலைகா நோக்கி
"இங்கவரை உடனெழுப்பி வருவாய்!" என்றாள்.

கண்ணியிலே சிக்கிவிட்ட பறவை, வேடன்
கையிருந்து தப்பிடுமோ? இங்கு நம்மை
அன்றியவர் எங்கேனும் செல்லப் போமோ,
அவசரமேன் இளவரசி?" என்றாள் தோழி.
"உண்மையிலே தாமதித்தால் பறந்து போகும்;
உருக்காமல் வெண்ணெய்நறு நெய்யா காதே.
அண்மையிலே அவரைவரச் செய்வாய்!" என்றாள்.
"அப்படியே ஆகட்டும்!" என்றாள் தோழி!

அவிழ்ந்தகுழல் மலரடியில் தவழ விட்டு
அழகுதரும் நல்லணிகள் பலவும் பூண்டு
குவிந்தமலர் சிரிப்பதுபோல் முகம்ம லர்ந்து
கொள்ளைகொண்ட காதலரைக் காண நின்றாள்.

கவிழ்ந்ததலை நிமிராமல் தன்முன் வந்த
கட்டழகர் யூசுபையே கனிவாய் நோக்கச்
சிவந்ததவள் கன்னங்கள், சிலிர்த்த துள்ளம்
சிலையானாள் முகம்வியர்க்கப் பேச்சி ழந்தாள்.

"எதற்கென்னை அழைத்தீர்கள்?" என்றார் யூசுப்
"இங்கழைக்கக் கூடாதா?" என்று கேட்டாள்.
"அதற்கல்ல; வேலையேதும் உண்டோ?" என்றார்.
"அல்லாமல் வீணுக்கா அழைப்பேன்?" என்றாள்.
"எதற்கென்னை அழைத்தீரோ, சொல்வீர்!" என்றார்.
"இன்றைக்குத் தூக்கம் வரவில்லை!" என்றாள்.
இதற்கென்ன யான்செய்யக் கூடும்?" என்றார்.
"ஏதேனும் கதைசொல்வீர்!" என்று சொன்னாள்.

"கதைசொல்லக் கற்றதில்லை!" என்றார் யூசுப்.
"கனவிலெதும் காண்கிலையோ?" என்று கேட்டாள்.
"அதைச்சொல்லக் கூடாதென் றெனது தந்தை
அப்பொழுதே கூறியுள்ளார்" என்றார் யூசுப்.
"எதைச்சொல்ல மறுத்தீரோ அதைஎன் னாலே
இயம்புதற்கு ஆகு"மெனச் சுலைகா சொன்னாள்.
இதைச்சற்றும் எதிர்பாரா யூசுப், மெல்ல
ஏறிட்டுச் சுலைகாவை நோக்க லானார்!

"நள்ளிரவில் பெண்ணொருத்தி இல்லம் சென்று
நல்லழகைக் காட்டியவள் உள்ளம் தொட்டுக்
கொள்ளையிட்டுக் கள்வனைப்போல் மறைந்த உங்கள்
கொடுங்கனவை யானறிவேன்!"எனச்சு லைகா
கள்ளமின்றிக் கூறிடவே "பொய்,பொய்" என்று,
கபடமற்ற யூசுபுடன் மறுத்துக் கூற
"எள்ளளவும் சந்தேக மில்லை; அன்று
என்கனவில் தோன்றியவர் நீர்தான்" என்றாள்.

"விலைகொடுத்து வாங்கிவிட்ட அடிமை மீது
வீண்குற்றம் சுமத்துவது பாவ மாகும்;
தலைஇழப்ப தென்றாலும் தவறு செய்யச்
சற்றேனும் சம்மதியேன்!" என்றார் யூசுப்.
மலைசரிந்து தன்நெஞ்சில் வீழ்ந்த தேபோல்
மனங்குலைந்த எழிலரசி மயக்க முற்று

நிலைதவறி அரைநொடியில் சாய்ந்து வீழ
நின்றிருந்த யூசுபுஅதிர்ந்து போனார்!

சாய்ந்தவளைக் கைகொடுத்துத் தாங்கு தற்கும்
சற்றேனும் முனையாது நின்ற யூசுப்
பாய்ந்தகன்று பாங்கியரை அழைக்க லானார்.
பதுங்கிநின்ற உயிர்த்தோழி ஏவல் கேட்கச்
சாய்ந்துவிட்ட சுலைகாவின் நிலையைக் கூறிச்
சட்டென்று அப்பாலே நடந்தார் யூசுப்.
காய்ந்தெழுந்த வார்த்தைகளை அடக்கித் தோழி
கடிதினிலே சுலைகாவின் பக்கம் வந்தாள்.

பன்னீரைச் சுலைகாவின் முகம்தெளித்துப்
படுக்கையினில் ஒழுங்குடனே கிடத்தி விட்டுத்
தண்ணீரை வற்புறுத்தி அருந்தச் செய்து
தலைகவிழ்ந்து மனம்பதறித் தோழி நிற்கக்
கண்ணீரில் மிதந்திடவே விழிபி துக்கிக்
காதலனைக் காணுமல் துடித்தெழுந்து
"என்னுசை நாயகனார் எங்கே?" என்று
எதிர்நின்ற தோழியினைச் சுலைகா கேட்டாள்.

"அதிவிரைவில் வந்திடுவார்!" என்றாள் தோழி.
"அழைத்துடனேவா!"வென்று சுலைகா சொன்னாள்.
"இதுசமயம் துயில்புரியக் கூடும்!" என்றாள்.
இதைக்கேட்ட இளவரசி அமைதி பெற்று
"மதியழகர் தூக்கத்தைக் கலைக்க வேண்டாம்.
மற்றவர்கள் அறியாமல் நாமே சென்று
பதிமுகத்தை ஒருமுறையான் காண வேண்டும்,
பக்கத்தில் என்துணைக்கு வருவாய்!" என்றாள்.

"அங்கேநாம் செல்லுவதை அடுத்தோர் கண்டால்
அதுமிக்க இழிவாகும், நாளை தோறும்
இங்கேயே அவர்தூங்கச் செய்வோ" மென்று
இயம்புகின்ற தோழியினைச் சுலைகா நோக்கி,
"அங்கேநாம் செல்லுவதால் தீங்கே இல்லை
அடுத்தவர்கள் கண்டாலும் அச்ச மில்லை.
எங்கேனும் ஏவலர்க்கு அஞ்சு கின்ற
இளவரசி உண்டாமோ?" என்று சொன்னாள்!

விரைந்தெழுந்த சுலைகாவின் கரங்கள் பற்றி
"விரும்பாத அவரிடம்நாம் செல்ல வேண்டாம்,
மறைந்திருந்து யாரேனும் கண்டா ரானல்
மானம்போம், அதனேடு வாழ்வும் போகும்!
சிறந்தகுண யூசுபுவும் வெறுக்கக் கூடும்.
சிலநாட்கள் பொறுத்திருப்பீர்!" என்ருள் தோழி.
"இறந்தொழியும் வரையினிலும் அவருக்காக
எத்துயரும் தாங்கு"வதாய்ச் சுலைகா சொன்னுள்.

[தோழி சில நாட்கள் பொறுத்திருக்கக் கூறினாள். சுலைகா பல நாட்கள் காத்திருந்தும் தன் எண்ணம் பலிக்காதது கண்டு தானே முயலுவதற்குத் தீர்மானித்தாள்.]

# பழி சுமத்தல்

## இயல்—38

நித்தியம் கண்ணீர் வடித்தகம் துடித்து
நிலைகுலைந் துருகிடும் தன்பால்
உத்தமத் தோழி வருவதைப் பார்த்து
'ஓ'வெனக் கதறிய சுலைகா
"எத்தனை நாட்கள், எத்தனை வாரம்
இப்படிக் கலங்குவ" தென்றாள்.
"அத்தனை துயரும் இன்பமாய் மாறும்
அரசியே!" என்றனள் தோழி.

"ஜோசியம் போதும், தோழியே அவரென்
துன்பமே துடைத்திட ஏதும்
பேசிய துண்டோ? பெருந்தகை அவரைப்
பிரியமாய் இணங்கவைத் தாயோ?
ஆசையின் கடலில் அமிழ்ந்திடு வேனோ?
அன்பெனும் கரையடை வேனோ?
பாசமும் பொய்யோ, கூறடி!" என்று
பதறியே கேட்டனள் சுலைகா.

பதறிடும் சுலைகா துயர்முகம் நோக்கிப்
பாங்கியின் நெஞ்சமே துடிக்க

“உதறிடும் அவரை உவந்திடச் செய்ய
ஒவ்வொரு வழியதாய் முயன்றும்
சிதறிய தல்லால் பலித்திட வில்லை;
திரும்பவும் முயல்கிறேன்” என்றாள்!
கதறிய சுலைகா போதுமுன் முயற்சி
கடிதினில் அழைத்துவா” என்றாள்.

முயன்றால் முடியாதா?

“இயன்றவை அனைத்தும் இன்னமும் செய்து
ஏற்றிட முனைகிறேன், முடிவில்
முயன்றவை யாவும் முறிந்திடில் நீங்கள்
முயலலாம்!” என்றனள் தோழி.
“பயன்தரும் வழியில் முயன்றிட வேண்டும்,
பாங்கியே!” என்றனள் சுலைகா.
“முயன்றிடும் வழியை விளக்கிடில் செய்வேன்”
மொழிந்திட வேண்டினாள் தோழி.

புதிய முயற்சி:

“பொழிலிடை யூசுப் இருந்திடும் போதில்
பொலிவுடை அணிந்திடச் செய்து
எழிலுறும் சேடியர் பலரையே அனுப்பி
இளமையின் உணர்ச்சியை எழுப்ப
விழிகவர் ஆடல், செவிநுகர் பாடல்
விருந்தினால் அவர்மனம் தூண்டி
அழைத்துடன் வந்தால் எண்ணமே வெற்றி
ஆகலாம்!” என்றனள் சுலைகா.

விரித்த வலையிலும் விழவில்லை:

இவ்வழி முறையால் யூசுபை மயக்க
எண்ணியான் முன்னரே செய்தேன்.
அவ்வழி தனிலும் அகப்பட வில்லை.
அழகுறும் தோழிகள் சிலரை
‘எவ்வழி செய்தும் யூசுபின் நெஞ்சில்
இளமையைத் தூண்டிடச் சொன்னேன்.

இவ்வழி தனிலும் இணங்கினு ரில்லை!''
என்றனள் துயருடன் தோழி!

''இன்னமும் வேறு செய்வதற் கென்ன
இருக்கிற'' தென்றனள் சுலேகா!
''உண்மையில் சொன்னுல் ஒன்றுமே இல்லை.
உறுதியாய் இருக்கிருர்'' என்ருள்.
''பெண்மையின் துன்பம் உணர்ந்திடா ஆணைப்
பெருமைக்கா படைத்தனன் இறைவன்?''
என்றனள் சுலேகா. என்னவோ கூற
எண்ணிய தோழிவா யடைத்தாள்!

''சொல்லிட நினைத்ததைச் சொல்லுவாய்'' என்று
தோழியைத் தூண்டினள் சுலேகா.
''சொல்லிடில் அதுபெருந் துன்பமா கிடலாம்
துயரமே அடைந்தது போதும்.
நல்லது என்ருல் மறைத்திடேன்'' என்று
நாத்தடு மாறிடச் சொன்னுள்.
''கொல்லுவ தாயினும் கூறுவாய்!'' என்று
கோரினுள் துடிப்புடன் சுலேகா.

**தோழியின் ஐயம்:**

''அழகினில் மிகுந்த யூசுபை ஆய்ந்தால்
ஆண்மையில் லாதவர் என்றே
பழகிடப் பணித்த பாங்கியர் உரைத்தார்.
பார்த்திடில் எனக்குமவ் வையம்
எழுகிறதரசி!'' என்றனள் தோழி.
இவ்வுரை கேட்டதும் கண்ணீர்
ஒழுகிட சுலேகா, ''உண்மையே யானுல்
ஒப்புவே னிதையும்யான்'' என்ருள்.

**பிணத்தைத் தழுவுவதா?**

''மணமெதும் இல்லா மலரணி வதனுல்
மனமது மகிழுவ தில்லை,

குணமெதும் இல்லாக் கணவனைப் பெற்ருல்
குடி நலம் பெறுவது மில்லை.
கனவென அழியும் அழகினுக் காகக்
காதல்செய் கின்றவர், அறிந்தும்
பிணந்தழு விடவே முயல்பவ ராவர்;
பிழையிது!'' என்றனள் தோழி.

## இதுதான் காதல்:

"ஒளிமிகும் விளக்கின் தீச்சுடர் தழுவி
உயிர்விடும் விட்டிலின் காதல்
தெளிவடை யாத செய்கையோ? தனையே
தியாகம்செய் திடுவதே காதல்!
துளிபெரு வெள்ளம் ஆவதே போன்று
தொடர்ந்திடும் காதலின் பார்வை
களித்திடப் போதும் தோழியே!'' என்று
காதலை விளக்கினள் சுலேகா!

## இந்தக் காதலும் வேண்டுமா?

"பார்க்கவும் விரும்பி டாமல்
படுந்துய ரேனும் சற்றுத்
தீர்க்கவும் உதவி டாமல்,
சிறிதள வேனும் சாந்தி
சேர்க்கவும் முடிந்தி டாமல்,
செய்வதே காத லென்ருல்
பார்க்கவும் ஆகா!'' தென்று
பகர்ந்தனள் வெறுப்பாய்த் தோழி.

## தனிமையில் நஞ்சு; இணைப்பில் தேன்!

"நானெனும் தனிமை கொண்டால்
நஞ்செனக் கொள்ளும் காதல்
தானெனும் எண்ணம் நீக்கித்
தன்னலம் யாவும் போக்கில்
தேனெனச் சுவைக்க லாகும்;
தெரிந்தவர் உணரக் கூடும்.

வீணுப தேசம் வேண்டாம்''
வெடுக்கெனச் சுலேகா சொன்னுள்.

### இரு உள்ளம் இணைந்தால்....?

''இருவரின் இதயத் துள்ளும்
எழுவதே உண்மைக் காதல்;
ஒருவரின் உள்ளம் மட்டும்
ஒப்பிடில் காதல் அன்றே!
இருவரும் இணைந்தால் சொர்க்கம்,
இல்லையேல் நரக மாகும்;
மறுத்திடும் யூசுப் எண்ணம்
மாற்றுவீர்!'' என்ருள் தோழி.

### வாழ்க்கைக் கடலில் காதலே கப்பல்:

''உடல்நலம் பெற்றி ருந்தால்
உயிரதில் உலவக் கூடும்.
உடல்வளங் குன்ற லாயின்
உயிரகன் ருேடு மன்ருே?
கடலெனும் வாழ்விற் காதல்
கப்பலே கரையிற் சேர்க்கும்.
உடனவர் கூட்டிவா!'' என்று
உரைத்தனள் சுலேகா கெஞ்சி!

### வலியக் கிடைத்தால்....?

''வலியவே கிடைக்கும் இன்பம்
மதிப்பினில் குறைந்து போகும்,
வலியநாம் சென்ருே மென்ருல்
மாபெரும் இழிவுண் டாகும்.
வலியவே யூசுப் இங்கே
வந்திடச் செய்வோம்!'' என்று
தெளியவே தோழி சொன்னுள்
சீறிஞள் சுலேகா பாய்ந்து.

### சாதனையற்ற போதனை!

''சாதனை செய்யச் சற்றும்
தகுதியே இலைஎன் ருலும்

போதனை செய்ய மட்டும்
புறப்படு கின்றாய், என்னுள்
வேதனை வளர்க்க வேண்டாம்
விரைவினில் சென்று என்றன்
நாதனை அழைப்பாய்!'' என்று
நவின்றனள் தோழி நோக்கி.

கதிரவன் உதித்தான்:

"எப்படி யேனும் கூட்டி
இங்குடன் வருவேன்'' என்று
செப்பிய படியே தோழி
சென்றனள். சுலைகா நெஞ்சில்
கப்பிய இருளை நீக்கக்
கதிரவன் உதயம் போன்று,
ஒப்பரும் யூசுப் வந்தார்.
ஓடியே காலில் வீழ்ந்தாள்!

உன்னை மறப்பதா, என்னைக் கெடுப்பதா?

தன்னையே மறந்து தாளைத்
தழுவிடும் சுலைகா செய்கை
முன்னமே அறியா யூசுப்
முகத்தினைச் சிவக்க வைக்க,
"உன்னையே உணர்ந்தி டாமல்
உலகமே நகைக்கும் வண்ணம்
என்னையே கெடுப்ப தற்கு
எண்ணினை யோஎன நகர்ந்தார்.

அடிமை என்றால் அநீதியும் செய்வதா?

"எதற்குநீர் தயங்க வேண்டும்?
இங்கெவ ரேனு மில்லை!
இதற்குமேல் துன்பம் தாங்க
எனக்கி யலாது!'' என்றாள்.
"அதற்குயான் என்ன செய்வேன்?
அடிமையாய் விட்ட தென்றால்

எதற்குமே இணங்க லாமோ?''
என்றெதிர் நடந்தார் யூசுப்!

அடிமையன்று; அரசர்!

"எனக்குநீ ரடிமை என்று
ஏவல்செய் திடவா பெற்றேன்?
எனக்குநீ ரரசர் ஆவீர்,
என்னகம் உமது செங்கோல்!
கணக்கிலாத் தங்க முங்கள்
காதலுக் கேகொ டுத்தேன்.
எனக்குநீர், உமக்கென் றென்னை
இறைவனே படைத்தான்!'' என்ருள்.

அழியும் அழகைக் காதலிப்பதா?

"அழிவுறும் அழகுக் காக
அடிமையைக் காத லித்தால்
பழிவரும்!'' என்று யூசுப்
பயந்தனர் கதவைச் சாத்தி
"இழிவிதை அன்றி வேறு
எனக்கிலே'' என்ற வாறு
வழியினை மறைத்து நின்று
வடித்தனள் சுலேகா கண்ணீர்!

ஆசைத்தீயை வளர்ப்பதா?

"நினைத்திடவும் கூடாத இழிசெயலைப்
புரிவதனுல் நெஞ்சின் வேட்கை
அணைத்திடவும் ஆகாது; அல்லாது
பெருநெருப்பாய் அதுவே மாற்றும்.
எனைத்தினமும் வேண்டுவதால் இணங்குதற்கு
இயலாது!'' என்ருர் யூசுப்.
உனைத்தவிர மற்றவரை என்னுள்ளம்
ஒப்பவிலே, உண்மை!'' என்ருள்!

வெறுப்போரை விரும்புவதா?

"எவ்விதத்தில் உங்கள்மனம் எனைமிகவும்
விரும்புவதாய் இயம்பி னீரோ,

அவ்விதத்தில் மிகஅதிகம் எனதுமனம்
நெறியினுக்கு அஞ்சுதென் பேன்!
இவ்விதத்தில் மீண்டுமெனை வற்புறுத்தில்
அமைச்சரிடம் இயம்ப நேரும்.
ஒவ்வுதற்கு மறுப்பவனை வருத்தாதீர்!''
எனயூசுப் உரைக்க லானார்!

### கனவிலேன் வரவேண்டும்?

''யாதொன்று மறியாத என்கனவில்
எதற்காக முன்னர் வந்தீர்?
தீதென்று எனைமறுக்கும் செம்மலே
அதுகொடிய தீமை யன்றோ?
வாதென்று மறுக்காது வாழ்வளிப்பீர்!''
எனச்சுலைகா வருந்திக் கேட்க,
''யாதொன்றும் நானறியேன்; கனவென்னும்
நிலையறியேன்!'' என்றார் யூசுப்.

### அனைத்தும் காதலரே!

''உங்கள்முகம் அல்லாமல் வேறுமுகம்
என்கண்கள் உவப்ப தில்லை;
உங்கள்புகழ் அல்லாமல் வேறுபுகழ்
என்நாவு உரைப்ப தில்லை.;
உங்கள் நினை வல்லாமல் வேறு நினை
வென்நெஞ்சில் உதிப்ப தில்லை.
உங்கள்துணை பெற்றிடவே இங்குவந்தேன்!''
எனச்சுலைகா உருகிச் சொன்னாள்.

### பிறர் மனைவியை நேசித்தால்...?

''துயர்மிகுந்த உங்கள்நிலை உணருகிறேன்
என்றாலும் துயர கற்ற
இயலவில்லை, அமைச்சரது இல்லரசி
ஆய்விட்டீர்! எனது உள்ளம்
அயலொருவர் மனைவியிடம் அன்புசெய்ய
ஒப்புவது அநீதி!'' என்று

இயம்புகின்ற யூசுபின் வாய்பொத்தி
எழில்சுலேகா இயம்ப லானுள்!

**காதலன் வேறு, கணவன் வேரு?**

“வேண்டுவதைத் தருவதற்கு விரும்பவில்லை
என்ருலும்வே ருெருவர்
தீண்டுகின்ற மனைவியெனச் செப்பாதீர்,
என்நெஞ்சைச் சிதைத்தி டாதீர்.
மீண்டுமொரு முறையேனும் அமைச்சரது
மனைவியென விளம்பு வீரேல்
மாண்டொழிதல் நிச்சயமே, சத்தியமே!”
எனச்சுலேகா மனது நொந்தாள்.

**ஆசைக்காக ஆவி இழப்பதா?**

“நெஞ்சிலெழும் இச்சையினை அடக்காமல்
உயிர்துறக்க நினைத்தல் போன்ற
பஞ்சையர்கள் வேறில்லை; இளவரசி!”
எனயூசுப் பகரக் கேட்டுத்,
“தஞ்சம்தர உங்களிடம் கெஞ்சுகிறேன்.
எனக்குதவி தரம றுத்தால்
வஞ்சமுடன் உயிர்பறிக்கும் நஞ்சாவீர்!”
எனச்சுலேகா வருந்திச் சொன்னுள்!

**உணவுக்காக உயிர்கொடுப்பதா?**

“நல்லுணவும் பிணியாளர் உயிர்கொல்லும்
நஞ்சாதல் அறிவேன். ஆனல்,
புல்லுணவுக் காகவுயிர் போக்குதற்குத்
துணிபவரைக் புவியில் காணேன்!
நல்லுணர்வு பெற்றிடுவீர், மாதரசி!”
எனயூசுப் நவிலக் கேட்டுச்
“சொல்லுணவு படைக்கின்ற என்னுயிரே!”
என்றழைத்துச் சுலேகா சொல்வாள்:

**இருவரின் எண்ணங்கள்**

“என்னிதயச் சோலையினில் தாம்விதைத்த
காதல்விதைக் கேற்ற வண்ணம்

என்னுணர்வுக் குருதியினைத் தண்ணீராய்ப்
பாய்ச்சிவளர்த் தின்ப முற்றேன்;
உன்னுடைய காதல்விதை உயர்கனிகள்
தருமரமாய் ஓங்கி, என்றன்
மென்னுடலில் நரம்பாக வேரேரடி
விட்டபின்னே வெட்டப் போமோ?''

யூசுப்

''வாய்மையெனும் மாளிகையின் மதிலுடைக்கப்
பெருமரமே வளரக் கண்டால்
தூய்மையெனும் கோடரியால் பிளந்தெறிவர்,
மாளிகையின் சொந்தக் காரர்!
தாய்மையெனும் அரும்பதவி தாங்குகின்ற
பெண்குலமே தவறு மாயின்
மாய்ந்தொழியும் மனிதநெறி அதற்குதவும்
ஆடவரும் மிருக மாவார்!''

சுலைகா:

''பெண்ணொருத்தி இளநெஞ்சைக் கனவினிலும்
கெடுக்காத பெருமை பெற்றோர்
பொன்னுரைகள் அத்தனையும் புகழுகின்ற
நாவரசே! புவன மெங்கும்
இன்னுரைகள் கூறுபவர் இருக்கின்றார்.
தன்தவற்றை எண்ணிப் பார்ப்பார்.
மன்னுயிரில் அரிதரிது. அவர்கள் மனம்
பெற்றீரேல் மறையும் துன்பம்!''

யூசுப்

''தன்னிலையைப் பெரிதென்னும் அறிவிலிகள்
பிறர்நிலையைச் சற்றும் காணார்;
இந்நிலையில் இருக்கின்ற காரணத்தால்
என்மீது குறைசொல் கின்றீர்.
என்னிலையைச் சிறிதுணர்ந்தால் நும்தவறுக்
கெனையழைக்க எண்ண மாட்டீர்.
நின்னிலையை யானறிவேன் என்றாலும்
தவறிழைக்க நினைக்க மாட்டேன்!''

சுலைகா:

“தாயில்லாப் பிள்ளையெனச் சேயில்லார்
செல்வமெனத் தகுதி யற்ற
வாயில்லா ஊமையென வாழ்வில்லாக்
கன்னியென வருந்தி நொந்தேன்!
நீயில்லாச் சுவனமதைத் தந்தாலும்
ஏற்பதற்கு நினைக்கா என்னைத்
தீயுள்ளே தள்ளிவிட்டு வேடிக்கை
பார்த்திடவோ தீர்மா னித்தாய்?”

யூசுப்:

“இன்பமதைத் துன்பமென, துன்பத்தை
இன்பமென எண்ணு வார்க்கு
விண்ணகத்துச் சுவனமதைக் காட்டிடினும்
அதைநரகாய் வெறுக்கக் கூடும்!
என்னென்ன சான்றளித்தும் ஏற்காது
வாதிப்போர் எதையும் ஒப்பார்!
அன்னவருக் குபதேசம் செய்தவனின்
பயனடைந்தேன் அறிவி ழந்தேன்!”

சுலைகா:

“விரும்பாத உபதேசம் சுவைக்காது
வெறுப்பதற்கு உரிய தாகும்!
இரும்பான சிந்தையினில் இரக்கத்தை
எதிர்நோக்கி இழிவ டைந்தேன்.
கரும்பான என்னிளமை கசப்பான
வேம்பாக்கக் கனவில் வந்து
பெரும்பாவம் புரிந்தின்று மறுபாபம்
செய்வதிலா பெருமை கண்டீர்?

பதைக்கின்ற என்னுள்ளப் புழுக்கத்தை
அறியாமல் படித்த யாவும்
கதைக்கின்ற நாவரசே, நும்கருணை
கிட்டுமெனக் காத்த என்னைச்
சிதைக்கின்ற கொடுந்துணிவு எவ்வாறு
அடைந்திட்டீர் தீண்டி டாமல்

வதைக்கின்ற தம்முகத்தைத் தரைநோக்கிக்
கவிழ்த்ததுஏன்? வாய்தி றப்பீர்!

அன்புமிகும் பெண்முகத்தைக் காணுதற்கும்
நாணுகின்ற அழகு மிக்கோய்!
பண்புமிகும் பெண்மையினைப் பாழடித்து
வலியவந்தும் பதுங்க லாமோ?
உண்மையினில் என்தோழி உரைத்தபடி
நின்ஆண்மை ஒழிந்த தாமோ?
அண்மையினில் வந்திடுவீர், அன்புடனே
பேசிடுவீர்! அதுவே போதும்!

என்னகத்தின் ஏந்தலரே, எதற்காக
அப்பாலே இருக்க வேண்டும்?
பெண்ணகத்தைக் கவருகின்ற ஆண்மையிலை
என்பதற்கா பீதி கொண்டீர்?
நின்னகத்தில் சிறுஇடமே தந்தாலும்
போதுமதில் நிலைத்தி ருப்பேன்!
மண்ணகத்தில் என்சுவனம் உன்னகமே
என்பதைநீர் மறக்க வேண்டாம்!

பொன்னடியை முத்தமிடும் புண்ணியத்தைத்
தந்தாலும், பொலிவு மிக்கப்
புன்னகையைக் கொண்டெனது வேட்கையினைப்
போக்கிடினும், புவியி லுன்றன்
பெண்ணடிமை யாக்குவித்து நின்பணியை
ஏவிடினும் பெருமை கொள்வேன்!
என்துயரைப் போக்கிடுவீர், இரங்கிடுவீர்,
கடைக்கண்ணால் என்னைக் காப்பீர்!

"சிந்தையினில் செய்கையினில் இன்றுவரை
மற்றவரைத் தீண்ட வில்லை;
சொந்தமனை யாளெனவே அமைச்சரஜீஸ்
என்கரத்தைத் தொட்ட தில்லை;
விந்தையென எண்ணுதீர்; நும்மீது
சத்தியமாய் விளம்பு கின்றேன்.
வந்தனைகள் செய்கின்றேன். வாய்விட்டுக்
கெஞ்சுகிறேன். வாரீர், வாரீர்!"

யூசுப்:

நெஞ்சுருக்கும் சுலேகாவின் வார்த்தைகளால்
குனிந்ததலை நிமிர்த்தி யூசுப்
"கெஞ்சுகின்ற உங்கள்மொழி மிஞ்சுகின்ற
என்துயரைக் கிளறிற் றல்லால்
கொஞ்சுகின்ற இச்சையினைத் தரவில்லை,
உறுதியையும் குலைக்க வில்லை!
அஞ்சுகின்ற எனைச்செல்ல அனுமதிப்பீர்!"
எனக்கூறி அப்பால் சென்றார்!

சுலேகா:

பயந்தகலும் யூசுபின் வலக்கரத்தை
இளவரசி பாய்ந்து பற்றிப்
புயந்தழுவத் துடிதுடித்தாள். 'வெடுக்'கென்று
கையிழுத்தார், புலியாய்ச் சீறி
"நயந்தமுறை அத்தனையும் யானுரைத்தும்
எனைச்சிறிதும் நாட வில்லை;
இயன்றவழி இனியும்மைப் பலவந்தம்
செய்வதுதான்" என்று சொன்னாள்!

யூசுப்:

"நீதிக்கும் அஞ்சாமல் நேர்மைக்கும்
அஞ்சாமல் நினைத்த வாறு
சாதிக்கத் துணிந்தக்கால் சாவுக்கும்
துணிந்திடுவேன் தவற்றிற் கொப்பேன்!
பேதித்த நெஞ்சத்தால் பிழைசெய்ய
முனைந்தீரே பின்னும் என்பால்
வாதித்தல் முறையல்ல வழிவிடுக!"
எனயூசுப் வணங்கிக் கேட்டார்!

சுலேகா:

"வாழ்வுக்கு அழைத்தக்கால் வாராமல்
சாவுக்கு வலியச் செல்லும்
கீழ்புத்தி படைத்தோரே, ஏதுக்கு
நீரிந்தக் கிலிய டைந்தீர்?
வாழ்வுக்கு அழைக்கின்றேன் சாவுக்கு
அழைத்தீரேல் வருவேன் யானும்

தாழ்வுக்கு இலக்காயின் உம்மோடு
பலியாகத் தயங்கேன்!'' என்றாள்.

யூசுப்:

''பாபத்திற் காளாகி உள்ளத்தைப்
பாழாக்கிப் பண்புள் ளோரின்
சாபத்திற் குள்ளாகிச் செத்தக்கால்
இறையோன்முன் தப்ப லாமோ?
கோபத்திற் குரித்தாக்கிக் கொடுநரகின்
உணவாக்கும் கொடிய சாவின்
ஆபத்தை அறிந்திலையோ! அரசகுலத்
திருமகளே! அறிவாய்!'' என்றார்.

சுலைகா:

''இன்றைக்குச் சுவர்க்கத்தில் மகிழ்ந்திடுவோம்,
நாளைக்கு இரண்டு பேரும்
சென்றிடுவோம் நரகுக்கு அங்கேயும்
மனமொத்துச் சேர்ந்தி ருப்போம்.
ஒன்றித்த காதலர்கள் இருப்பிடமே
நற்சுவனம்! உமது தெய்வம்
தண்டிக்க வந்தாலும் மன்னிப்பை
வேண்டிடுவோம் தருவான்!'' என்றாள்.

யூசுப்:

''மன்னிப்பைப் பெற்றிடலாம் என்கின்ற
மமதையினால் மனந்து ணிந்து
பண்ணுகின்ற பாபத்தை மன்னிக்க
இறையவனா பரிவு கொள்வான்?
எண்ணுகின்ற இழிநினைவை இன்றோடு
விட்டிடுவீர்!'' என்று யூசுப்
கண்சிவந்து சுலைகாவைத் தள்ளிவிட்டுக்
கதவருகில் கடிது சென்றார்!

பருவச் சபலம்

மூடிய கதவைத் திறந்திட யூசுப்
முயன்றிடும் போதினில் சுலைகா

ஓடினள், யூசுப் மலரடி வீழ்ந்து
ஓலமிட் டுருகிட லானுள்!
வாடிய முகத்தை நோக்கிய யூசுப்
வாலிபச் சிந்தையில் உணர்ச்சி
ஓடிட, உறுதி கலங்கிட உள்ளம்
ஒப்பிடத் தூண்டின நொடியில்!

அன்புடன் சுலேகா எழிலுடல் நோக்கி
அரைக்கணம் தனைமறந் திருந்தார்.
தன்னருந் தவமே பலித்ததாய்ச் சுலேகா
தலைநிமிர்ந் தவர்முகம் கூர்ந்து
"என்னரும் உயிரே, அண்ணலே உங்கள்
இதயமே இளகிட இறைவன்
இன்னருள் புரிந்தான்; என்துயர் களைந்தான்"
என்றிரு விழிகளைக் கவிழ்த்தாள்!

சந்திரன் தனையே தொட்டதும் கதிரோன்
தன்முகம் குளிர்வது0 போன்று
சுந்தரச் சுலேகா தன்னிரு பாதம்
தொட்டதும் யூசுபும் குளிர்ந்தார்!
சிந்தையில் பொங்கும் மகிழ்வினுள் மீண்டும்
சிரம்குனிந் திறையருள் புகழ்ந்தாள்.
அந்தவார்த் தையினுல் தீமிதித் தவராய்
அதிர்ச்சியாய் அகன்றனர் யூசுப்!

இறைவனின் பெயரைக் கேட்டதும் யூசுப்
இன்னுடல் நடுங்கிட, உணர்வால்
கறைபடும் நினைவைக் களைந்திடத் தன்முன்
கனவெனத் தந்தையர் யாக்கூப்
குறைபடும் முகத்தால் பெருவிரல் கடித்துக்
கொடுஞ்செயல் தடுப்பது போன்று
விரைவினில் தோன்ற நோக்கிய யூசுப்
மிரண்டவர் போலவே விழித்தார்!

பெரும்பிழை புரிந்தோர் நீதியின் முன்னர்
பீதியாய் நிற்பதைப் போன்று

---

0 சூரிய கிரணத்தைக் குறிப்பிடுவது.

உருகிடும் யூசுப் செயலினை அறிந்து
ஒன்றையும் உணர்ந்திடாச் சுலைகா
"வருந்துதல் ஏனோ, வள்ளலே!" என்றாள்.
வாய்திறக் காமலே யூசுப்
பெருக்கிடும் கண்ணீர் துடைப்பதைக் கண்டு
பெருந்திகில் கொண்டனள் சுலைகா!

"உங்களின் கண்ணீர் ஒழுகிடில் என்றன்
உதிரமே ஒழுகுவ தொக்கும்.
உங்களின் உள்ளம் வருந்திடில் என்றன்
உயிரகன் றொழிவதை யொக்கும்!
திங்களை மறைக்கும் முகிலென உங்கள்
திருமுகம் மறைப்பது எதுவோ?
இங்கெவ ருள்ளார் இயம்புவீர்!" என்று
இறைஞ்சினாள் யூசுபை நெருங்கி!

"ஆசையின் வலையில் வீழ்ந்திடும் சமயம்
அன்புடன் இறையவன் காத்தான்!
வேசையின் நெஞ்சும் வெறுப்பவர் தம்மை
விரும்பிடக் கூசிடும். எனினும்
பாசமென் றுரைத்து வேசையும் வெட்கும்
பலவந்தம் செய்திடத் துணிந்தாய்.
நீசரின் வழியில் நெருங்கிடேன்" என்று
நீள்விழி சிவந்திட மொழிந்தார்!

"நாக்கினை அடக்கிப் பேசுவாய்!" என்று
நாகமாய்த் தன்தலை நிமிர்த்தி
நோக்கிய சுலைகா, "வேசையென் றென்னை
நுவன்றிட எப்படி நினைத்தாய்?
தேக்கிய அன்பால் நோக்கிய என்னைத்
தாக்கிட முனைந்திடும் உன்றன்
வாக்கினை இனியும் சகித்திடேன்"' என்றாள்.
"வழிவிடு போகிறேன்!" என்றார்.

"தப்பிடும் வழிகள் எதுவுமே இல்லை.
தாமத மின்றியே என்னை
ஒப்பிடல் வேண்டும், இல்லையேல் யானே
உம்முடல் தழுவிட முனைவேன்

எப்படி யேனும் இன்றுமை அடைவேன்;
 இதற்குயிர் இழப்பினும் சகிப்பேன்!''
இப்படிச் சுலைகா செப்பிய படியே
 யூசுபை நெருங்கியே அணைத்தாள்!

புலியினை உண்ணப் புள்ளிமான் முயலும்
 புதுமையாய் யூசுபைச் சுலைகா
வலுவினில் அணைக்கும் போதினில் தோழி
 வாசலின் கதவுகள் திறந்து
கிலியுடன் ''அமைச்சர் வருகிறார்!'' என்றாள்.
 கேட்டதும் யூசுபு உதறிப்
புலியிடம் தப்பும் மானெனப் பாய்ந்தார்.
 பொற்கொடி சுலைகாவும் பாய்ந்தாள்!

ஓடிடும் யூசுப் ஜிப்பாவைச் சுலைகா
 ஒருநொடிப் போதினில் பற்றிக்
கூடிட இழுத்தாள். திமிறினார் யூசுப்.
 கிழிந்தது பின்புற ஜிப்பா.
தேடிய செல்வம் இழந்தது போன்று
 செயலிழந் திருந்தனள் சுலைகா!
மாடியின் வாயில் அருகினில் அமைச்சர்
 மலைப்புடன் நின்றிடக் கண்டாள்!

''பிடியுங்கள் அவனைப் பிடியுங்கள்'' என்று
 பேரொலி எழுப்பிய சுலைகா
''கொடியவன் என்னைக் கெடுத்திட முயன்றான்,
 கூறுங்கள் தண்டனை!'' என்றாள்.
அடியுடன் அமைச்சர் நம்பிடவில்லை,
 ஆயினும் யூசுபை விளித்து
''நடந்தவை, என்ன? கூறுக!'' என்றார்
 நாவடைத் திருந்தனர் யூசுப்.

ஊமையாய் யூசுப் நிற்பதைக் கண்டு
 உன்னத வாய்ப்பெனக் கொண்டு
''மாமதி மேவும் அமைச்சரே! உங்கள்
 மனைவியைக் கெடுத்திடத் துணியும்
தீமதி கொண்ட இவனுக்குச் சிறையா
 சித்திர வதைவழங் குவதா?

தாமத மின்றிக் கூறுவீர்!'' என்று
தயங்கிடா துரைத்தனள் சுலைகா.

பெரும்பழி தம்மேல் சாற்றிடும் சுலைகா
பேச்சினைக் கேட்டதும் யூசுப்
"ஒருபிழை புரியேன். உண்மையில் அவளே
உறுதியாய் என்னையே அழைத்தாள்.
மறுத்ததற் கென்றே பெரும்பழி சுமத்த
மனந்துணிந் தனள்!''எனச் சொன்னார்.
அருகில்வந் தொருவர் "ஆய்வதே நன்று,
அமைச்சரே!'' என்றுரைத் திடுவார்.

"அவரது ஜிப்பா முன்புறம் கிழிந்தால்
அரசியின் வார்த்தையே உண்மை;
அவரது ஜிப்பா பின்புறம் கிழிந்தால்
அவருரைத் திடுவதே உண்மை.
இவரிடை எவர்சொல் மெய்யெனக் காண
இவ்வழி சிறந்தது!'' என்றார்.
அவரது முடிவை ஒப்பிய படியே
அமைச்சரே யூசுபைப் பார்த்தார்!

பின்புற ஜிப்பா கிழிந்ததைக் கண்டு
"பெண்களின் சதிமிகப் பெரிது''
என்றவ ருரைந்துச் சுலைகாவை நோக்கி,
"யாவுமுன் சதி''யெனக் கூறி
அன்புடன் யூசுப் பக்கமே திரும்பி,
"அடுத்தவர் அறிந்திடா வண்ணம்
பண்புடன் இதையே மறைத்திடு!'' என்று
பயந்திடும் சுலைகாவைப் பார்த்தார்!

"உன்னுடைப் பாவம் கொடியது சுலைகா
உணர்ந்துநீ மன்னிப்புப் பெறுவாய்
இந்நிலை பிறரே அறிந்திடில் எனக்கே
இழி''வெனக் கூறிய அமைச்சர்,
உன்னத யூசுப் துயர்முகம் பார்த்து
"ஒன்றையும் நினைத்திடேல்!'' என்று
தன்னிலை நினைக்க நெஞ்சமே வலிக்கத்
தனிமையை நாடினா ரமைச்சர்!

அருங்குண அமைச்சர் அகன்றபின் சுலேகா
அழகுறும் யூசுபை நெருங்கிப்
"பெருங்குணம் படைத்த யூசுபே! என்றன்
பெரும்பிழை பொறுத்திடல் வேண்டும்!
அருகினில் அமைச்சர் வந்ததா லும்மேல்
அநீதியைச் சுமத்தினேன்!" என்ருள்.
உருகிடும் நெஞ்சால் பெருகிடும் கண்ணீர்
உருண்டிட நகர்ந்தனர் யூசுப்!

நடந்ததை எண்ணி வருந்திய சுலேகா
நகர்ந்திடும் யூசுபை நோக்க,
உடைந்தன கண்ணீர் முத்துக்கள், உள்ளம்
ஊற்றென உணர்ச்சியைப் பெருக்க
அடைந்திட அமைத்த ஆசையின் கோட்டை
அமைச்சரின் வருகையால் வெடித்தே
இடிந்ததை எண்ணி இயந்திரம் போன்றே
ஈரிரு நாட்களைக் கழித்தாள்!

# விருந்தும் வியப்பும்

## இயல்—39

நன்மையெனில் ஒன்றிரண்டு நாட்கள்வரை பேசி
நாவடைத்துத் தம்வழியை நாடுகின்ற மாந்தர்,
புன்மையெனில் பன்முறையும் காலம்பல பேசிப்
பொய்களையும் மெய்ப்படுத்தும் 'புண்ணியமே' செய்வர்!
உண்மையினில் ஒன்றைப்பத்து நூருய்ஆக்கு வித்து
ஊரறியச் செய்வதிலே ஊக்கம் காட்டு கின்ற
பெண்களிடை அதிவிரைவில் யூசுப்–சுலே காவின்
பேச்செழுந்து காற்றெனவே பரவியது எங்கும்.

பிறருடைய சிறுமைகளைப் பெரிதுசெய்து என்றும்
பேசுவதிற் பெருமைபெறும் புல்லர்களின் நாவின்
திறமுடைய கற்பனையில் யூசுப்–சுலே காவின்
செயல்கள்பல வடிவினிலே உருவெடுத்துக் காம
நிறமடைந்து அங்குமிங்கும் நிலவுவதைக் கேட்டு
நிலேகுலேந்து அமைச்சருளம் குன்றியது வெட்கி!
துறவடைந்த மனநிலேயில் தனிமையினில் சுலேகா
துயரடைந்து மனமுடைந்து சோர்வடைந்து போனுள்.

### ஊர்வாய் உளறுகிறது

"ஆண்மையற்ற அமைச்சரையே மணந்ததனுல் சுலேகா
அடிமையிடம் அன்புசெய்தாள்!" என்றுசிலர் கூற
"மேன்மையுற்ற குலமெனினும், அழகின் போதை தந்த
வேட்கையினுல் அறிவிழந்தாள்!" என்றுசிலர் கூறக்
"காண்பவரை யாரென்று ஆய்ந்தறிந்தி டாமல்
காதலென்று காமமுற்ருள்!" என்றுசிலர் கூற
"ஈனமிதைப் போலிலேயே எப்படிவாழ் கின்ருள்?"
என்றுசிலர் இழிவுரைத்து எங்கும்பேச லாஞர்.

### கேடடைந்த காரணம்

"ஆடவரின் பார்வையினில் அரிவையரை விட்டே
ஆசைக்கனல் மூட்டிவைத்து இருவரையும் வாட்டும்
மூடச்செயல் நீக்கிடுவோம்; சுலைகாவென யாரும்
மோகவெறி கொண்டிடாமல் காத்திடுவோம்!" என்று
நாடலையும் புதல்வியரை வீடடக்கி வைத்து
நகரமெங்கும் தந்தையர்கள், எழில்சுலைகா நெஞ்சம்
கேடடைந்த சூழ்நிலையைக் கேலிசெய்ய லானர்.
கேள்வியுற்று சுலைகாமனம் துடிதுடிக்க லானாள்.

### சுலைகாவின் யோசனை!

பொருளுடைமை புகழுடைமை பொறுப்புடைமை யாவும்
பொருந்தியுள பலகுடும்பத் தலைவியரைக் கூட்டி,
அருளுடைமை அறிவுடைமை அழகுடைமை சேர்ந்த
ஆணழகர் யூசுபினை அவர்களிடம் காட்டி
இருளடைந்த தன்னிலையில் அவர்களையும் ஆக்கி
யூசுபெழில் காண்பவர்கள் தனைமறந்து நெஞ்சம்
உருகுவது இயற்கையென உணரச் செய்வதென்று
உளத்தினிலே திட்டமிட்டு அமைச்சரையும் கேட்டாள்!

எவ்விதமும் தம்மிழிவை நீக்கிவிடில் போதும்
எனும்நினைவால் பெண்களுக்குத் தனிவிருந்து வைக்க
ஒவ்வியதும் அமைச்சரஜீஸ் யூசுபுக்கும் கூறி
ஒப்பவைத்துக் கிடைக்கரிய உணவுப்பொருள்சேர்த்தார்!
செவ்வியநற் குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, பெற்ற
செல்வியர்கள், முதியவர்கள் அனைவருமாய்ச் சேர்ந்தே
இவ்விருந்து உண்பதற்கு வருகைதர வேண்டி
இருதினங்கள் முன்னரே அழைப்பனுப்ப லானாள்.

### விருந்தின் பெருமை!

பூமணக்கும் பொழிலினிடை முழுமதியின் நிலவு
பொழிகின்ற நாளினிலே முன்னிரவு தன்னில்
தேமணக்கும் பல்லுணவை நாவினிக்கச் செய்து
சிறப்புடனே பாங்கியர்கள் பரப்பிவைக்கும் போதில்

பாமணக்கும் இன்னிசையைப் பாடகியர் பாட
பாதைநின்று வருபவரைப் பணிந்திருவர் அழைக்க
மாமணப்பெண் போல்சுலைகா மகிழ்ச்சிமுகம் காட்டி
மனமுவந்து விருந்தினரை உபசரிக்க லானாள்.

பாட்டியரும் பேர்த்தியரும், தாயும் பெண்ணு மாகப்
பலவயது மாதர்களும் வந்திடவே, தம்மைக்
கூட்டியதின் காரணத்தை எவரும்அறி யாமல்
குறுகுறுக்கும் எண்ணமுடன் உணவுமுன் அமர்ந்து
பாட்டினிமை செவிநுகரப் பரவசமே கொண்டார்.
பரப்பிவைக்கும் பல்லுணவை உண்ணும்ஆவ லுற்றார்.
தீட்டியதோர் கத்தியொடும் செழுங்கனிஒவ் வொன்றைச்
சேடியர்கள் அனைவருக்கும் தனித்தனியே வைத்தார்!

புதுமணமே மிகும்கனியைப் புதுமையாக நோக்கிப்
"புவியிலெங்குக் காய்த்தபழம் புகன்றிடுவீர்!" என்று
பொதுவினிலோர் முதுகிழவி சேடியினைக் கேட்கப்
"பொறுத்திருங்கள் விரைவினிலேஅறியலாகு"மென்றாள்.
இதுபொழுதே உடனெழுந்து எல்லோரையும் பார்த்து
எழில்சுலைகா ஒருகனியைத் தன்கரத்தி லேந்தி
"எதுவுமிதன் சுவைக்கிணையோ இந்தப் பழமே
இந்துஸ்தானில் காய்த்த"தென்று இனிமையாகச்
சொன்னாள்!

"பெயரிதற்கு எதுவுமுண்டோ?" என்றொருத்தி கேட்கப்
"பெருமை என்ற பொருளுடைய மாம்பழம்என்றி தற்குப்
பெயருளது" எனச்சுலைகா கூறிடவே அவர்கள்
பிரியமோடு "மாம்பழமே, மாம்பழமே!" என்று
பெயருரைத்துத் தங்கள் நாவு இனிக்கவைத்த போதில்
பேரழகர் யூசுபங்கு தலைகவிழ்ந்து வரவே
"உயரியநற் கனியிதையே கத்தியினா லறுத்து
ஒப்பிலாத சுவையறிவீர்!" என்றாள் சுலைகாவே!

தலைநிமிர்ந்து யூசுபெழில் திருமுகத்தை நோக்கித்
தமைமறந்து கனிமறந்து விருந்தினரே என்ற
நிலைமறந்து யூசுபிடம் பார்வைதனை நிறுத்தி
நிகரிலாத அவரழகில் நெஞ்சம்குதித் தாடி

அலையெறிந்து யூசுபினை அவரவருக் கேற்ப
அதிசயித்து ஆய்ந்தனரே அருட்கவியே போல
நிலைகுலைந்த சுலைகாவும் தன்விழியை யூசுப்
நெஞ்சினிடைப் பதியவைத்து நினைவு மிழந்தாளே.

**கனியை அறுக்க, கையை நறுக்கினர்**

"எழில்நிறைந்த இவரைப்பெற்ற புண்யவதி எவளோ?
என்றுதாய்மை அடைந்தமாதர் எண்ணி ஏங்க லானார்.
"விழிநிறைந்த இவர்மனைவி யாகும் பேறு பெற்று,
வெற்றிபெற்ற பெண்ணெவளோ?" என்று கன்னிப்
பெண்கள்.
விழிசுரந்த துயர்மறைத்து நெஞ்சம் விம்மலானார்!
விரும்பியதை மறந்துவிட்ட சுலைகா நினை வுற்று
விழிசுழற்றி அனைவரையும் பார்த்துக் "கத்திகொண்டு
விரைவினிலே மாம்பழத்தை வெட்டியுண்பீர்" என்றாள்.

விருந்தினர்கள் அனைவருந்தன் யூசுபினை நோக்கி
வியப்படைந்து மனம்மயங்கி விட்டதையு ணர்ந்து
வருந்தினவ ளாய்ச்சுலைகா மீண்டும்மீண்டும் கூவி
"மாம்பழமே புசித்திடுவீர்" என்றுகத்த லானாள்.
விருந்தினர்கள் தம்விழியை யூசுபிடம் வைத்து,
விருப்பமின்றி மாம்பழத்தை நறுக்கிட முனைந்து
சருக்குடைய கத்தியினால் கைவிரலை அறுத்துக்
கனிரசமாய்த் தங்குருதி உறிஞ்சிடலா னாரே!

விரைவுடனே பெண்கள்சிலர் யூசுபையே நெருங்கி
மேலுங்கீழு மாகநோக்கிக் கண்களையே விரித்து
"இறைவனாணை உரைத்திடுவோம், இவர்மனித ரல்லர்
எழிலினிலே இவரைப்போன்று எவரும்கண்ட துண்டோ?
குறையறியா வானவரே, சிறிதும் ஐயமில்லை.
கூறிடுவோம் சத்தியமாய்!" என்றுசொல்ல லானார்.
"நிறைஅழகே பெற்றஇவர் பார்வையினில் நீங்கள்
நிலைகுலைந்து மயங்குவதோ" எனச்சுலைகா கேட்டாள்!

"கண்கவரும் அழகினிலே கருத்துடைய பெண்கள்
கட்டழகன் இவரழகில் மயங்குவது வியப்பா?"

என்றொருத்தி கேட்டிடவே, யாவரையும் நோக்கி
"இவரின்பெயர் யூசுபென்று அறிந்திடுவீ ராயின்
முன்பொருத்தி இவரெழிலில் மயங்கியதற் காக
மோகவெறி கொண்டவளாய் இகழ்ந்தபிழை காண்பீர்.
பெண்ணொருத்தி செயலினுக்குப் பிழைகள்கற்பித் தோரே
பெரும்பிழையைச் செய்வதுவோ?" எனச்சுலைகா
கேட்டாள்,

காதலா, கடுஞ்சிறையா!

இவர்பெயரே யூசுபென அறிந்ததும் ஒருத்தி
இவரெழிலே மயக்கிவிடும்!'! என்று ஒப்ப லானுள்!
"இவரிடமே காதலுற்று இரவுபக லாக
ஏக்கத்தினுல் அழுதழுது தூக்கமும் இழந்தேன்.
அவரிடமே வலியச்சென்று யானழைத்த துண்மை
அமைச்சரங்கு வந்ததனுல் தப்பியோடி விட்டார்.
இவரினிமே லென்விருப்பம் மறுத்துவிடில் சிறையில்
இன்னலுறத் தள்ளிடுவேன்' எனச்சுலைகா சொன்னுள்.

இன்னமும் சுலைகாமனம் தன்னையே விரும்பி
ஏங்குவதைக் கண்ட யூசுப் இறைவனையே நோக்கி
"பெண்ணிவளின் கொடுஞ்சதியில் சிக்கிடாமல் காக்கும்
பெருஞ்சிறையே நன்மையாகும்!" என்றிறைஞ்ச லானுர்.
அண்மையினில் மறைந்திருந்த அமைச்சரஜீஸ் பாய்ந்து
"அவ்விதமே சிறையில்வைப் பேன்!"என்றபடி வந்தார்.
"உண்மையினில் இருவருக்கும் இதுநலமே!" என்று
உரைத்தனரே விருந்தினர்கள் உளமுடைந்தாள் சுலைகா.

சிறையைக் காட்டிப் பயமுறுத்தினுல் யூசுப் பணிந்துவிடலாம் என்று நினைந்தாள் சுலைகா. காம வலையில் சிக்குவதை விடச் சிறைக்குச் செல்வதையே யூசுப் விரும்பினுர். இருவர்தம் ஒழுக்கத்தையும் பாதுகாப்பதற்கு நிரபராதியான யூசுபைச் சிறைப்படுத்தினுர் அமைச்சர். "யூசுபைப் பார்த்துக்கொண்டிருந்தாலாவது அமைதியாக இருக்குமே!" என எண்ணிப் பலநாட்கள் ஏங்கினுள் சுலைகா. ஒருநாள் நள்ளிரவில் தன் தோழியை அழைத்துக்கொண்டு யூசுபைக் காணுவதற்காகச் சிறைக்குச் செல்லத் துணிகிருள் சுலைகா.

---

# மூன்று உள்ளங்கள்

## இயல்—40

காவலரும் ஏவலரும் கண்ணுறங்கும் போதில்
காதலரைக் காணுதற்குத் தோழியையும் கூட்டி
ஆவலுடன் எழிலரசி சிறைபுகுந்து ஆங்கு
அறையறையாய் யூசுபினைத் தேடிப்பார்க்க லானாள்.
யாவருமே தூங்குகையில் இறையருளை வேண்டி
யூசுபங்கே வணங்குவதைச் சுலைகா கண்டு கொண்டாள்.
தேவர்களும் இவரழுகுக் கடிமையாவர் என்று
சிந்தையிலே நினைத்தபடிச் செயலிழந்து நின்றாள்.

ஏதும்துயர் அற்றவராய் யூசுபுடன் வேறு
இருவரங்கு உறங்குவதைப் பார்த்ததும் சுலைகா
"யாதுகுற்றம் செய்ததனால் இங்கிவர்கள் வந்தார்?
என்பதை அறிந்துவிடில் இன்றேஅவர் போன்ற
தீதுசெய்து யானுமிங்கு வந்திடுவேன்!" என்று
சிந்தைநொந்து தோழியிடம் விந்தையாகச் சொன்னாள்.
"போதுமின்று பார்த்தது புறப்படுவீர்!" என்று
புரியும்படிச் சைகைகாட்டி அழைத்தனளே தோழி.

"கண்களினால் கண்டுவிடில் போதுமாடி தோழி,
கதவருகில் அவரழைத்துக் கருணைசெய்யக் கேட்போம்!
பெண்களிலே என்னைப்போன்ற பெருந்துயரம் கொண்டோர்
பிறக்கவில்லை என்பதவர், உணரும்படிச் செய்வோம்.
புண்களிலே துன்பப்புழு வளர்ந்து புரையோடிப்
பொன்னுடலைத் துளைத்திடுமுன் மருந்தளிக்கச்
சொல்வோம்!"
கண்களிலே நீர்சுரக்கச் சுலைகா கூறும்போதில்
கைதிகள் இருவருமே துடித்துஎழக் கண்டாள்.

விழித்தவர்கள் பார்த்திடுவார் என்றஅச்சத் தாலே
விரைவினிலே தோழியுடன் தூண்மறைவில் சென்றாள்.

விழித்தவர்கள் கிலிபிடித்து யூசுபினை நோக்கி
"விந்தையான கனவுகண்டோம் எனமுகம் வியர்க்க
மொழிந்தபடி யூசுபிடம் விளக்கம்கேட்க லானார்.
மௌனமுற்ற யூசுபிடம் மீண்டொருவன் "திராட்சை
பிழிந்துரசம் எடுத்திடவே கனவுகண்டேன்'' என்றான்.
பின்னொருவன் பெருந்திகிலால் இதழ்நடுங்கிச்
சொல்வான்

"என்தலையில் ரொட்டிச்சுமை எடுத்தேகும் போதில்
எங்கிருந்தோ பலபறவை பறந்தென்மேற் பாய்ந்தே
என்தலையின் 'ரொட்டி'களைக் கொத்திக்கொத்தி யுண்டே
ஏகிடவே கனவுகண்டேன்!'' என்றவ னுரைக்க
"உன்கனவு பெருந்துன்பம்; அவன்கனவோ இன்பம்,
உண்மையினைச் சொல்வதெனின் உள்ளம்துடிப்பையே!''
என்றபடி முந்தியவன் தனையூசுப் நோக்கி
"இறையவனுன் சிறைக்கதவு திறந்தானே!'' என்றார்.

"என்னுடைய கனவின்பயன் யாதெனினும் நீங்கள்
இயம்பிடுவீர், எத்துயரும் ஏற்றிடுவேன்!'' என்று
இன்னொருவன் கேட்டவுடன் மனம்வருந்தி யூசுப்
"இன்றுதயம் நீதூக்கில் தொங்கிடவே நேரும்.
உன்னுடலைப் பிணக்கழுகும் பருந்தும் கொத்தி யுண்ணும்.
உண்மையிது நிச்சயமாய் நடந்துவிடும்!'' என்று
சொன்னவுடன் அன்னவனே மயங்கித்தரை வீழ்ந்தான்.
துயர்மறந்து முந்தியவன் யூசுபைப் புகழ்ந்தான்!

மறைவிருந்து அத்தனையும் பார்த்தசுலே காவின்
மனத்தினிலே தன்கனவின் நினைவெழவே ஏங்கிச்
சிறையடைந்த கைதிகளின் கனவின்பயன் கூறும்
திறமடைந்த யூசுபுக்கு என்கனவே பொய்மைக்
கறையுடைய தாகியதோ?' என நினைக்க லானாள்.
"காவலர் விழித்திடுமுன் போவோ''மெனத் தோழி
உரைத்திடவே மனக்குறையாய்ச் சிறையினைக் கடந்தாள்.
உறங்கியவர் விழித்திடவே கூவியது சேவல்.

கனவு பலித்தது!

காலைக்கதிர் கீழ்த்திசையில் கண் விழித்த போது
ககனவெளி எங்கணுமே கனகஒளி வீசச்

சோலைமலர் சிரித்திடவே, முரசொலியைக் கேட்டுத்
தூக்கிலிடும் சேவகர் சிறையினுள் புகுந்து
சீலமுயர் யூசுபுள சிறைக்கதவு திறந்து
திகிலடைந்து கிடந்தவனை இழுத்தேக லானூர்.
வேலிணைத்த கோல்பிடித்த அரசரது வீரன்
விரைந்துவந்து மற்றவனின் விடுதலையைச் சொன்னுன்.

தன்னுடைய விடுதலையை முன்னமே உரைத்த
தகைமிகுந்த யூசுபினைக் கைதிநோக்கும் போதில்,
"உன்னுடைய மன்னரிடம் உரைக்கமுடிந் தாலே
ஒருபிழையும் புரிந்திடாத யூசுப்சிறைக் குள்ளே
பெண்ணுடைய பெருஞ்சதியால் சிக்கியுள்ள உண்மை
பேசிடுவாய் என்களங்கம் போக்கிடுவாய்!" என்ருர்.
அன்புடைய கைதியவன், "அப்படியே சொல்வேன்;
அஞ்சிடாதீர்!" என்றபடிச் சிறையகன்று சென்ருன்.

தன்னுடைய தகுதியையும் கௌரவமும் காக்கத்
தவறறியா யூசுபைச் சிறையிலிட்ட அமைச்சர்
புண்ணடைந்த நெஞ்சுடனே பன்னெடுநாள் போக்கிப்
புத்திபெற்றுச் சுலைகாமனம் திருந்தாதென எண்ணி
என்னசெய்வ தென்றறியா நிலையினிலே ஆண்டும்
ஏகவிட்டுத் தன்னிதயம் வேகவைத்து வாழ்ந்தார்.
தன்னருமைக் காதலரைச் சிறையினிலே பூட்டித்
தமைப்பிரித்த விதியை நொந்து சுலைகாஏங்க லானுள்.

[நிரபராதியான யூசுபைத்தொடர்ந்து சிறையில் வைக்கும்படி நேர்ந்ததைக் குறித்து அமைச்சரஜீஸ் வருந்தினார். கைக்குக் கிட்டிய காதலர் தன் கண்ணி யில் சிக்கவில்லையே என்று சுலைகா ஏங்கினாள். தான் களங்கமற்றவர் என்பதை உலகிற்கு நிரூபித்தாக வேண்டுமே என்று கலங்கினார் யூசுப். இதனிடையே பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒருநாள் எகிப்தின் அரசர்—ராயன்—வலீத் ஒரு கனவு கண்டார். அவர் தாம் கண்ட கனவைத் தம் சபையில் அறிவிக்கின் றார்.]

# திரை விலகியது

## இயல்—41

"கருத்தில் தெளிந்து கலைபல நெஞ்சில்
நிறுத்தும் திறமை நிறைந்த சபையீர்!

கருத்துடன் கேளீர், கண்டேன் கனவு
பருத்துக் கொழுத்த பசுக்கள், ஏழை

இளைத்து மெலிந்த ஏழு பசுக்கள்
வளைத்துப் புசித்துக் களித்திடக் கண்டேன்.

தழைத்துச் செழித்த தானியக் கதிரும்
மழையிலாப் பயிரின் வாடிய கதிரும்

தனித்தனி ஏழு தங்கிடக் கண்டேன்.
கணித்திட இயலேன் கனவின் கருத்தை

உங்களில் எவரும் உரைத்திட முடிந்தால்
இங்குடன் சொல்வீர்" என்றார் வேந்தர்!

"எண்ணச் சிதைவால் எழுந்ததே யன்றி
உண்மையில் எதையும் உணர்த்துவ தல்ல!"

என்றார் சபையில் இருந்தவர் சிலரே!
"நன்றாய் ஆய்வீர், நல்லுரை சொல்வீர்!"

என்றார் மன்னர். இவ்வுரை கேட்டு
"ஒன்றே சொல்வேன் உணவுப் பிழையால்
தோன்றலாம் கனவு தோன்றலே" என்று
சான்றவர் போன்று சாற்றினார் ஒருவர்.
அமைச்ச ரஜீஸு அரசரை நோக்கி
"எமக்கிது கூற இயன்றிடா தென்றார்.
அனைத்தும் கேட்டு அப்பால் நின்றவன்
நினைவில் யூசுப் நிழலுருத் தோன்றத்
தன்னுடைக் கனவின் தகுபொரு ளுரைத்த
நன்னய யூசுப் நவின்றிடக் கூடும்.
அவரினை யன்றி அரசரின் கனவை
எவரெடுத் துரைப்பார் என்றவோ ரெண்ணம்
வளர்ந்திட மன்னரை வணங்கிச் சொல்வான்;
"தளர்ந்திட வேண்டாம் சற்றே என்னைச்
சிறைக்கு அனுப்பிடில் தெளிவுடன் கனவை
உரைத்திட முடியும் ஒப்புக" என்றான்.
"எப்படிச் சிறையில் இதையறிந் திடுவாய்?
ஒப்பிடச் சொல்வாய் உடனே!" என்றார்.
"சிறையினில் முன்னர் திராச்சை பிழியும்
முறையினில் கனவு ஒருமுறை கண்டேன்,
விரைவினில் அதனால் விடுதலை என்று
சிறையினில் ஒருவர் தெளிவுடன் உரைத்தார்.
அவரிடம் சென்றால் அரசரின் கனவை
எவரும் வியந்திட இயம்புவார்!" என்றான்.
"உடனே செல்வாய்! உணர்ந்து மீளல்
கடனாய்க் கொண்டு கடிதில் வருவாய்!"
என்றார் மன்னர். இன்முகம் காட்டிச்
சென்றான் விரைந்து சிறையை நோக்கி,
சிந்தை சுவைக்கத் திராட்சை பிழிந்து
தந்திடும் பணியாள் சாற்றிய தெண்ணி
மந்திரி முதலாய் மன்னரும், அரச
தந்திரி பலரும் தவித்து நோக்கினர்.
மற்றவை ஆயும் மனவள மின்றி

முற்றிலும் அவன்விடை பெற்றிடத் துடித்தனர்!
ஒருசிறு நேரம் உருண்டபின் அவனே
பெருந்திகி லுடனே திரும்பிடக் கண்டார்.

வந்தவன் தயங்கி வாயடைத் திருக்க,
மந்திரி கனவின் மர்மம் யாதென

அறிந்தனை யாநீ அவனெது உரைத்தான்
தெரிந்ததைச் சொல்வாய் சீக்கிரம்!'' என்றார்

"அறிந்தது உண்மை யாயினும் அதனைப்
புரிந்திட உரைத்தால் பெருந்துய ராகும்''

என்றவ னுரைக்க, "எமக்கது தெரியும்
நன்றவ னுரைத்ததை நவின்றிடு!'' என்று

மன்னவர் கேட்க மற்றவர் மலைக்க
நின்றவன் தயங்கி நிகழ்த்திட லானான்.

"ஏழு ஆண்டுகள் இணைந்தாற் போன்று
பாழும் பஞ்சம் படர்ந்திட லாமாம்,

சூழும் இதனால் துயர்படு முன்னர்
வாழும் வழியை வகுத்திட இறைவன்

ஆண்டுகள் ஏழின் முன்னரே அதனைத்
தூண்டினன் கனவில். தொடர்ந்திடும் பஞ்சம்

நீக்கிடக் களஞ்சியம் நிறையத் தானியம்
தேக்கிடல் வேண்டுமாம், சிறிதே அயர்ந்தால்

பஞ்சமும் பிணியும், பட்டினிச் சாவும்
மிஞ்சிடும் என்றே விளக்கினார்!'' என்றான்.

குடிகளின் வளத்தைக் குலைத்திடும் வண்ணம்
பிடித்திடும் பஞ்சப் பெயரைக் கேட்டதும்

தோன்றலர் உள்ளம் துயரால் துடிக்கச்
சான்றநல் லமைச்சர், தளபதி மற்றும்

ஆன்றவர் மக்கள் அனைவரும் தவித்தார்.
"வீண்துயர் வேண்டாம் வேந்தரே, அவனைச்

சிறைக்கு அனுப்பிச் செப்பியோன் தன்னை
விரைவில் அழைத்து வினவுவோம்!'' என்று

உரைத்தார் அமைச்சர், ஒப்பினார் மன்னர்.
சிறையினை நோக்கிச் சென்றான் அழைக்க!

சென்றவன் மீண்டும் திரும்பினன் தனியாய்க்
கண்டதும் மன்னர் கடுஞ்சின முற்ருர்.

கொற்றவர் கோபக் குறிப்பினைக் கண்டு
மற்றவ ரெல்லாம் மனத்திகி லுற்ருர்.

“எங்கவன் சொல்வாய்?” என்ருர் மன்னர்.
இங்கவர் வருவதை ஏற்றிட வில்லை!

களங்கம் துடைத்துக் கடுஞ்சிறை நீக்கில்
விளங்கிடச் செய்ய விரும்பி வருவேன்.

கொற்றவர் முன்னே குற்றம்செய் தவனுய்
நிற்கவும் விரும்பேன் நிச்சயம் என்ருர்,

எப்படி வேண்டியும் என்னுரை மறுத்தார்!”
இப்படி அவனே இயம்பிடும் போதில்

குறுக்கிட் டமைச்சர் கோபமாய் எழுந்து
“மறுத்திடும் அவன்பெயர் அறிந்தனை என்ருல்

சொல்லுவாய்!” என்ருர் துரிதமாய் “அவரின்
நல்லபேர் யூசுப் நல்லொழுங் குடையோர்!”

என்ருன் கேட்டதும் இடிவிழுந் தவராய்
நின்ருர் அமைச்சர். நிமிர்ந்தார் மன்னர்.

“அவனது குற்றம் அறைவீர்” என்ருர்,
“இவனென் அடிமை” என்ருர் அமைச்சர்.

“அடிமையே என்ருல் அவனையே சிறையில்
கொடுமையாய்த் தள்ளல் கூடுமோ?” என்ருர்.

“தன்னையே சிறையில் தள்ளிடு மாறு
என்னையே கேட்டான்!” என்ருர் அமைச்சர்.

“விருந்தினில் கைவிரல் அறுத்ததின் காரணம்
அறிந்திட அமைச்சரை அவரது மனைவியை

விருந்தினில் கலந்த பெண்களை வினவிடில்
ஒருபிழை புரியா உண்மையை உணரலாம்

என்ருர் யூசுப்!” என்ருன் பணியாள்;
“இன்றே கேட்போம்!” என்ருர் மன்னர்.

பெண்களை அழைத்து உண்மையைக் கேட்டார்.
“கண்களை அளித்துக் காத்திடும் இறைவன்

அனைத்தும் அறிவான், அவரிடம் தவறே

திணையள வாயினும் தெரிந்தோ மில்லை!''

என்றனர் பெண்கள் இவ்வுரை கேட்டு
நின்றிடும் சுலைகா நெடுமூச் செறிந்தாள்!

மன்னவர் சுலைகா மதிமுகம் நோக்கி
''என்னிடம் மெய்யே இயம்புவீர்'' என்றார்.

இனியும் உண்மையை இருளிலும் மறைக்க
நினைக்கவும் முடியா நிலையினை உணர்ந்தாள்!

''அவரை விரும்பி அழைத்தவள் யானே
அவரிடம் பிழையென அணுவும் காணேன்''
என்றாள் சுலைகா எழுந்தார் மன்னர்.
''சென்றே யூசுபைச் சீக்கிரம் அழைத்து
இங்கே வருவீர்!'' என்றார் அமைச்சரை.
அங்கே இருந்தவர் அனைவரும் சுலைகா

தலைகவிழ்த் திருக்கத் தைமூஸ் புதல்வி
நிலைகுலைந் ததையே நினைத்து வருந்தினர்!

மறைத்தவை யாவும் மன்னர் வரைக்கும்
அறிந்திட நேர்ந்ததை அமைச்சர் நினைக்க

நெஞ்சம் துடித்தது நினைவு சுழன்றது!
வெஞ்சிறை யடுத்து விரைவில் யூசுபை

விடுதலை செய்து மீட்டார் சபைக்கு.
கெடுமதி கொண்டோர் கீழ்நிலை அடையும்

உண்மையைச் சபையோர் உணர்ந்திட லானார்.
அண்மையில் நெருங்கி அரசரை நோக்கி

''என்திரை விலக்கிய ஏந்தலே பெண்கள்
கண்சிறைக் கஞ்சிக் கடுஞ்சிறை புகுந்தேன்!

கொற்றவ ராயினும், கற்றவ ராயினும்
பற்றிடும் சூழ்ச்சியைப் பலித்திட இறைவன்

விடுவது இலையென விளக்கிடு வதற்கே
நடந்தவை அறிந்திட நவின்றேன்! அன்றியும்

எனைவிலைக் கேற்ற எஜமா னருக்கே
கனவிலும் துரோகம் கருதிலேன் என்பதை

வெளிப்படை யாக்க விரும்பினேன்!'' என்று
தெளிவுடன் யூசுப் செப்பிட லானார்!

இருந்தவ ரெல்லாம் யூசுபின் எழிலை
அருந்தினர்; அவரின் அமிழ்தெனும் பேச்சில்
பொருந்திடும் உண்மைப் பொலிவைக் கண்டனர்;
வருந்திடும் சுலேகா பெரும்பிழை ஆய்ந்து
கனைத்தவ ராகக் கடுமையாய் அரசர்
"அனைத்தையும் நீயே ஆக்கினை!" என்று
மொழிந்தவர் சுலேகா முகத்தைப் பார்த்தார்.
வழிந்திடும் கண்ணீர் மறைத்திட லானுள்!
"எல்லாம் சுலேகா இழிசெயல் என்ற
சொல்லால் வீணே துன்புறுத் தாதீர்!
எல்லாம் இயக்கும் இறைவனின் எண்ணம்
அல்லால் எதுவும் அசைவது மில்லை!
தன்னையே உயர்வாய்ச் சாற்றுவர் போன்று
என்னையே உயர்வாய் இயம்பிட மாட்டேன்.
நாயனின் நல்லருள் நமக்கிலை யாயின்
தீயவை ஏற்கத் தூண்டிடும் இச்சை
மனிதனின் உடலில் மலர்ந்திடும் உணர்ச்சி
புனிதமும் அழித்துப் புரிந்திடும் பாபம்.
எனவே எனையான் தூயவன் என்று
கணமும் நினையேன் கவல!" என்று
சுருக்கமாய் யூசுப் சொல்லிய யாவும்
உருக்கமாய்க் கேட்டு உளமகிழ் வோடு
"நம்மிடம் நீரே நன்மதிப் புற்றீர்.
உம்மிடம் யாமே நம்பிக்கை யுற்ருேம்!"
என்ருர் மன்னர், இருந்தவ ரெல்லாம்
ஒன்ருய் இதையே ஒப்பிட லானுர்!
மதிமிகும் அறிஞரும் மன்னரும் யூசுபைத்
துதிசெயும் போதினில் சொல்லரும் மகிழ்வினுல்
சுலேகா துயர்முகம் சுடர்மதி யானது,
குலையா இன்பமே கொண்டதாய்க் காதலர்
திருமுகம் ஒருகணம் திரும்பி நோக்கினள்.
மறுகணம் அவள்முகம் மணமகள் நாணமாய்க்
கவிழ்ந்தது தரையினில் கண்டனர் அனைவரும்.
குவிந்தது அமைச்சரின் சோதிலா நெஞ்சமே!

நின்றிடும் யூசுபை நிமிர்ந்து நோக்கிய
அண்ணலர், "யூசுபே அமருக!" என்றதும்
"உங்களின் நாட்டினில் உணவுப் பஞ்சமே
தங்கிடும் என்றுயான் சாற்றிய உண்மை

ஒப்பிஎன் வார்த்தையை உறுதியாய் நம்பிடில்
செப்பிடும் ஓர்வழி செம்மலே ஆய்குவீர்!"

என்றிடும் யூசுபை ஏந்தலர் நோக்கியே
"நன்றென ஒப்புவோம் நவிலுக!" என்றனர்.

"பஞ்சமே நாட்டினில் பரவுமுன் தானியம்
மிஞ்சவே சேர்த்திடில் மிடிமையை நீக்கலாம்!

கலக்கிடும் பஞ்சமே கடந்திடத் தேசியக்
களஞ்சியம் காத்திடும் கடமையை என்னிடம்

தந்திடில் நிச்சயம் தனியவன் கருணையால்
வந்திடும் பஞ்சமே வளராது செய்திட

இயன்றிடும்!" என்றுடன் யூசுபு இயம்பினர்.
"முயன்றிடும் நோக்கமே முற்றிலும் ஒப்பினோம்.

வலியவே பொறுப்பினை வரித்திடும் உம்மிடம்
நலிவையே நீக்கிட நம்முடையத் தானியக்

களஞ்சியம் காத்திடும் கடமையைத் தந்தனம்
விளக்கிய வண்ணமே விரட்டுக பஞ்சமே!

என்றனர் அரசரே! ஏற்றனர் யூசுபே!
நன்றென யாவரும் நல்லுரை கூறினர்!

கூட்டினர் மக்களைக் கொன்றிடும் பஞ்சமே
நாட்டிலே தோன்றிடும் கேட்டினைச் சாற்றினர்.

வாட்டிடும் பஞ்சமே வந்திடு முன்னரே
நாட்டினில் தானியம் கூட்டிட வேண்டினர்!

விளைந்திடும் தானியம் முழுவதும் மன்னரின்
களஞ்சியம் சேர்ப்பதைக் கடமையாய் ஆக்கினர்!

உயிரினைக் காக்கவே உணவெனும் உண்மையைப்
பயின்றிட வேண்டினர். பசியினைத் தாங்கிட

முயன்றிடக் கூறினர், முன்னினும் உண்பதை
இயன்றிடும் வரையிலும் குறைத்திட ஏவினர்!

'உழைத்திடத் தயங்குவோர் உண்பது, இறைவனுக்
கிழைத்திடும் அநீதியென் றெண்ணிட'க் கூறினர்!

"கற்றவ ராயினும் கொற்றவ ராயினும்
மற்றவ ருழைப்பினில் வாழ்ந்திட முயல்வது

கொள்ளையென் றிறைவன் எள்ளுவ தாகிடும்
கள்ளரை விடஇவர் கடையரே!" என்றனர்.

நாட்டினர் யாவரும் நம்பினர் யூசுபை.
கேட்டினை நீக்கிடக் காட்டிய அவர்வழி

ஊக்கமாய் உழைத்தனர், உறுதியாய்த்
தேக்கினர் தானியம் களஞ்சியம் சேர்த்தனர்!

# அஜீஸின் மரணம்

## இயல்—42

தன்னடிமை யூசுபிடம் சுலைகா கொண்ட
 தவருன நட்பதனைத் தன்னைப் போன்றே
மன்னவரும் தளபதியும் மற்று முள்ள
 மந்திரியும் சேவகரும் அறிந்த தாலே
தன்னுடைய கண்ணியமும் தகுதி யாவும்
 சரிந்ததனுல் அமைச்சரஜீஸ் மனமு டைந்து
தன்கடமை மறந்தவராய்த் துறவி போன்று
 தனிமையினில் செயலிழந்து சவமாய் வாழ்ந்தார்!

தம்முடைய தலையினிலே பெருஞ்சு மையைத்
 தாங்குகின்ற உடல்வலிமை படைத்த மாந்தர்
தம்முடைய நெஞ்சமுழத்தும் சிறுசு மையே
 தாங்குதற்கு இயலாமல் தலைக விழ்ப்பார்!
இம்முறையில் அமைச்சரஜீஸ் இதயத் துள்ளே
 எழிலரசி சுலைகாவே சுமையாய் விட்டாள்.
எம்முறையில் ஆய்ந்தாலும் சிறிதும் மாற்ற
 இயலாமல் படுக்கையிலே சாய்ந்து விட்டார்!

தனியொருவர் தவறிழைப்பின், அவர்கு லத்தை—
 சந்ததியை, சார்ந்தவரை, சமுதா யத்தின்
தனிப்பெருமை அனைத்தையுமே தகர்ப்ப தேபோல்
 தன்மனைவி சுலைகாவின் தவறி ஞலே
தன்னருமை பெருமையெலாம் மக்கள் முன்ஞல்
 தகர்ந்துவிட்ட பெருங்கொடுமை எண்ணி எண்ணிப்
புண்ணடைந்த அமைச்சரஜீஸ் உள்ளத் துள்ளே
 புரையோடும் அவமானம் சொல்லப் போமோ?

தான்பெற்ற பெருஞ்செல்வம் இழந்த போதும்
 தனைப்பெற்ற தாய்தந்தை இழந்த போதும்

தான்பெற்ற ஒருமகவை இழந்த போதும்,
தன்னுயிராம் காதலியை இழந்த போதும்,
தான்பெற்ற பெருமையினை, தன்மா னத்தைச்
சற்றேனும் இழப்பதற்குச் சகிப்பா ருண்டோ?
தான்பெற்ற இல்லாளின் தவற்றிற் காகத்
தகைமைமிகும் அமைச்சரஜீஸ் உயிர்கொ டுத்தார்!

மாடத்தில் வீற்றிருக்கும் மன்ன ரின்பால்
மந்திரியின் மரணத்தைக் கூறச் சொல்லிக்
கூடத்தின் மத்தியிலே தனது நெஞ்சம்
குமுறிடவே யூசுபு உலாவ லானார்!
நாடெங்கும் அமைச்சரஜீஸ் மரணச் செய்தி
நவின்றிடவே பேரரசர் ஆணை யிட்டார்;
வீடெங்கும் தம்தேசக் கொடியைத் தாழ்த்தி
வெகுதுயரம் கொண்டனரே மிசுரின் மக்கள்!

யூசுபின் போதனை:

முதலமைச்சர் அஜீஸுடலை அடக்கம் செய்து
முகம்கவிழ்ந்து நின்றிருக்கும் மக்கள் நோக்கி
"இதுவரையில் எவருடைய துயரத் தாலும்
இறந்தவர்கள் உயிர்பெற்று எழுந்த தில்லை!
கதறுகின்ற நம்குரலால் இறையைச் சேர்ந்தோர்
கண்விழித்து வாழ்ந்திடவும் நினைத்த தில்லை!
பதறுவதாற் பயனுண்டோ? முதல மைச்சர்
பண்புடைமை பெற்றிடுவோம்!" என்றார் யூசுப்.

அரசரின் அறிவிப்பு:

"ஆற்றலுடன் மெய்யன்பும் அமைந்த யூசுப்
அறிவித்த அறநெறியை உணர்ந்த மக்காள்!
கூற்றுவனின் விலைப்பட்ட முதல மைச்சர்
குடிகளுக்குச் செய்தபணி மறக்கப் போமோ!
ஏற்றமிகும் யூசுபை விலைக்கு வாங்கி
இந்நாட்டின் கொடும்பஞ்சம் தணிப்ப தற்குப்

போற்றுமுயர் தம்பதவி தனையும் யூசுப்
பெற்றிடவென் றிறந்தனரோ?'' என்ருர் மன்னர்!

துன்பத்தில் இன்பம்:

"இன்றுமுதல் முதலமைச்சர் பொறுப்பு யாவும்
யூசுபிடம் ஒப்படைத்தோம் இந்த நாட்டில்
என்றுமவர் இப்பதவி ஏற்றி ருப்பார்!''
எனமன்னர் இயம்பியதும் மக்க ளெல்லாம்
"நன்று,நன்று!'' எனத்துயரம் மறந்து சொன்ஞர்.
நற்கனவு பலித்ததுபோல் சுலைகா கொண்டாள்!
சென்றனவே பலதிங்கள். யூசுப் நாளும்
திரட்டினரே தானியங்கள் களஞ்சி யத்தே!

---

# கடமையும் காதலும்



## இயல்—43

அருகினில் நெருங்கும் பஞ்சம்
அகற்றிடத் தானி யங்கள்
பெருக்கிடும் வழியை ஆய்ந்து
பெருந்தகை யூசுப் நிற்க.
உருகிடும் விழியி னோடு
உணர்ச்சியின் வடிவ மாகக்
கருகிடும் மலராய், கண்டோர்
கலங்கிடச் சுலைகா வந்தாள்!

பன்னெடு நாட்க ளாகப்
பார்த்திடா சுலைகா இன்று
தன்னிடம் வருதல் கண்டு
தயக்கமில் லாது யூசுப்
"என்னிடம் எதுவும் பேச
எண்ணிடில் எனைய ழைத்தால்
நின்னிடம் வருவேன் யானே
நேரிலேன் வந்தீர்?" என்றார்!

"உங்களின் ஏவ லாற்ற
உயிருனைச் சுமக்கு மென்னைத்
தங்களை ஏவச் சொன்னால்
தரணியே நகைத்தி டாதோ?
திங்களைச் சூழ்ந்த மங்குல்
திரையினை விலக்க வேண்டி
உங்களை அடைந்தேன்!" என்றாள்.
உள்ளமே தவிர்த்தார் யூசுப்!

"என்றனுக் கியலா ஒன்றை
ஈந்திட வேண்டு வீரேல்

நன்றென வழங்கப் போமோ;
நடுநிலை நின்று ஆய்வீர்!''
என்றிடும் யூசுப் நோக்கி
''இரக்கமே அன்றி வேறு
ஒன்றையும் உம்மி டத்தே
உவந்திட வில்லை!'' என்றாள்.

''இச்சைக்கு அடிமை யாகி
ஏங்கிடும் இதயத் துன்பம்
நிச்சயம் உணரு கின்றேன்!
நேர்மைக்கும் அஞ்சு கின்றேன்!
இச்சையை அடக்கி யாண்டால்
இன்னலும் இழிவும் நீங்கும்
எச்சரிக் கின்ற தேபோல்
எண்ணமே மாற்று!'' என்றார்.

''அன்பினுக் காக ஏங்கி
அழிவுறும் பெண்ணுக் குங்கள்
அன்பதைத் தந்தீர் என்றால்
அழியுமோ நேர்மை?'' என்றாள்.
''பண்பினை அன்புக் காகப்
பலியிடல் பாப மாகும்.
என்பதை யுணர்வாய்!'' என்று
யூசுபு இயம்ப லானார்.

''அன்பினை வெற்றி கொள்ள
அறிவினுக் காகா தென்றால்
பண்பினுக் கியலு மாமோ,
பாசமும் பாப மாமோ?
முன்பெனைப் பிறர்ம னைவி
என்பதாய் வெறுத்த நீங்கள்
இன்றெனை மறுப்ப தேனோ
இயம்புவீர்!'' என்று கேட்டாள்.

அந்நியர் மனைவி யாக
அன்றுநீ ிருந்த தேபோல்
இன்றுமென் மனைவி யாக
இல்லையே உரிமை யற்ற

என்னிடம் உறவு கொள்ள
எண்ணுதல் பாச மன்று.
பெண்ணிடம் நாண மற்றால்
பெரும்பிழை நேரும்!'' என்றார்.

"அன்பினில் விளைந்த ஆசை
அறியுமோ வெட்கம்?'' என்றாள்.
"பண்பினில் வளர்ந்த நெஞ்சம்
பலியிட விரும்பா'' தென்றார்!
"கன்மனம் கொண்ட ஆண்கள்
காதலை மதியார்!'' என்றாள்;
"பெண்மனம் சபல மூற்றால்
பேயென மாறும்'' என்றார்.

"உண்மையாய் அன்பு செய்யும்
ஒருத்தியின் உள்ளம் ஏங்க
எண்ணுவோர் ஆண்மை யற்றோர்
என்பதை அறிந்தேன்!'' என்றாள்.
"பெண்ணுடல் பெற்று விட்டால்
பெண்களாய் ஆக மாட்டார்;
பெண்மையை இழந்து விட்டோர்
பேசிடும் பதுமை!'' என்றார்.

"ஆணுடல் பெற்றோ ரெல்லாம்
ஆடவர் ஆவ துண்டோ?
ஆண்மையும் நெஞ்சில் வேண்டும்!
அன்புசெய் ஆவல் வேண்டும்!
மேன்மையும் அழகும் பெற்றும்
வீணிலே அழிக்கும் யாரும்
ஆண்மையை அடைந்தோ ரல்லர்.
அதிசயப் பிறவி!'' என்றாள்.

"அறிவழிக்கும் ஆத்திரமேன் அடைகின்றாய்?''
எனயூசுப் அன்பாய்க் கேட்க
"பரிவழிக்கும் பாத்திரமாய் நடிக்காதீர்!''
எனச்சுலைகா பணிந்து சொன்னாள்.
"முறுவலிக்கும் இச்சையினை முறியடித்து
வாழ்ந்திடவே முனைவாய்!'' என்றார்.

"உருகவைக்கும் நல்லழகை உமக்களித்த
இறைவனுக்கு உரைப்பீர்!" என்றாள்.

"கண்கவரும் வெளியழகில் காதலுறும்
பேதமையைக் களைவாய்" என்றார்.
"விண்ணழகும் மண்ணழகும் நின்னழகும்
என்னழகும் வீணோ?" என்றாள்.
"வண்ண எழில் காண்பதற்கே அல்லாமல்
உண்பதற்கு வாய்க்கா" தென்றார்.
"உன்னெழிலை அருகிருந்து காணுகின்ற
உரிமைதர ஒப்பும்!" என்றாள்.

"என்னுறுதி குலைத்திடவே உனையருகில்
அனுமதியேன்!" என்றார் யூசுப்.
"பெண்ணுறுதி சிதைத்திடவே கனவில்வரல்
பிழையலவோ!" சுலைகா கேட்டாள்!
"தன்னுறுதி மாற்றுகின்ற கண்களினைப்
பெயர்த்தெறிதல் சரியாம்!" என்றார்
"என்னிரண்டு கண்களையும் பெயர்த்தாலும்
என்னிதயம் இருப்பீர்!" என்றாள்.

"ஏதுரைத்த போதினிலும் வாதிடுவோர்
ஏற்காரென் றின்றுணர்ந்தேன்;
தீதுறைந்த சிந்தையிலே ஓதுகின்ற
நீதிகளும் சிதையக் கண்டேன்!
வாதுசெயும் மாதரசே, அதிவிரைவாய்
என்நினைவு மறப்பீர்!" என்றார்.
காதடைத்துக் கண்கலங்கி நின்றஅவள்
அவரடியில் கதறி வீழ்ந்தாள்!

செய்திடுதல் அறியாது நின்றிருந்த
யூசுபு சிலையாய்க் கண்ணீர்
பெய்தபடி அசைவற்ற நிலையானார்.
அந்நேரம் பெருமூச் சொன்றை
எய்தபடிப் பேரரசர் ஆங்குவந்து
கைபிடித்து "யூசுப்!" என்றார்.
மெய்யுணர்வு பெற்றவராய் யூசுபு
விழிதுடைத்து வருந்தலானார்!

"உண்மை நிலை யானறிவேன், உங்களது
மனத்தூய்மை உணரும் வண்ணம்
அண்மையினில் திரைமறைவில் நின்றிருந்து
அத்தனையும் அறிந்தேன். யாரும்
உண்மையினி லுங்களைப்போற் பெண்மையினை
வெற்றிகொள்ளும் உறுதி கொள்ளார்!"
என்றரசர் கூறிடவே நின்றிருந்த
யூசுபு இயம்ப லானார்.

"என்னுடைய தந்தையரின் சோதரியாள்
எனை வளர்த்து இன்ப முற்று
அன்புகொண்ட காரணத்தால் கள்வனென
அறிவித்து அடிமை கொண்டாள்!
என்னுடைய தந்தையர் தம் மெய்யன்பால்
சோதரர்க்கும் எதிரி யாகி
இன்னலுற்று இங்குவந்தும் சுலேகாவின்
பேரன்பால் இழிவுற் றேனே!

கறைபெற்ற வாழ்வுபெறக் கருதாமல்
சுலேகாவின் கண்ப டாமல்
சிறைபட்டு வாழ்ந்தனை முறைகெட்ட
தீயவனாய்ச் செப்பக் கேட்டுத்
திரையிட்ட என்தூய்மை மெய்ப்பிக்க
விடுதலையைத் தேடிப் பெற்றுக்
குறைபட்ட சுலேகாவின் முறையீட்டுக்
குள்ளானேன் கோவே!" என்றார்.

"மற்றவரின் மனைவியரைப் பெற்றெடுத்த
மாதாவாய் மதிக்கும் உள்ளம்
பெற்றதனால் பேரழகி சுலேகாவின்
பிடியில்விழாப் பேறு பெற்றேன்!
கற்றதனால் வெற்றிபெற இயலாத
உடலுணர்வைக் கடவுள் அச்சம்
பற்றியதால் முற்றுமதை வெற்றிபெற
இயன்றதெனப் பகர்வேன் மன்னா!"

"நிலையற்ற உலகினிலே நிலைபெற்று
வாழ்ந்திடவே நினைத்தல் போன்று

நிலையற்ற அழகினிலே மயக்குற்று
நேர்மையினை நீக்கி டாமல்
விலைமிக்க வாய்மைதனைத் தலைதந்தும்
காத்திடவே விருப்ப முற்றேன்;
அலைமிக்க நெஞ்சினுக்கு அணைகட்டி
நெறிகாத்தேன் அரசே!'' என்றார்.

## மன்னர் வேண்டுதல்

சத்தியமே தவருத தன்னமைச்சர்
யூசுபின் தகைசேர் வார்த்தை
அத்தனையும் செவியேற்ற பேரரசர்
வியப்புற்று அருகில் சென்று
''இத்தனைக்கும் தளராது எண்ணத்தைச்
சிதைக்காத இதயம் பெற்ற
உத்தமரே யானென்று உரைத்திடுவேன்
சுலைகாவை உவப்பீர்!'' என்ருர்.

''மனமற்ற ஆண்பெண்கள் மணம்பெற்ருல்
பிணம்போன்று வாழ நேரும்;
மனமற்ற கன்னியரில் மனமொத்த
விதவையரே மேன்மை யாகும்!
மனமொப்பும் காதலரின் மணம்தந்த
இல்லறமே மணக்க லாகும்.
குணமிக்க என்னமைச்சர்! சுலைகாவை
மணம்செய்து கொள்வீர்!'' என்ருர்.

## சுலைகாவின் நாணம்

இருமனமும் ஒருமனமாய் இணைப்புற்ற
திருமணத்தின் ஏற்றம் சாற்றிப்
பெருமனமாய்த் தனக்குதவும் பேரரசர்
வார்த்தையினைப் பெரிதும் போற்றி
நறுமணமே நுகர்ந்தவளாய்ச் சுலைகாவே
மனம்மகிழ்ந்து நாணி நின்ருள்.
''திருமணமே இன்றைக்கே செய்திடுவோம்!
எனமன்னர் திரும்பச் சொன்னுர்.

மண்ணாளும் வேந்தர்மொழி எந்நாளும்
போலன்றி மதித்து யூசுப்
முந்நாளில் காண்பவரின் கண்ணாளும்
எழிலரசி முகத்தைப் பார்த்தார்!
இந்நாளில் தன்னிணைவால் உருக்குலைந்த
சுலைகாவின் இதயம் ஆள
விண்ணாளும் நாயகனும் ஒப்புகிறான்,
எனத்தேர்ந்து விருப்பம் கொண்டார்!

## யூசுப்—சுலைகா திருமணம்

"இறைநியதி எப்படியோ அப்படியே
சுலைகாவை ஏற்பே" னென்று
மறைபுகழும் யூசுபு மனமொப்பிக்
கூறியதை மன்னர் கேட்டுத்
"தரைபுகழும் காதலராய்ச் சான்றாகும்
தம்பதியாய்த் தகைமிக் கோராய்
நிறைபுகழைப் பெற்றிடுவீர்!" எனக்கூறித்
திருமணமும் நிகழ்த்தி னாரே!

வையகத்து மாந்தருடன் வானகத்து
விண்ணவரும் வாழ்த்துக் கூற,
மெய்யகத்து ஆசியுடன் யூசுபினைக்
கைபிடித்து மேன்மை பெற்று
உய்வடைந்த சுலைகாவின் உயர்வுமிகு
வாழ்வினுக்கு உவமை கூறத்
தெய்வமொழிக் கல்லாது சிறுவன்மொழிக்
கியலாது செகத்துள் ளோரே!

———

106969.

## அப்துற்-றஹீம்

அவர்களின்

# அறிவுக் கருவூலங்கள்

வாழ்க்கையில் வெற்றி
வாழ்வைத் துவங்கு
சுபிட்சமாய் வாழ்க!
முன்னேறுவது எப்படி?
வாழ்வது ஒரு கலை
வியாபாரம் செய்வது எப்படி?
வழிகாட்டும் ஒளி விளக்கு
எண்ணமே வாழ்வு!
மகனே! கேள்
அன்புள்ள தம்பி!
வாழ்வின் வழித்துணை
கவலைப்படாதே!
வழுக்கலில் ஊன்றுகோல்
விளக்கேற்றும் விளக்கு
இல்லறம்
உன்னை வெல்க!
இளமையும் கடமையும்
மன ஒருமை
மனத்தை வெல்லுவாய்! மனிதனுகுவாய்!!
நெடுங்காலம் வாழ்வது எப்படி?
வாழ்வின் ஒளிப்பாதை
வள வாழ்விற்கு வழி
அகிலத்தின் அறிவுத் திரள்!
படியுங்கள் ! சிரியுங்கள் !!
படியுங்கள் ! சுவையுங்கள் !!
படியுங்கள் ! சிந்தியுங்கள் !!